www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

ஜூன் 2008
ரூ. 7.00

## தொழில் வளர்ச்சி:

## இராமதாசின் கவர்ச்சிவாதம்! கருணாநிதியின் காரியவாதம்!



படிப்பகம்

www.padippakam.com

# “தனியார்மயம் - தாராளமயத்தை ஒழித்துக் கட்டுவோம்! உயரும் விலைவாசியை வீழ்த்துவோம்!”

## — புரட்சிகர அமைப்புகளின் மே நாள் அறைகூவல்!

ஆபாச சினிமாப் பாடல்கள் ஒலிபெருக்கிகளில் எங்கும் எதிரொலிக்க, அனைத்துலகப் பாட்டாளி வர்க்க போராட்ட நாளான மே நாளை, இன்னுமொரு கேளிக்கை நாளாக்கிப் போலி கம்யூனிஸ்டுகளும் ஓட்டுப் பொறுக்கிகளும் கூத்தடித்துக் கொண்டிருந்த நிலையில், “பன்னாட்டுக் கம்பெனிகளையும் அம்பானி - டாடா - பிர்லாக்களையும் அடித்து வீழ்த்துவோம்! தனியார்மயம் - தாராளமயத்தை ஒழித்துக் கட்டுவோம்! உயரும் விலைவாசியை வீழ்த்த வேறு வழி இல்லை; இல்லவே இல்லை!” என்ற முழக்கத்துடன் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் மறுகாலனியாதிக்க எதிர்ப்பு அரசியல் ஆர்ப்பாட்ட நாளாக மே நாளைக் கடைபிடித்தன.



ஓசூரில்...



கடலூரில்...


சென்னையில்...

“விலைவாசி உயர்வுக்குக் காரணம் யார்?” என்ற சிறு வெளியீடு மற்றும் மே நாள் அறைகூவலைக் கொண்ட துண்டறிக்கைகளோடு, இவ்வமைப்புகளின் தோழர்கள் தமிழகமெங்கும் வீச்சாகப் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டனர். வீடுகள், தெருக்கள், கடைவீதிகள், பேருந்துகள், புறநகர் ரயில் பெட்டிகள் அனைத்தும் பிரச்சார மேடைகளாகின. தனியார்மயம் - தாராளமயத்துக்கு எதிரான புரட்சிகர அரசியல், மே நாளன்று இவ்வமைப்புகள் நடத்திய பேரணி. பொதுக் கூட்டம், கலைநிகழ்ச்சிகளில் எதிரொலித்தது.

பின்னலாடை, ஆயத்த ஆடை, சாயப்பட்டறைத் தொழிலாளர்கள் நிறைந்த **திருப்பூரில்,** கோவை - ஈரோடு மாவட்டங்களைச் சேர்ந்த இவ்வமைப்புகள் இணைந்து, மே நாளன்று மாலையில், செங்கொடிகள் விண்ணில் உயர எழுச்சிமிகு முழக்கங்களோடு பேரணியை நடத்தின. சாமுண்டிபுரம் சாலை - குமார் நகரில், திரளான உழைக்கும் மக்களின் பங்கேற்புடன் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர் சீனிவாசன் (ம.க.இ.க) ஆற்றிய சிறப்புரையும் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சியும் மறுகாலனியாதிக்கத்தை வீழ்த்த அறைகூவுவதாக அமைந்தன.

புதுச்சேரி மற்றும் விழுப்புரம் - கடலூர் மாவட்டங்களைச் சேர்ந்த புரட்சிகர அமைப்புகள் இணைந்து **கடலூரில்,** தலைமை அஞ்சலகம் அருகிலிருந்து திருப்பாப்புலியூர் தேரடி வீதி வரை விண்ணதிரும் முழக்கங்களுடன் மே நாள் பேரணியை நடத்தின. ஜெயகாந்த்சிங் (வி.வி.மு), துரை.சண்முகம் (ம.க.இ.க) ஆகியோரின் சிறப்புரைகளும், கலைநிகழ்ச்சிகளும் இன்னுமொரு விடுதலைப் போருக்கு நாடும் மக்களும் ஆயத்தமாக வேண்டிய அவசியத்தை உணர்த்தின.

தர்மபுரி - கிருஷ்ணகிரி மாவட்டங்களைச் சேர்ந்த புரட்சிகர அமைப்புகள் இணைந்து **ஓசூரில்** தமிழ், தெலுங்கு, கன்னடம், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளில் துண்டறிக்கை வெளியிட்டுப் பிரச்சாரம் செய்து, உழைக்கும் மக்களை அணிதிரட்டி பேருந்து பணிமனையிலிருந்து ராம்நகர் வரை, பாட்டாளி வர்க்கப் பேராசான்களின் உருவப் படங்களு

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்


படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 23

**இதழ் 8**

ஜூன் 2008

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 15

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561


## கர்நாடகத் தேர்தல் முடிவு:
# குஜராத் பாணி 'மோடி'த்துவாவுக்குக் கிடைத்த வெற்றி!

கர்நாடகாவில் நடந்து முடிந்த சட்டப்பேரவைக்கான தேர்தல்களில் பாரதிய ஜனதா அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியாமல் போனாலும், பா.ஜ.க., காங்கிரசின் போட்டி வேட்பாளர்களாக நின்று வெற்றிபெற்ற ஆறு உறுப்பினர்களின் ஆதரவோடு தென்மாநிலங்களில் முதல் முறையாக ஆட்சியைப் பிடித்து விட்டது. அதற்கு மிக முக்கியமான காரணம் பார்ப்பன இந்து மதவெறி, கன்னட இனவெறி, லிங்காயத் மற்றும் ஒக்கலிகா ஆகிய ஆதிக்க சாதிவெறி அடிப்படையிலான வலுவான மத, இன மற்றும் சாதி அரசியல் அமைப்பை அக்கட்சி கட்டி வளர்த்திருப்பதுதான். இத்தகைய அரசியல் அமைப்பின் முதுகெலும்பாக விளங்குவது ஆர்.எஸ்.எஸ். மற்றும் பிற இந்து மதவெறி அமைப்புகளாகும். பிற்பட்டவை என்று கூறிக் கொள்ளும் லிங்காயத் மற்றும் ஒக்கலிகா சாதிகளும், கன்னட இன உணர்வும் "எழுச்சியுற்ற போது", அவை தம்மைப் பார்ப்பன இந்துத்துவத்தோடு அடையாளப் படுத்திக் கொண்டன. அதனால்தான் கர்நாடகாவில் அதன் அண்டை மாநிலங்களில் காணாத அளவு இசுலாமியர் எதிர்ப்பு மதவெறிப் படுகொலைகளை நடத்தி, ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. ஆகிய இந்து மதவெறி அமைப்புகள் தொடர்ந்து வளர்ந்து, இப்போது ஆட்சியைப் பிடிக்கவும் முடிந்துள்ளது.

பார்ப்பன மற்றும் ஆதிக்க சாதிகளின் கூட்டு அடிப்படையிலான சாதிவெறி, அந்தந்த மாநிலத்துக்கேற்ப இனவெறி மற்றும் பாசிச இந்து மதவெறி ஆகியவற்றை சரியான விகிதத்தில் கலந்த அரசியல் போதைதான் **மோடித்துவா** என்றழைக்கப்படுகிறது. இதுதான் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. சித்தாந்தமாகிய இந்துத்துவா எடுத்துள்ள புதிய அவதாரம். மோடி தலைமையிலான முசுலீம் படுகொலை வெறியாட்டத்துக்கு எதிரான அரசியல் எதிர்ப்புகளையெல்லாம் குஜராத்தி மக்களை அவமானப்படுத்துவது என்று முத்திரை குத்தி இனவெறியைத் தூண்டி, அரசியல் ஆதாயம் அடைந்தார், மோடி. கர்நாடகாவில் பா.ஜ.க. ஆட்சியைப் பிடிப்பதற்குக் கை கொடுத்தது இந்த மோடித்துவா சித்தாந்தம்தான். விலைவாசி உயர்வு எதிர்ப்பு, தகவல் தொழில்நுட்ப நகரமாகிய பெங்களூரு உட்பட நகர்ப்புறங்களில் கட்டுமான வசதிக் குறைவு, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பொதுப் பிரச்சாரங்களோடு, தேவே கவுடா - குமாரசாமி குடும்பம் துரோகமிழைத்து எடியூரப்பா தலைமையிலான பா.ஜ.க. ஆட்சியைக் கலைத்ததைக் காட்டி நிலையான ஆட்சி முழக்கத்தை பா.ஜ.க. முன் வைத்தது. ஆனால், இவற்றை விட முக்கியமாக, சமீபத்தில் நடந்த ஹூப்ளி குண்டு வெடிப்பு, ஜெய்ப்பூரில் நடந்த தொடர் குண்டு வெடிப்புகள் மற்றும் பெல்காமில் "முசுலீம் தீவிரவாதி" என்பதாக ஒருவரைக் கைது செய்தது, மற்றும் கர்நாடகா பயங்கரவாதப் புகலிடமாக மாறிவிட்டது என்ற வதந்தி ஆகியவற்றைக் காட்டி பா.ஜ.க. மேற்கொண்ட இசுலாமிய, பயங்கரவாத எதிர்ப்பு பொய்ப்பிரச்சாரம்; காவிரி - ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்துக்கு எதிராக எடியூரப்பாவே நேரில் சென்று கிளப்பிய கன்னட இனவெறி; லிங்காயத் சாதித் தலைவராகவும், கர்நாடகாவின் முதலமைச்சர் பதவிக்கான வேட்பாளராகவும் எடியூரப்பாவை முன்னிறுத்தி, அச்சாதியினர் பெரும்பான்மையாக வாழும் பகுதியைக் குறிவைத்து தேர்தல் பணியாற்றியது - இவையெல்லாம் கர்நாடகாவுக்குப் பொருத்தமான வகையில் மோடித்துவாவை அமலாக்கி பா.ஜ.க. வெற்றி அடைந்ததைக் குறிக்கின்றன.

கர்நாடகாவில் தமது கட்சி அடைந்துள்ள வெற்றி பூகோள ரீதியிலும் சமூக ரீதியிலும் தமது ஆதரவு விரிவடைந்து வருவதைக் குறிப்பதாகவும் அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் தமக்குச் சாதகமாக அமையும் என்பதைக் காட்டுவதாகவும் பா.ஜ.க. தலைவர்கள் குதூகலிக்கின்றனர். பா.ஜ.க. ஆதரவு செய்தி ஊடகங்களும் இதையே உறுதிப்படுத்துகின்றன. கடந்த சில ஆண்டுகளில் நடந்த மாநில சட்டப் பேரவைகளுக்கான தேர்தல்களில் பீகார், பஞ்சாப், குஜராத், இமாச்சலப் பிரதேசம் ஆகியவற்றில் பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் வெற்றி பெற்றுள்ளன. இந்த நிலை தொடருமானால் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணி ஆட்சியைப் பிடிக்கும் வாய்ப்பு அதிகமாகவே உள்ளது. இந்து மதவெறி பாசிசத்துக்கெதிரான உறுதியான போராட்டங்களைக் கட்டியெழுப்புவதற்கு மாறாக, அதனுடன் சமரசப் போக்கையும்; மக்கள் விரோத, தனியார்மயம் - தாராளமயம் - உலகமயமாக்கம் என்ற ஏகாதிபத்திய அடிமைத்தனத்தையும் காங்கிரசு மற்றும் இடது கூட்டணி ஆகிய போலி மதச்சார்பற்ற சக்திகள் கடைப்பிடிப்பதும் இந்து மதவெறி பாசிச ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. கூட்டணி மீண்டும் தலைதூக்குவதற்கு முக்கியக் காரணமாக உள்ளது. •

படிப்பகம்

www.padippakam.com

## தொழில் வளர்ச்சி:

# கருணாநிதியின் காரியவாதம் இராமதாசின் கவர்ச்சிவாதம்

**கோ**டை வெய்யில் தமிழக மக்களை வறுத்தெடுத்துக் கொண்டிருக்க, அதையும் விஞ்சும் வகையில் அனலைக் கக்கி தி.மு.க. அரசுக்கு எதிராக அறிக்கைப் போர் நடத்தி வருகிறார், பா.ம.க. நிறுவனர் இராமதாசு.

விமான நிலைய விரிவாக்கம், துணை நகரங்கள் அமைப்பது, முல்லைப் பெரியாறு - காவிரி - பாலாறு விவகாரங்கள், தனியார் உயர்கல்வி நிறுவனங்களின் கொள்ளை, சில்லறை வணிகத்தில் ஏகபோக நிறுவனங்களின் நுழைவு முதலானவற்றுக்கு எதிராக அவ்வப்போது அறிக்கை விடுத்து, முதல்வர் கருணாநிதியுடன் லாவணி நடத்திக் கொண்டிருந்த அவர், இப்போது சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு எதிராகவும் தமிழக அரசின் தொழிற்கொள்கைக்கு எதிராகவும் சீறுகிறார். கடந்த மே மாதத் தொடக்கத்திலிருந்து அடுத்தடுத்து அறிக்கைகள் விடுத்து, அடுத்த கட்டப் போரைத் தொடங்கி விட்டார்.

''புதிய இரு சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மறு ஆய்வு செய்ய வேண்டும்; அது குறித்து சட்டமன்றத்தில் வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்; வேலை வாய்ப்பு அளிக்கும் தொழிற்சாலைகள் தொடங்குவதாகக் கூறிக் கொண்டு, ரியல் எஸ்டேட் தொழில் நடக்கிறது; புதிய தொழிற்சாலைகள் தொடங்கும் போது பின்தங்கிய மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்; வெளிநாட்டினர் அல்லாமல் தமிழர்கள் தொழில் தொடங்க அரசு ஊக்குவிக்க வேண்டும்'' என்று கடந்த மே முதல் நாளில் காட்டமாக அறிக்கை வெளியிட்டார், இராமதாசு.

இதற்கு விளக்கமளித்து கேள்வி - பதில் வடிவில் முதல்வர் கருணாநிதி ஒரு மறுப்பு அறிக்கை வெளியிட்டார். அதில், தவறான தகவல்களின் அடிப்படையில் இராமதாசு அறிக்கை வெளியிட்டுள்ளதை அம்பலப்படுத்தியதோடு, கடந்த ஈராண்டுகளில் 13 நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு, அதில் 6 நிறுவனங்கள் பணிகளைத் தொடங்கிவிட்டதாகவும், தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பிறகு 1 லட்சத்து 26 ஆயிரத்து 610 பேருக்கு வேலை கிடைத்துள்ளதாகவும் புள்ளி விவரங்களை அடுக்கி, எதையும் சந்தேகக் கண்ணோடு பார்க்காதீர்கள் என்று இராமதாசுக்குப் பதிலளித்தார். இராமதாசு இப்படியெல்லாம் கேள்வி எழுப்பிக் கொண்டிருப்பது, தமிழகத்தின் தொழில் வளர்ச்சியின் விசை ஒடிந்திடும் நிலைக்கு உள்ளாக்கும் என்றும் இடித்துரைத்தார். தூத்துக்குடி டைட்டானியம் ஆலை முதல் ஓசூர் சிறப்புப் பொருளாதார மண்டலம் வரை பின்தங்கிய பகுதிகளின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்ததே இராமதாசுதான் என்று சாடினார்.

உடனே இராமதாசு, ''நானா தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுகிறேன்?'' என்று எதிர் கேள்விக் கேட்டு அறிக்கை வெளியிட்டார். ''வெள்ளை அறிக்கை கேட்டால் மவுனம் சாதிக்கிறார்கள். எத்தனை பேருக்கு, என்ன மாதிரியான வேலை கிடைத்துள்ளது என்று கேட்டால் பதில் இல்லை. வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்துவிட்டு வேலையின்றி தவிப்போரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது. கணினி தொழில்நுட்பத் துறை மட்டுமின்றி அனைத்துத் துறைகளிலும் வேலை வாய்ப்பைப் பெருக்கும்படி தொழிற்கொள்கை அமைய வேண்டும். வெளிநாட்டு உதவியுடன் வரும் முதலாளிகளுக்கு இங்குள்ள நிலங்களைத் தாரை வார்க்கக் கூடாது'' என்றெல்லாம் அதில் பொருமித் தீர்த்தார்.

அதைத் தொடர்ந்து கருணாநிதி, ''சிலர் கூட இருந்தே குழி பறிக்கிறார்கள்'' என்று இராமதாசின் பெயரைக் குறிப்பிடாமல் சாடினார். இரு தரப்புக்குமிடையிலான அறிக்கை போரும் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி பற்றிய லாவணியும்

**பன்னாட்டு - உள்நாட்டு ஏகபோக நிறுவனங்களின் குறையாடலுக்காக, நாளொரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் மறுகாலனிய 'தொழில் வளர்ச்சி'யைச் சாதிக்கத் துடிக்கும் கருணாநிதி.**




படிப்பகம்

www.padippakam.com

இரு வாரங்களுக்கு நீடித்தது. பா.ம.க நிறுவனர் மருத்துவர் இராமதாசுக்கும் தமிழக முதல்வர் கருணாநிதிக்குமிடையி லான உரசலின் புதிய அத்தியாயம் என்று செய்தி ஊடகங்கள் இந்த விவகாரத்தை ஊதிப் பெருக்கி பரபரப்பூட்டின.

தி.மு.க. ஆட்சியின் ஈராண்டு கால ஆட்சியைப் பற்றிய மதிப்பீட்டைப் பற்றி பத்திரிகையாளர்கள் கேட்டபோது, ''தி.மு.க. ஆட்சிக்கு நான் மார்க் போட விரும்பவில்லை; மக்களே மார்க் போடுவார்கள். தமிழகத்தில் தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை; சாராய வளர்ச்சிதான் ஏற்பட்டிருக்கி றது'' என்று இராமதாசு பொருமினார்.

தமிழகத்தின் தொழில் வளர்ச்சி பற்றி தி.மு.க. அரசு மீது அதிரடி விமர்சனங்களுடன் இராமதாசு அறிக்கை விடுவது இப்போது முதன்முறையல்ல; ஏற்கெனவே கடந்த டிசம்பர் இறுதியில் இந்தியா டுடே வார இதழுக்கு அளித்துள்ள பேட் டியில், ''நான் தமிழகத்தின் தொழில் வளத்திற்கு எதிரி இல்லை. சிறு தொழில்களை ஊக்குவியுங்கள் என்றுதான் சொல்கிறேன். சிறப்புப் பொருளாதார மண்டலம் என்ற பெய ரில் ஏக்கர் கணக்கில் நிலத்தை எடுத்துக் கொண்டு ஒரு சில பேருக்கு மட்டும் வேலை தருவதைத்தான் எதிர்க்கிறேன். தனியார்மயம் என்ற பெயரில் விவசாயத்தை அழிப்பதை எதிர்க்கிறேன். ரயில்வே போல விவசாயத்திற்கு தனி பட்ஜெட் போடச் சொல்கிறேன். சிறப்புப் பொருளாதார மண் டலங்களால் தமிழ்நாட்டிற்கு எந்தப் பயனுமில்லை. வேலை வாய்ப்பு பெருகும் என்று கருணாநிதி சொல்வதெல்லாம் ஏமாற்று வேலை'' என்று அவர் தி.மு.க. அரசைச் சாடி யுள்ளார்.

தி.மு.க. அரசு மீது அதிரடித் தாக்குதலுடன் இராமதாசு அறிக்கை விடுவதைப் பார்க்கும் எவருக்கும் அவர் ஏதோ தமிழகத்தின் தொழில் வளர்ச்சி மீது அக்கறை கொண் டுள்ளதைப் போலத் தோன்றும். மக்களின் அதிருப்தியை எதிரொலிப்பதாகத் தோன்றும். ஏனென்றால் அதில் சில உண்மைகளும் இருக்கின்றன.

மறுபுறம் கருணாநிதி, புள்ளி விவர ஆதாரங்களுடன் மறுப்பு அறிக்கை வெளியிட்டு, தமிழகத்தில் தொழில்



உலக வங்கியின் திருத்தப்பட்ட மறுகாலனியக் கொள்கைப்படி, இலவச-கவர்ச்சித் திட்டங்களால் அதிருப்திக்கு வடிகால் வெட்டும் கருணாநிதி.

வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் கூறுவதை ஏமாற்று வேலை என்று ஒரேயடியாக மறுத்துவிட முடியாது. ஏனென்றால் அதி லும் சில உண்மைகள் இருக்கின்றன.

தொழில் வளர்ச்சி என்று இருதரப்பும் அறிக்கைப் போர் நடத்துகிறார்களே, அது யாருக்கான தொழில் வளர்ச்சி என் பதுதான் மையமான கேள்வி.

கருணாநிதியோ, தனியார்மய - தாராளமய கொள்கை யின் வழியிலான தொழில் வளர்ச்சியை, அதாவது பன் னாட்டு-உள்நாட்டு ஏகபோக முதலாளிகளின் சூறையாடலுக் கான தொழில் வளர்ச்சியை, வேலைவாய்ப்பற்ற தொழில் வளர்ச்சியைச் சாதித்து, மக்களின் அதிருப் தியை இலவசத் திட்டங்கள் மூலம் வடியச் செய்யும் காரியவாத நோக்கில் செயல் படுகிறார்.

அரசியல் பித்தலாட்டம்: டெல்லி அமைச்சரவையில் அங்கம் வகித்துத் தனியார்மயம் - தாராளமயத்தை அன்புமணி தீவிரப்படுத்தி வரும்போது, இங்கே அவரது கட்சியினர் சில்லறை வணிகத்தில் ஏகபோக நிறுவனங்களின் நுழைவை எதிர்த்து நடத்தும் அடையாள போராட்டம்.



கருணாநிதி அரசின் தொழில் கொள் கையைக் கடுமையாகச் சாடி அறிக்கைப் போர் நடத்தும் இராமதாசிடம் இருப்ப தும் இதே தனியார்மய-தாராளமயக் கொள்கைதான். இராமதாசு உள்ளிட்டு அனைத்து ஓட்டுப் பொறுக்கிக் கட்சி களும் விசுவாசமாக ஆதரித்துப் பின்பற்று வதும் இதே கொள்கைதான். இருப்பினும் ''ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சி'' என்று தனது பா.ம.க.வை வர்ணிக்கும் இராம தாசு, கல்வி முதல் பட்ஜெட் வரை பல துறை நிபுணர்களையும் கலந்தாலோசித்து அரசுக்கு மாற்று திட்டங்களையும் ஆலோ சனைகளையும் முன்வைப்பதாகப் பீற்றிக் கொள்கிறது.

தனியார்மயம் - தாராளமயம் என்பது அனைத்து ஓட்டுக் கட்சி ஆதரவுடன் செயல்படுத்தப்படும் கொள்கை. எந்த


படிப்பகம்

www.padippakam.com

ஓட்டுக் கட்சி கூட்டணி ஆட்சிக்கு வந்தாலும் விசுவாசமாகப் பின்பற்றப்படும் கொள்கை. இத்தனியார்மயம் - தாராள மயம்தான் விவசாயத்தை நாசமாக்கி, விவசாயிகளைத் தற்கொலைச் சாவுக்குத் தள்ளுகிறது. உள்நாட்டுச் சிறுதொழில்களை ஒழித்துக் கோடிக்கணக்கானோரை வேலையற்றவர்களாக்குகிறது. சில்லறை வணிகத்தில் உள்நாட்டு - பன்னாட்டு நிறுவனங்களை நுழைத்து கோடிக்கணக்கான சிறு வியாபாரிகளின் பிழைப்பில் மண்ணை அள்ளிப் போடுகிறது. காசுள்ளவனுக்கே கல்வி என்று புதிய மனு நீதியைத் திணிக்கிறது. பணவீக்கம் - விலையேற்றம் - கட்டண உயர்வை உழைக்கும் மக்களின் தலையில் சுமத்துகிறது.

இராமதாசு சவடால் அடித்து அறிக்கை விட்டுள்ள வேலையின்மையை ஒழிக்க வேண்டுமானால், முதலில் தனியார்மயம் - தாராளமயத்தை ஒழித்துக் கட்டவேண்டும்; உள்நாட்டுத் தொழில் வளர்ச்சியைப் பெருக்க வேண்டுமானால், அதற்கு மிகப் பெரிய எதிரியாக உள்ள தனியார்மயம், தாராளமயத்தை வீழ்த்த வேண்டும். அன்னிய இறக்குமதியையும் ஏகாதிபத்திய சார்பையும் ஒழித்து, சுயசார்புடன் உள்நாட்டுத் தொழிலையும் விவசாயத்தையும் வளர்க்க வேண்டும். அதற்கான திட்டமோ கொள்கையோ, போராட்டமோ, வெங்காயமோ இராமதாசிடம் கிடையாது.

பா.ஜ.க. கூட்டணி ஆட்சியானாலும் சரி, காங்கிரசு கூட்டணி ஆட்சியானாலும் சரி, அவை தீவிரமாக நடைமுறைப்படுத்தி வரும் தனியார்மயம் - தாராளமயக் கொள்கைகளின் விளைவுதான், இராமதாசு தனது காகித அறிக்கைகளில் குறிப்பிடும் நிலைமைகள். தமிழகத்தின் கணக்கற்ற சிறு தொழில்களின் நசிவுக்கும் வேலையின்மைக்கும் விவசாயத்தின் அழிவுக்கும் முதன்மைக் காரணம், தனியார்மய - தாராளமயக் கொள்கைகள்தான். விளைநிலங்களை அபகரித்து சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவுவது, சிறு தொழில்களை ஒழித்து உள்நாட்டு - பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் பகற் கொள்ளைக்குப் பட்டுக் கம்பளம் விரிப்பது உள்ளிட்ட அனைத்து கொள்கை முடிவுகளையும் மைய அரசுதான் எடுக்கிறது. அமைச்சரவை முடிவுகளில் இராமதாசின் மகன் அன்புமணி அங்கே கையெழுத்திட்டு செயல்படுத்துகிறார். தந்தையோ இங்கே தாவிக் குதிக்கிறார்.



''சாராய வளர்ச்சிதான் ஏற்பட்டுள்ளது; இளைஞர்கள் சீரழிகிறார்கள்'' என்று கூப்பாடு போடும் இராமதாசிடம், ''வேறு எப்படித்தான் அரசுக்கு வருவாயை திரட்டுவது? அதற்கான மாற்றுத் திட்டம்தான் என்ன? புதுச்சேரி மாநிலத்தில் அவரது திட்டத்தைச் செயல்படுத்துவாரா?'' என்றெல்லாம் முன்பு கருணாநிதி கேட்டார். சாராயம் இல்லாமல் அரசுக்கு வருவாய் திரட்டுவதற்கான மாற்றுத் திட்டம் எதையும் இன்றுவரை இராமதாசு முன்வைக்கவில்லை. அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி தீர்வு காண வேண்டும் என்று பொத்தாம் பொதுவாகக் கூறி நழுவிக் கொள்கிறார்.

இப்படித்தான் தமிழகத்தின் தொழில் வளர்ச்சி, சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் பற்றியும் மாற்றுத் திட்டம் எதுவுமின்றி இராமதாசு சவடால் அடித்து வருகிறார். ''சிறப்புப் பொருளாதார மண்டலங்களை சென்னையிலும் சென்னைக்கு வெளியிலும் அமைக்கக் கூடாது என்றால் என்ன தான் செய்ய முடியும்? வெளிநாட்டினர் அல்லாமல் தமிழகத்தைச் சேர்ந்த தொழில் முனைவோரை மட்டும்தான் ஆதரிக்க வேண்டும் என்றால், அத்தனை ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யக் கூடிய தொழில் அதிபர்கள் தமிழகத்தில் இல்லையே!'' என்று கருணாநிதி தனது மறுப்பு அறிக்கையில் கேட்ட பின்னரும், இராமதாசு மாற்றுத் திட்டம் எதையும் முன் வைக்கவில்லை.

சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவும்போது, அங்கு வேலைபார்க்கும் தொழில்நுட்பவாதிகள் - அதிகாரிகளுக்கு அனைத்து வசதிகளும் கிடைக்க வேண்டுமென்பதற்காக, வீடுகள், பள்ளிகள், மருத்துவமனை, கேளிக்கை விடுதிகள் முதலானவற்றையும் அமைக்க வேண்டும் என்பதை மைய அரசு தனது கொள்கை விதியாக வகுத்துள்ளது. இதன்படியே, சிங்கூரில் ''நானோ'' கார் தயாரிக்க டாடா நிறுவனத்துக்கு மே.வங்க போலி கம்யூனிச அரசு, ஆலைக்காகவும் வீடுகளுக்காகவும் விளைநிலங்களை ஒதுக்கியுள்ளது. இதே போலத்தான் சென்னையில் அமையவுள்ள இரண்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கும் நிலம் ஒதுக்கப்பட்டு, உலகின் மிகப்பெரிய ரியல் எஸ்டேட் நிறுவனமான டி.எல்.எஃப், குடியிருப்புக்கான வீடுகள், விடுதிகள் கட்டுவதற்கான ஒப்பந்தத்தைப் பெற்றிருக்கிறது. இதைத்தான் ''தொழில் வளர்ச்சி என்ற பெயரில் ரியல் எஸ்டேட் வியாபாரம் நடக்கிறது'' என்று சாடுகிறார் இராமதாசு. கருணாநிதியோ, ''சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கென வகுக்கப்பட்டுள்ள விதிப்படித்தான் இப்படிச் செய்யப்பட்டுள்ளது. வேறு என்ன தான் செய்ய முடியும்?'' என்கிறார்.

> **சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மறு ஆய்வு செய்ய வேண்டும்; அது குறித்து சட்டமன்றத்தில் வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.**

இப்படி சென்னையில் அமையவுள்ள இரண்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு நிலம் ஒதுக்கியதை எதிர்க்கும் இராமதாசு, அதே சென்னை - எண்ணூரில் கப்பல் கட்டும் தளமும் துறைமுகமும் அமைக்க எல் எண்டு டி நிறுவனத்துக்கு 1500 ஏக்கர் நிலம் ஒதுக்கியிருப்பதை எதிர்க்கவில்லை. புதிய தொழிற்சாலைகள் நிறுவும்போது தமிழ் முதலாளிகளுக்கு முன்னுரிமை தரவேண்டும் என்று உபதேசிக்கும் இராமதாசு, இங்கே எல் அண்டு டி நிறுவனத்தை ஆதரிக்கிறார். நவீன தானியங்கி எந்திரங்களைக் கொண்டு அமையவுள்ள இத்துறைமுகத்தில் எவ்வளவு பேருக்கு வேலை கிடைக்கும் என்பது இராமதாசுக்கே வெளிச்சம். ஒருபுறம், சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு எதிர்ப்பு காட்டும் கவர்ச்சிவாத சவடால்! மறுபுறம், அச்சிறப்புப் பொருளாதார மண்டலங்களையும் ஏகபோக தொழில் நிறுவனங்களையும் ஆதரிக்கும் பச்சோந்தித்தனம்! — இதுதான் இராமதாசின் அரசியல் யோக்கியதை.



படிப்பகம்

www.padippakam.com

தி.மு.க. அரசின் தொழிற்கொள்கையை எதிர்த்து மட்டுமா இராமதாசு அறிக்கைப் போர் நடத்துகிறார். சாராயம், ரியல் எஸ்டேட் கொள்ளை, மணல் குவாரி கொள்ளை, தனியார் உயர்கல்வி நிறுவனங்களின் கொள்ளை முதலானவற்றுக்கு எதிராகவும் அறிக்கை விடுத்து சாடுகிறார். இவையெல்லாம், கருணாநிதியின் ஆட்சி மட்டுமின்றி, எல்லா மாநிலங்களிலும் எல்லா ஓட்டுப் பொறுக்கி ஆட்சிகளிலும் தான் நடக்கிறது. இந்நிலையில் சாராயமே இல்லாத, கிரிமினல் குற்றக் கும்பலின் ஆதிக்கமும் கொள்ளையும் இல்லாத மாநிலமாகத் தமிழகத்தை மாற்ற வேண்டுமானால், இன்றைய சமூக - அரசியல் - பொருளாதார அமைப்பு முறையையே தூக்கியெறிந்து விட்டு, உழைக்கும் மக்களின் கரங்களில் அதிகாரத்தைக் குவிக்கும் புரட்சியை சாதிக்க வேண்டும். அத்தகைய புரட்சிக்கான திட்டமோ, நடைமுறையோ எதுவுமின்றி பொதுவில் சமூகச் சீரழிவுகளைப் பற்றி சவடால் அடித்து அறிக்கை விடுகிறார் இராமதாசு.

தி.மு.க. ஆட்சி மட்டுமல்ல; எந்தவொரு ஓட்டுக் கட்சி ஆட்சியிலும் இத்தகைய சீரழிவுகளும் மோசடிகளும் ஊழலும் கொள்ளையும் ஒழிந்துவிடப் போவதில்லை. எனவே, எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சாராயச் சீரழிவு பெருகிவிட்டது, ஊழலும் கொள்ளையும் தீவிரமாகிவிட்டதென்று

> **“ இப்படியெல்லாம் கேள்வி எழுப்பிக் கொண்டிருப்பது, தமிழகத்தின் தொழில் வளர்ச்சியின் விசை ஒடிந்திடும் நிலைக்கு உள்ளாக்கும். ”**



எவரும் சாடிப் புலம்பலாம். ஆனால் ஒரு அரசியல் கட்சித் தலைவர் - அதிலும் ஆக்கப்பூர்வமான எதிர்கட்சித் தலைவராகத் தன்னைச் சித்தரித்துக் கொள்ளும் இராமதாசு, இப்படி சாடிப் புலம்புவதுதான் அவர் முன்வைக்கும் மாற்றுத் திட்டமா?

இன்றைய சமூக - அரசியல் - பொருளாதார அமைப்பு முறையே கெட்டழுகி சாக்கடையாக நாறிக் கொண்டிருக்கிறது. இன்றைய அரசியலமைப்பு முறையை ஆதரித்து, அதில் நாற்காலி சுகம் கண்டுகொண்டே, "ஐயோ, சாக்கடை நாறுகிறதே!" என்று கூப்பாடு போட்டு அறிக்கை விடுகிறார் இராமதாசு. சாக்கடை நாற்றத்தால் அவதிப்படும் மக்களின் கவனத்தை ஈர்த்து, ஏதோ சாக்கடையை ஒழிக்கப் புறப்பட்டு விட்டவரைப் போல கவர்ச்சி காட்டுகிறார்.

கருணாநிதியோ, சாக்கடை என்றால் நாறத்தான் செய்யும்; வேறென்னதான் செய்வது என்று கூறிக் கொண்டே, நாளொரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டு அந்நியப்-பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டுத் தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனங்களைத் தொழில் தொடங்க வரவேற்று கொண்டிருக்கிறார். மறுபுறம், உலக வங்கி மூலம் ஏகாதிபத்தியங்கள் புகுத்தும் திருத்தப்பட்ட மறுகாலனியாக்கக் கொள்கைப்படி இலவச-கவர்ச்சித் திட்டங்களை வாரியிறைத்து, காரியவாதத்துடன் 'தொழில் வளர்ச்சி'யைச் சாதிக்கத் துடிக்கிறார். இதை அம்பலப்படுத்தி, மத்திய-மாநில அரசுகள் தீவிரமாக்கிவரும் மறுகாலனியாக்கக் கொள்கைகளை வீழ்த்த முன்வராத இராமதாசு, கவர்ச்சிவாத சொல்லடுக்குகளால் இக்கொள்கைகளை எதிர்ப்பதைப் போல காட்டிக் கொள்கிறார்.

போலி கம்யூனிச சி.பி.எம். கட்சி, மைய அரசின் பொருளாதாரக் கொள்கைகளை - சிறப்புப் பொருளாதார மண்டலங்களை எதிர்ப்பதாக நாடகமாடிக் கொண்டு, தாங்கள் ஆளும் மே.வங்கத்தில் கொலைவெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவி மறுகாலனியாக்கக் கொள்கையை விசுவாசமாக நடைமுறைப்படுத்துகிறது.

அதேபோல, இங்கே தமிழகத்தில் இராமதாசு மறுகாலனியாக்கக் கொள்கையின் விளைவால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு எதிராகச் சவடால் அடித்துக் கொண்டிருக்க, அவரது மகன் அன்புமணி மத்திய அமைச்சராக அங்கே உட்கார்ந்து கொண்டு பன்னாட்டு மருந்து கம்பெனிகளுக்கும் கோக்-பெப்சிக்குப் பல்லக்கு தூக்கியது போதாதென்று, மறுகாலனியாக்கக் கொள்கைகளுக்கு எல்லா வகையிலும் துணை போகிறார். பா.ம.க.வின் நாடாளுமன்ற உறுப்பினரான புதுச்சேரி இராமதாசு, 2005-ஆம் ஆண்டில் சிறப்புப் பொருளாதார மண்டலச் சட்டம் தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தின்போது, சீனாவின் வழியில் இந்தியாவில் இத்தகைய மண்டலங்களை நிறுவக் கோரினார். இப்படி, அங்கே ஆதரவு; இங்கே எதிர்ப்பு என்று இரட்டை நாடகமாடுவதே இராமதாசு உள்ளிட்ட அனைத்துப் பிழைப்புவாத ஓட்டுப் பொறுக்கிகளின் நடைமுறையாகி விட்டது.

போதாக்குறைக்கு, விவசாயத்துக்கென தனியாகச் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவ வேண்டும் என்று, உலக வங்கியின் திட்டத்தையே தனது மூளையில் உதித்த திட்டம் போல இராமதாசு அறிக்கை விடுகிறார். பார்ப்பன - பாசிச ஜெயாவையே விஞ்சும் வகையில், யாரோ எழுதிக் கொடுக்கும் அறிக்கைகளை தனது பெயரில் நாளேடுகளில் வெளியிடச் செய்து "கவர்" பண்ணுகிறார். எப்படியாவது தி.மு.க. கூட்டணியை உடைத்துவிடத் துடிக்கும் பார்ப்பன பத்திரிகைகள், அவரது காகித அறிக்கைகளைப் பரபரப்பாக வெளியிட்டு ஊதிப் பெருக்கி வருகின்றன.

மறுகாலனியாக்கத்தால் வாழ்விழந்து நிற்கும் உழைக்கும் மக்களின் எதிர்ப்பையும் அதிருப்தியையும் அறுவடை செய்து ஓட்டுப் பொறுக்க வேண்டும்; மக்களுக்காகக் குரல் கொடுத்துப் போராடுபவரைப் போல காட்டிக் கொள்ள, அடிக்கடி சவடால் அடித்து அறிக்கை வெளியிட்டு அடையாள எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தி கவனத்தை ஈர்க்க வேண்டும்; தமிழகத்தை ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி இழுத்துச் செல்லும் ஆக்கப்பூர்வ எதிர்கட்சியாக நாடகமாட வேண்டும்; இவற்றின் மூலம் அடுத்த தேர்தல் கூட்டணியிலும் ஆட்சியிலும் அதிக பங்கு கோர வேண்டும் என்பதற்கு மேல் பிழைப்புவாத இராமதாசிடம் வேறு கொள்கையோ, திட்டமோ கிடையாது. அவரது பச்சோந்தி அரசியலைக் கவனித்து வரும் தமிழக மக்கள், இனி அவரை நம்பி ஏமாறவும் முடியாது.

● பாலன்

www.padippakam.com

# சிறு தொழில்களின் மௌனச் சாவு

## மூலப்பொருட்களின் விலையேற்றம், டாலர் மதிப்புச் சரிவினால் சிறு தொழில்கள் பேரழிவை எதிர்கொண்டுள்ளன.

தமிழகத்தின் தொழில் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்துத் தமிழக முதல்வர் மு.கருணாநிதி வெளியிட்டு வரும் அறிக்கைகள், தமிழகத்தில் மாபெரும் தொழிற்புரட்சி நடந்து வருவதைப் போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகின்றன. இந்தியாவினுள் நுழையும் பன்னாட்டு நிறுவனங்கள், விருப்பத்துடன் தேர்ந்தெடுக்கும் மாநிலங்களுள் ஒன்றாகத் தமிழகம் இருப்பதும்; கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களில், தமிழகம் முன்னணியில் இருப்பதும் என்னவோ உண்மைதான். எனினும், இந்திய மாநிலங்களிலேயே, வேலை வாய்ப்பற்றவர்களின் எண்ணிக்கை தமிழகத்தில்தான் அதிகம் இருப்பதாகக் கூறப்படுகிறது. தமிழகத்தில் வேலை செய்யும் திறன் படைத்தோரில் ஏறத்தாழ 10 சதவீதம் பேர் வேலை வாய்ப்பற்று இருப்பதாகவும்; தேசிய சராசரியைவிட இது அதிகம் என்றும் ஒரு புள்ளி விவரம் கூறுகிறது.

முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்கள் கூட, இத்தொழில் வளர்ச்சியை, ''வேலை வாய்ப்பற்ற வளர்ச்சி'' (Jobless growth) என்று தான் குறிப்பிடுகிறார்கள். ஒருபுறம், அடித்தட்டு மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தராத பன்னாட்டு நிறுவனங்களின் படையெடுப்பு; இன்னொருபுறம், விவசாயமும், சிறு நடுத்தரத் தொழில்களும் நசிவடைந்து கொண்டே போவது என்ற சமூக நிலைமையால், வேலை வாய்ப்பற்ற பட்டாளத்தின் எண்ணிக்கை பெருத்துக் கொண்டே போகிறது.

தமிழகத்தில் நுழைந்துள்ள பன்னாட்டு நிறுவனங்களின் எண்ணிக்கையையும்; அவை கொண்டு வரும் மூலதனத்தின் அளவையும் பட்டியல் போடும் தமிழக அரசு, ''சுதேசி'' தொழில்கள் - சிறு, நடுத்தர மற்றும் குடிசைத் தொழில்கள் - பற்றி வாய் திறக்க மறுக்கிறது. இந்த உள்நாட்டுத் தொழில்களின் நசிவு பற்றி, அதனால் ஏற்படும் வேலையிழப்பு பற்றித் தமிழக அரசு வெள்ளை அறிக்கையினைக் கொண்டு வந்தால், தமிழகத்தின் தொழில் வளர்ச்சி மேம்போக்கானது என்ற உண்மை அம்பலத்திற்கு வந்துவிடும்.

•••


தமிழகத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியாக அறியப்படும் விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டப் பகுதிகளில் தீப்பெட்டி தொழிலுக்கு அடுத்து, அடித்தட்டு மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதில் பருத்தி அரவை ஆலைகள்தான் (ஜின்னிங் ஃபாக்டரி) பெரும் பங்காற்றி வந்தன. ஆனால், கடந்த நான்கைந்து ஆண்டுகளாக பருத்தி அரவை ஆலைகள் அடுத்தடுத்து மூடப்படுவது விஷக் காய்ச்சல் போல் பரவி வருவதால், இந்த ஆலைகளில் வேலை பார்த்து வந்த கிராமப்புற பெண்கள் வேறு வேலை தேடி திருப்பூருக்கும், கோவைக்கும் ஓடுகின்றனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில், 1990-இல் 46 ஆயிரம் ஹெக்டேரில் பருத்தி பயிரிடப்பட்டது. இச்சாகுபடி பரப்பு 2004-05 ஆம் ஆண்டில் 5,090 ஹெக்டேராகக் குறைந்து போனது. இதேபோல், தேனி மாவட்டத்தில் 1990-இல் 17 ஆயிரம் ஹெக்டேரில் பருத்தி பயிரிடப்பட்டது. இது, 2007-08-இல் 834 ஹெக்டேராகக் குறைந்து போனது. பருத்தி சாகுபடியில் ஏற்பட்ட இந்த வீழ்ச்சிதான், தென் மாவட்டங்களில் இயங்கி வந்த பருத்தி அரவை ஆலைகள் மூடப்படுவதற்குக் காரணமாக அமைந்தது.

ஒரு ஏக்கர் மானாவாரி நிலத்தில் பருத்தியைப் பயிர் செய்ய ரூ.8,000 வரை செலவு செய்ய வேண்டும். அதேசமயம், ஒரு குவிண்டால் பருத்தியை ரூ. 1,600-க்கு மேல் விற்று விட முடியாது. பருத்தியின் உற்பத்திச் செலவுக்கு ஏற்பக் கட்டுப்படியாகக் கூடிய விலை விவசாயிகளுக்குக் கிடைக்காதது ஒருபுறமிருக்க, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் விலை 'மலிவான' இயற்கை மற்றும் செயற்கை பஞ்சோடும் போட்டி போட வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர். பருத்தி விவசாயிகள், இந்த இரு தலைக் கொள்ளி நிலையில் இருந்து தப்பிக்க, பருத்தி விவசாயத்தையே கைவிட்டனர். பருத்தி சாகுபடி வீழ்ச்சிக்குப் பின்னுள்ள காரணம் இதுதான்.

பருத்தி விவசாய வீழ்ச்சியால், தேனி மாவட்டத்தில் மட்டும், பருத்தி கமிசன் மண்டிகளில் வேலை பார்த்து

கரூர் மற்றும் ஈரோடு பகுதிகளைச் சேர்ந்த ஜவுளி - சாயப்பட்டறை நிறுவனங்கள் நூல் விலை உயர்வைக் கட்டுப்படுத்தக் கோரி நடத்திய கதவடைப்புப் போராட்டத்தால், வெறிச்சோடிக் கிடக்கும் ஈரோடு - திருவேங்கடசாமி கோயில் தெரு.





படிப்பகம்

www.padippakam.com

வந்த சுமை தூக்கும் தொழிலாளர்கள்; பருத்தி மூட்டைகளை மாட்டு வண்டிகளின் மூலம் கொண்டு சென்று வந்த தொழிலாளர்கள்; விளைந்த பருத்தியைப் பறிக்கும் விவசாயக் கூலிகள்; நூற்பாலைகளில் வேலை பார்த்து வந்த தொழிலாளர்கள் என ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர்.



டாலர் மதிப்பு சரிந்து போனதால், போதிய ''ஆர்டர்'' கிடைக்காமல் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ள காலணி தொழிற்சாலை.

தென் மாவட்டக் கிராமப்புறங்களில் இயங்கி வந்த பருத்தி அரவை ஆலைகள் மூடப்பட்டதால், அவற்றில் வேலை பார்த்து வந்த இளம் பெண் தொழிலாளர்கள், திருப்பூர்-கோவை பகுதியிலுள்ள நூற்பாலைகளுக்கு ''சுமங்கலித் திட்டம்'' என்ற பெயரில் கொத்தடிமைகளாகச் செல்வது அதிகரித்திருக்கிறது.

உள்நாட்டுத் தொழில்களுக்குத் தேவைப்படும் பருத்தி கிடைக்காமல் தட்டுப்பாடு நிலவும் அதேசமயம், இந்தியாவில் விளையும் தரமான பருத்தியை எவ்விதத் தடையும் இன்றி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் கொள்கையை மைய அரசு கடைப்பிடித்து வருகிறது. உள்நாட்டு பஞ்சாலைகளைத் தற்கொலைக்குத் தள்ளும் இந்த ஏற்றுமதிக் கொள்கை, உலகமயம் என்று நியாயப்படுத்தப்படுகிறது.

தேனி மாவட்டத்தில் இயங்கி வந்த 30 தனியார் நூற்பாலைகளில் 25 நூற்பாலைகள் மூடப்பட்டுள்ளதற்கும்; மதுரை மாவட்டத்தில் இயங்கி வந்த மதுரா கோட்ஸ், கப்பலூர் தியாகராஜர் மில்ஸ் உள்ளிட்ட 12 பெரிய நூற்பலைகளில் 10 நூற்பாலைகள் நலிவுற்றுக் கிடப்பதற்கும்; கோவை மாவட்டத்தில் இயங்கி வரும் 3,000-க்கும் மேற்பட்ட சிறிய மற்றும் பெரிய பஞ்சாலைகளுள் 30 சதவீத ஆலைகள் மூடக்கூடிய அபாயத்தில் இருப்பதற்கும், பஞ்சு கிடைப்பதில் நிலவும் தட்டுப்பாடும்; வெளிநாடுகளில் இருந்து நூல் இறக்குமதி செய்யப்படுவதும் முக்கிய காரணங்களாகச் சொல்லப்படுகிறது. பஞ்சாலைகளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியால், மதுரை மாவட்டத்தில் மட்டும் இத்தொழிலை நேரடியாகவும் மறைமுகமாகவும் நம்பியுள்ள ஒரு லட்சம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பஞ்சாலை நெருக்கடியால் வேலையிழக்கும் தென் மாவட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேறு வேலை தேடி கோவைக்கும், திருப்பூருக்கும் ஓடுகின்றனர். ஆனால், அப்பகுதியில் இயங்கி வரும் பின்னலாடைத் தொழிலகங்களும், விசைத்தறிக் கூடங்களும் நூல் விலையேற்றத்தையும், டாலர் மதிப்பு வீழ்ச்சியையும் சமாளிக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றன. அதேசமயம், தென் மாவட்டத்துத் தொழிலாளர்களின் படையெடுப்பு, கூலியைக் குறைக்கும் ஆயுதமாகவும் முதலாளிகளுக்குப் பயன்படுகிறது.

•••

தமிழகத்தில் மெழுகுவர்த்தி தயாரிக்கும் தொழில், குடிசைத் தொழிலாக நடந்து வருகிறது. ஏறத்தாழ மூவாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் நேரடியாக மெழுகுவர்த்தித் தயாரிப்பிலும் விற்பனையிலும் ஈடுபட்டுள்ளன. மெழுகுவர்த்தி தயாரிப்புக்குப் பயன்படும் மூலப் பொருளான பாரபின் மெழுகின் விலை, மூன்று மாதத்திற்கொரு முறை உயர்ந்து கொண்டே போவதால், இக்குடிசைத் தொழிலின் எதிர்காலமே கேள்விக்குறியாகி நிற்கிறது.

1998-க்கு முன்பு வரை தமிழக அரசின் ''சிட்கோ'' நிறுவனம் மூலம், மெழுகுவர்த்தி உற்பத்தியாளர்களுக்கு பாராபின் மெழுகு ''கோட்டா'' முறையில் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. அதன் பின்னர், மூலப் பொருள் விநியோகத்தில் கோட்டா முறை ரத்து செய்யப்பட்டு சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் என்ற எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனமே பாராபினை வெளிச்சந்தையில் விற்பனை செய்து வருகிறது. இத்தாராளமயமாக்கத்தின் காரணமாகத்தான் 2007 சனவரியில் ரூ. 55,013/- ஆக இருந்த ஒரு டன் பாராபின் மெழுகின் விலை, 2008 சனவரியில் ரூ. 65,415/- ஆக அதிகரித்து விட்டது என மெழுகுவர்த்தி உற்பத்தியாளர் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. மேலும், இத்தாராளமயமாக்கம்தான் பாராபின் விற்பனையில் பதுக்கலையும், கள்ளச் சந்தையையும் வளர்த்து விட்டிருப்பதாகவும் அச்சங்கம் குற்றஞ் சுமத்தியுள்ளது.

பாராபின், மெழுகுவர்த்தி தயாரிப்புக்கு மட்டுமின்றி, தீப்பெட்டித் தொழில், தோல் பதனிடும் தொழில், பேப்பர் கோட்டிங், தார்பாலின், சோப்பு, கற்பூரம், தரைபாலிஷ் உள்ளிட்ட பல்வேறு சிறு தொழில்களுக்கும் பயன்படுவதால், பாராபின் விநியோகத்தில் மீண்டும் கோட்டா முறையைக் கொண்டு வர வேண்டும் என இவர்கள் கோருகிறார்கள்.

•••

மூலப் பொருளின் விலை உயர்வு மெழுகு தயாரிப்புத் தொழிலை மட்டுமின்றி, தீப்பெட்டி தயாரிப்பு, ஃபவுண்டரி, பேக்கரி உள்ளிட்டு பல்வேறு சிறு தொழில்களின் குரல் வளையை நெறித்துக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் விற்பனையாகும் தீப்பெட்டிகளில் 75 சதவீதம் தமிழகத்தில்தான் தயாராகி

www.padippakam.com

றது. சிவகாசிக்கு அடுத்தபடியாக குடியாத்தம் பகுதியில்தான் கையினால் தீப்பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலைகள் அதிகமாக இயங்கி வந்தன. 500-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இயங்கி வந்த இப்பகுதியில், தீப்பெட்டி தயாரிப்புக்குப் பயன்படும் கந்தகம், மெழுகு, குச்சி ஆகிய மூலப் பொருட்களின் கடுமையான விலை உயர்வினால், தற்பொழுது ஏற்த்தாழ 250 தொழிற்சாலைகள் மூடப்பட்டு விட்டன.

இயந்திர உற்பத்தியுடன் போட்டியிட வேண்டியிருப்பதால், கையினால் தயாரிக்கப்படும் தீப்பெட்டியின் விலை கடந்த பத்தாண்டுகளாக 50 காசுக்கு மேல் உயரவில்லை. இந்த நிலையில், மூலப்பொருட்களின் விலை உயர்வு, எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றியது போல அமைந்து விட்டது.

•••

இந்தியாவில் இரும்புத் தாது உற்பத்தி தேவைக்கேற்ற விதத்தில் பற்றாக்குறையின்றி நடைபெற்று வருகிறது. எனினும், சர்வதேச சந்தையில் இரும்புத் தாது மூலப் பொருட்களின் விலை 39 சதவீதம் உயர்வடைந்ததற்கு இணையாக, டாடா, எஸ்ஸார், செயில் (SAIL) போன்ற உள்நாட்டு உற்பத்தியாளர்களும் இரும்பின் விலையை உயர்த்திக் கொள்ள மைய அரசு அனுமதி கொடுத்ததால், தமிழகத்தில் மட்டும் ஏறத்தாழ 52,000 சிறிய தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சட்ட சபையிலேயே அறிவிக்கப்பட்டுள்ளது.

> “ சிறு-நடுத்தரத் தொழில்களின் செயல்பாடுகள் பற்றி 2001-02-இல் எடுத்த கணக்கெடுப்பின்படி, தமிழ்நாடு உள்ளிட்ட 11 மாநிலங்களில் 89 சதவீத சிறு தொழில்கள் நலிவடையும் நிலைக்குச் சென்று விட்டன. ”

இரும்பு மூலப் பொருள் விலையேற்றம் காரணமாக, சிறு தொழில் நிறுவனங்களுக்கு ''ஜாப் ஆர்டர்'' வழங்குவதை பெரிய நிறுவனங்கள் நிறுத்தி விட்டதாகக் கூறப்படுகிறது. இதனால் கோவை நகரில் இயங்கி வரும் 15 ஆயிரம் சிறு தொழில் கூடங்களில் 40 சதவீத நிறுவனங்கள் உற்பத்தியை நிறுத்தி விட்டதால், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர்.

சிறு-நடுத்தரத் தொழில்களின் செயல்பாடுகள் பற்றி 2001-02-இல் எடுத்த கணக்கெடுப்பின்படி, தமிழ்நாடு உள்ளிட்ட 11 மாநிலங்களில் 89 சதவீத சிறு தொழில்கள் நலிவடையும் நிலைக்குச் சென்று விட்டதும்; அவற்றுள் 69 சதவீத சிறு தொழில்கள் மூடப்படும் நிலையில் இருப்பதும் தெரிய வந்தது. சிறு தொழில்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த பாதுகாப்புகள் தாராளமயத்திற்குப் பின் படிப்படியாக விலக்கிக் கொள்ளப்பட்டதால்தான், அவை மீளமுடியாத நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டன.

தி.மு.க. அரசு சமீபத்தில் அறிவித்துள்ள தொழிற் கொள்கை, இந்நெருக்கடியைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைப் பற்றி ஆராயவில்லை. தமிழகத்தைச் சேர்ந்த உப்பு உற்பத்தியாளர்கள், தங்களுக்கு மின்சாரம் சலுகை விலையில் வழங்கப்பட வேண்டும் எனக் கோரி வருகிறார்கள். இக்கோரிக்கையைக் கண்டு கொள்ளாத தி.மு.க. அரசு, 250 கோடி ரூபாய்க்கு மேல் மூலதனம் போட்டுத் தமிழகத்தில் தொழில் தொடங்கும் நிறுவனங்களுக்கு, 2 ஆண்டு முதல் 10 ஆண்டு வரை மின்சார சலுகை அளிக்கப்படும் எனத் தனது தொழிற்கொள்கையில் வாக்குறுதி அளிக்கிறது. தி.மு.க. அரசின் தொழில் கொள்கை என்பது பன்னாட்டு நிறுவனங்களுக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட அடிமைச் சாசனம் என்பதை இந்த உதாரணம் ஒன்றே புரிய வைத்து விடும்.

வெள்ளைக்காரன், தனது மான்செஸ்டர் துணிகளுக்குப் போட்டியாக இருந்த இந்தியாவின் டாக்கா மஸ்லின் துணிகளை ஒழிப்பதற்காக, அதை நெய்த நெசவாளர்களின் கட்டை விரலை வெட்டி எறிந்தான். தாராளமயத்தின் பின் இந்தியாவினுள் நுழைந்த கோக்கும், பெப்சியும் ''அமைதியான'' முறையில் உள்ளூர் சோடா கம்பெனிகளை ஒழித்துக் கட்டின. ஜவுளி ஏற்றுமதியில் சர்வதேச அளவில் இருந்து வந்த ''கோட்டா'' முறை ஒழிக்கப்பட்டதால், இந்திய ஜவுளித் துறை நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டது. அயோடின் கலந்த உப்பைத்தான் விற்க வேண்டும் எனக் கொண்டு வரப்பட்ட சட்டம், சிறு உப்பு உற்பத்தியாளர்களை சந்தையில் இருந்து ஒழித்துக் கட்டியது. ''பிரெட்'', ரொட்டி விற்பனையில் பெரிய நிறுவனங்களின் ஆதிக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக உணவுக் கலப்படச் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளது.

சில்லறை வியாபாரத்தில் தரகு முதலாளிகள் நுழைவதை அனுமதித்திருப்பதைக் கண்டித்து, தென் சென்னை மாவட்ட வணிகர் சங்கங்களின் பேரவை நடத்திய ஆர்ப்பாட்டம்.



காலனிய ஆட்சியில் வெள்ளைக்காரன் டாக்கா நெசவாளர்களின் கட்டை விரலை வெட்டி எறிந்ததற்கும் 'சுதந்திர' இந்தியாவில், பன்னாட்டு நிறுவனங்களின் நலனுக்காகச் சட்டப்பூர்வமாக சிறு - நடுத்தர தொழில்கள் ஒழித்துக்கட்டப்படுவதற்கும் என்ன வேறுபாடு இருக்கிறது?

• ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com

# அரசின் முற்றுகை தூள்! தூள்!!

**ஒரிசா அரசு, போஸ்கோ முதலாளிக்காக பட்னா கிராம மக்களின் மீது திணித்த பொருளாதார முற்றுகை தோல்வியைத் தழுவியது.**

ஒரிசாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியைச் சேர்ந்த தின்கியா பஞ்சாயத்துக்கு உட்பட்ட ஒரு சிறிய கிராமம் பட்னா. இரும்பு உற்பத்தி நிறுவனங்களிலேயே உலகில் மூன்றாவது மிகப் பெரிய நிறுவனமான போஸ்கோ, 48 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் அங்கு ஓர் இரும்புத் தொழிற்சாலையையும், ஒரு துறைமுகத்தையும் கட்டத் திட்டமிட்டுள்ளது. இதற்காக அங்குள்ள மிகவும் வளமான கடற்கரைப் பகுதி நிலங்களை ஆக்கிரமிக்க அந்த நிறுவனம் முயற்சித்து வருகிறது.

தலைமுறை தலைமுறையாக பட்னாவில் வாழ்ந்து வரும் மக்கள், தங்களது சொந்த நிலத்தை விட்டே விரட்டியடித்து, தங்களது வாழ்க்கையையே கேள்விக்குள்ளாக்கும் இந்தத் திட்டத்தை எதிர்த்து, தொடர்ந்து போராடி வருகின்றனர். கடந்த 2005 -ஆம் ஆண்டு ஜூன் மாதம், ஒரிசா மாநில அரசுடன் ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பிறகு, மைய-மாநில அரசுகளின் உதவியுடன் அப்பகுதியில் நிலங்களை அபகரிக்க போஸ்கோ நிறுவனம் கடந்த மூன்றாண்டுகளாகப் பல தகிடுதத்தங்களைச் செய்த போதும், அக்கிராம மக்களின் உறுதியான போராட்டத்தின் காரணமாக, அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

கனிம வளம் பொருந்திய, கடற்கரையோரம் உள்ள அந்த இடத்தில், தனது திட்டத்தை செயல்படுத்தினால், சுமார் 6 கோடி டன் இரும்புத் தாதை, தங்களது துறைமுகம் வழியாகவே மிக எளிதில் கொண்டு சென்று விடலாம்; உலகச் சந்தையில் ஒரு டன் இரும்புத் தாதின் விலை 7000 ரூபாய்க்கும் அதிகமென்றாலும், அதனை எடுப்பதற்கான செலவு வெறும் 400-600 ரூபாய் மட்டுமே; இதற்கான உரிமைத் தொகையாக இந்திய அரசுக்கு டன்னுக்கு வெறும் 25 ரூபாய் தந்தால் போதும். மொத்தத்தில், வெறும் 48,000 கோடி ரூபாய் மூலதனத்தைப் போட்டுவிட்டு, 4.5 லட்சம் கோடி ரூபாய் பெறுமான இரும்புத் தாதை அள்ளிக் கொண்டு சென்றுவிடலாம் என்று போஸ்கோ நிறுவனத்தினர் கணக்குப் போட்டுக் காத்திருக்கின்றனர்.

படிப்பறிவில்லாத மலைவாழ் மக்களை அங்கிருந்து எளிதில் துரத்தி விடலாம் என்று ஆரம்பத்தில் அரசும், போஸ்கோவும் நினைத்தன. ஆனால், மக்கள் தங்களது நிலங்களையும், காடுகளையும் அந்நியரிடமிருந்து காக்கத் தங்களது உயிரைக் கொடுக்கக் கூடத் தயங்க மாட்டார்கள் என்பது அவர்களுக்கு மெதுவாக உறைக்க ஆரம்பித்தது. கடந்த 2006-ஆம் ஆண்டு கலிங்கா நகரில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 15 ஆதிவாசிகள் கொல்லப்பட்ட பிறகும், தொய்வின்றி நடந்து வரும் போர்க்குணம் மிக்க போராட்டங்கள், பட்னா கிராம மக்களை, அவர்களது பூமியில் இருந்து அப்புறப்படுத்துவது அவ்வளவு எளிதல்ல என்பதை உணர்த்தியது.



> **"எங்களது நிலங்கள் வேண்டுமானால், இறுதிவரை நீங்கள் எங்களிடம் போரிட்டாக வேண்டும்", என்று பட்னா கிராம மக்கள் போஸ்கோவிற்கு சவால் விட்டுள்ளனர்.**

அரசின் அடக்குமுறை ஒருபுறமிருக்க, போஸ்கோவின் ஆலை வந்தால், உள்ளூரைச் சேர்ந்த 13,000 பேருக்கு வேலை கிடைக்கும் என அரசும், போஸ்கோவும் ஆசை வார்த்தை காட்டியதையெல்லாம் கேட்டு பட்னா கிராம மக்கள் மயங்கிப் போய்விடவில்லை. இதனால், போலீசின் அடக்குமுறையைத் தீவிரப்படுத்தி, பட்னா கிராம மக்களை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் என போஸ்கோ நிர்வாகம், மாநில அரசுக்கு நிர்பந்தம் கொடுத்தது.

இதனையடுத்து, எதிரி நாட்டை ஆக்கிரமிப்பது போல, ஒரிசா மாநில போலீசார் பட்னா கிராமத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். பட்னா கிராமத்தைச் சுற்றிலும் மூங்கிலால் ஆன தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டு, பட்னா தனித் தீவாக போலீசாரின் முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டது. பட்னா கிராம மக்கள், கிராமத்தை விட்டு வெளியேற முடியாமலும், வெளியூரைச் சேர்ந்தவர்கள் பட்னா கிராமத்தை நெருங்க முடியாமலும் தடுக்கப்பட்டனர். இதற்காக, பட்னா கிராமத்தில் இருந்து 4 கி.மீ தொலைவில் உள்ள பலிதுதா என்ற ஊரில் போலீசார் தங்க வைக்கப்பட்டு, பட்னா கிராமம் 24 மணி நேர கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட்டது. மனிதர்கள் மட்டுமின்றி, பட்னா கிராம மக்களுக்குத்

படிப்பகம்

www.padippakam.com

தேவையான அத்தியாவசியப் பொருட்கள் வெளியூரில் இருந்து வருவதும் தடுக்கப்பட்டது. சுருக்கமாகச் சொன்னால், பட்னா மக்களைப் பட்டினி போடுவதன் மூலம், அவர்களின் போராட்டத்தை, மன உறுதியை உடைத்துவிட முயன்றது, மாநில அரசு.

இந்த முற்றுகை ஒருநாள் அல்ல, இரு நாளல்ல; கிட்டதட்ட சனவரி 2008 தொடங்கி மார்ச் இறுதி வரை நீடித்தது. மாநில அரசின் சட்டவிரோதமான இந்த முற்றுகையை உடைக்காவிட்டால், "நாம் வாழவும் முடியாது; போராட்டத்தை அடுத்தக் கட்டத்திற்கு எடுத்துச் செல்லவும் முடியாது" என உணர்ந்து கொண்ட பட்னா கிராம மக்கள், எதிரியின் முற்றுகையை உடைத்துக் கொண்டு வெளியேறுவது எனத் தீர்மானித்தனர்.

ஒரிசா மாநிலம் உருவான நாளான ஏப்ரல் முதல் நாள் முற்றுகை உடைப்பு போராட்ட தினமாக அறிவிக்கப்பட்டது. அன்று மதியம் 2 மணி அளவில், குறுகிய கிராம வீதிகளின் வழியாக அணிவகுத்து வந்த மக்கள், கலிங்கா நகரில் 15 பேரைக் கொன்றதை நினைவுபடுத்தி உங்களையும் கொல்வோம் என்று மிரட்டுவது போலக் குவிந்திருந்த ஆயுதம் தாங்கிய போலீசாரின் அச்சுறுத்தலையும் மீறி, தங்களது கிராம நுழைவாயிலில் போலீசு அமைத்திருந்த தடுப்பரணை உடைத்து, அரசின் முற்றுகையை முறியடித்தனர். தங்களது வாழும் உரிமைக்காக அரசை எதிர்த்துப் போராடும் பட்னா கிராம மக்களுக்கு ஆதரவாக "போஸ்கோ ப்ரதிரோத் சங்கர்ஷ் சமிதி" என்ற அமைப்பின் கீழ் அணிதிரண்டு, மாநிலம் முழுவதிலிருந்தும் ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் திரண்டு வந்திருந்தனர்.

திரளான மக்களிடையே பேசிய "போஸ்கோ ப்ரதிரோத் சங்கர்ஷ் சமிதி" அமைப்பின் தலைவர் அபய் சாகு "எங்களது நிலங்கள் வேண்டுமானால், இறுதிவரை நீங்கள் எங்களிடம் போரிட்டாக வேண்டும்", என்று பலத்த ஆரவாரத்திற்கிடையே போஸ்கோவிற்கு அறைகூவல் விடுத்திருக்கிறார்.

அந்நியனுடன் கைகோர்த்து கொண்டு சொந்த மண்ணைத் தாரை வார்க்கும் அரசுக்கெதிரான ஒரிசா மக்களின் போராட்டம் நிச்சயம் வெல்லும் என்ற நம்பிக்கை உருவாகியுள்ளது.

• அழகு

## மேற்கு வங்கப் பஞ்சாயத்துத் தேர்தல்:

# "வன்முறையே வெல்லும்!"

### – 'மார்க்சிஸ்டு'களின் தேர்தல் கொள்கை

**வா**க்காளர்கள் ஓட்டுப் போடவிடாமல் அடித்து விரட்டப்பட்டு, குண்டர்கள் கள்ள ஓட்டுப் போட்டனர். வாக்குச் சாவடிகள் சூறையாடப்பட்டன. குண்டு வீச்சு, துப்பாக்கிச் சூடு, கொலைகள், இதுவரை கண்டிராத வன்முறைகள் — இவையெல்லாம் அண்மையில் நடந்த கர்நாடக மாநில சட்டமன்றத் தேர்தலின் போது நிகழ்ந்த வன்முறை வெறியாட்டங்கள் அல்ல. நாடாளுன்ற - சட்டமன்ற ஜனநாயக மாண்புகளை கட்டிக் காக்கப் போராடி வருவதாகக் கூறிக் கொள்ளும் சி.பி.எம். கட்சி ஆளும் மே.வங்கத்தில், கடந்த மே மாதத்தில் நடந்த பஞ்சாயத்துத் தேர்தலின் போது நிகழ்ந்த வன்முறை வெறியாட்டங்கள்தான் இவை. இந்த வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டவர்கள், வலதுசாரி பிற்போக்கு காங்கிரசு-பாரதிய ஜனதா-திரிணாமுல் காங்கிரசு கட்சியினர் அல்ல. மக்களுக்கான கட்சியாக மார்தட்டிக் கொள்ளும் 'இடதுசாரி' சி.பி.எம். கட்சிக் குண்டர்கள்தான் மக்களுக்கு எதிராக இந்த வன்முறை வெறியாட்டங்களை நடத்தியுள்ளனர்.

பஞ்சாயத்துத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியானதும், கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்தே எதிர்க்கட்சியினரைப் பிரச்சாரம் செய்ய விடாமல் பல பகுதிகளில் சி.பி.எம். குண்டர்கள் விரட்டியடித்தனர். குறிப்பாக, சிங்கூர்-நந்திகிராமம் பகுதியில் சி.பி.எம் குண்டர்கள் பெருமளவில் குவிக்கப்பட்டு, தமது வாழ்வுரிமைக்காகப் போராடிவரும் இப்பகுதியைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் மீது வன்முறை வெறியாட்டங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. "சிங்கூர்-நந்தி கிராமத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவுவதற்காக கொலைவெறியாட்டத்தைக் கட்டவிழ்த்துவிட்ட சி.பி.எம் கட்சியினருக்கு இத்தேர்தல் மூலம் பாடம் புகட்டுங்கள்" என்று பிரச்சாரம் செய்து வந்த நந்திகிராமத்தைச் சேர்ந்த பூமி பாதுகாப்பு இயக்கத்தின் முன்னோடிகள் மீது சி.பி.எம். குண்டர்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தினர். அவர்களின் வீடுகள்-வாகனங்கள் சூறையாடப்பட்டுத் தீயிடப்பட்டன.

சோனாசுராவில் உள்ள வாக்குச்சாவடி கள்ள ஓட்டுப் போடுவதற்காகக் கைப்பற்றப்பட்டதால், இறைந்து கிடக்கும் வாக்குச் சீட்டுகள்.



www.padippakam.com

சிங்கூர் - நந்தி கிராமம் பகுதியில், அன்னிய சக்திகள் ஊடுருவி மக்களைத் தூண்டிவிட்டு வன்முறை வெறியாட்டங்களில் ஈடுபட்டு வருவதாகப் புளுகி, அடக்குமுறைகளை நியாயப்படுத்தி வந்த சி.பி.எம் கட்சி, தற்போதைய பஞ்சாயத்து தேர்தல் வெற்றி மூலம் தமது செல்வாக்கை நிரூபிக்கலாம்; பூமி பாதுகாப்பு இயக்கத்தினரை இத்தேர்தலைச் சாதகமாக்கிக் கொண்டு பழி வாங்கி ஒடுக்கலாம் என்று கணக்கு போட்டு, இப்பகுதிகளில் எப்படியாவது வெற்றி பெற வேண்டும் என்ற வெறியோடு குண்டர் படைகளை ஏவியது.



'மார்க்சிஸ்டு'களின் தேர்தல் வன்முறைத் தாக்குதலைக் கண்டித்து நந்திகிராமத்தில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணி.

சி.பி.எம் குண்டர்படையின் வன்முறைகள் பற்றிய புகார்கள் குவியத் தொடங்கியதும், தேர்தல் ஆணையம் மத்திய ரிசர்வ் போலீசுப் படையை இப்பகுதிகளில் குவித்தது. ஆனாலும், உள்ளூர் போலீசின் துணையுடன் சி.பி.எம் குண்டர்கள் தாக்குதலைத் தொடர்ந்தனர். மத்திய ரிசர்வ் போலீசு பல இடங்களில் சி.பி.எம்.குண்டர்கள் மீது தடியடி நடத்தி விரட்டி, பாதுகாப்பு அளித்த பிறகே எதிர்க்கட்சியினர் பிரச்சாரம் செய்ய முடிந்துள்ளது.

எதிர்க்கட்சியினரைத் தாக்குவதோடு மட்டும் சி.பி.எம்.குண்டர்களின் வெறியாட்டம் முடிந்து விடவில்லை. அரசு சன்மானங்களைப் பொறுக்கித் தின்னப் போட்டி போடும் 'இடதுசாரி' கூட்டணி கட்சிகளுக்குள்ளும் நாய் சண்டை முற்றி, புரட்சி சோசலிஸ்டு கட்சியினரும் சி.பி.எம். கட்சியினரும் 24 பர்கானா மாவட்டத்தில் வெளிப்படையாகவே மோதிக் கொண்டனர். சில தொகுதிகள் தமக்கு ஒதுக்கப்படாததை எதிர்த்து புரட்சி சோசலிஸ்டு கட்சி தனித்துப் போட்டியிடத் தொடங்கியதும், தோல்வி பயத்தில் சி.பி.எம். கட்சியினர், இக்கூட்டணிக் கட்சியின் முன்னணியாளர்கள் மீது வெடிகுண்டுத் தாக்குதலை நடத்தினர். பசந்தி தொகுதியில் புரட்சி சோசலிஸ்டு கட்சியின் அமைச்சரான சுபாஷ் பரஸ்கரின் உறவினரது வீடு சி.பி.எம். குண்டர்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. இதற்குப் பதிலடி கொடுக்க அக்கட்சியினர் எதிர்த்தாக்குதல் நடத்தியதில் இருதரப்பிலும் சேர்த்து நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

இது தவிர, மாநிலமெங்கும் நடந்த வன்முறை வெறியாட்டங்களில் எட்டு பேர் மாண்டதாகவும் 40-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்ததாகவும் செய்திகள் வருகின்றன. சி.பி.எம் கட்சித் தலைவர்களே தமது கட்சிக் குண்டர்களைக் கட்டுப்பாட்டுடன் அமைதியாகச் செயல்படுமாறு உபதேசிக்கும் அளவுக்கு, மாநிலமெங்கும் சி.பி.எம் குண்டர்களின் அட்டூழியம் தலைவிரித்தாடியதைப் பத்திரிகைகளும் அறிவுத்துறையினரும் வெளிப்படையாகக் கண்டித்துள்ளனர்.

நாடாளுமன்ற-சட்டமன்ற ஜனநாயகத்துக்கு வலதுசாரி கட்சிகளால் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகக் கூறிக் கொண்டு, அதைக் கட்டிக் காக்க ஓட்டு பொறுக்குவதை நியாயப்படுத்தி வந்த சி.பி.எம் கட்சி, இப்போது தானும் தன் பங்கிற்கு வன்முறை வெறியாட்டங்களில் இறங்கி, கேடுகெட்ட நாடாளுமன்ற ஜனநாயகத்தின் யோக்கியதையை நாடெங்கும் நாறடித்துள்ளது. அரசியல் பலமோ, அமைப்பு பலமோ இல்லாமல், அரசு சன்மானங்களைப் பொறுக்கித் தின்னும் பிழைப்புவாதிகளையே அணிகளாகக் கொண்டுள்ளதால், ஆட்சியதிகார பலத்தையும் இதர ஓட்டுக்கட்சிகளைப் போல குண்டர் படையையும்தான் அக்கட்சி பெரிதும் நம்பியுள்ளது. இப்பஞ்சாயத்துத் தேர்தலில், வன்முறை வெறியாட்டங்களின் மூலம் மாநில அளவில் அதிக இடங்களில் அக்கட்சி வெற்றி பெற்றுள்ள போதிலும், சிங்கூர் - நந்திகிராம வட்டாரத்தில் படுதோல்வியையே சந்தித்துள்ளது. ஏற்கெனவே நந்திகிராமத்தில் பாசிச வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டு உழைக்கும் மக்களை ஒடுக்கிய சி.பி.எம். கட்சி, தற்போதைய பஞ்சாயத்து தேர்தல் வன்முறை வெறியாட்டங்களால் பெயரளவுக்கான ''இடதுசாரி'' தோற்றத்தையும் இழந்து அம்மணமாகி நிற்கிறது.

● தனபால்

---

சென்ற மே 2008 இதழின் 6-ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ள ''நேபாளம்: இதுவன்றோ ஜனநாயகத் தேர்தல்'' என்ற பத்திரிக்கைச் செய்தியின் முதல் வரியாக, ''நேபாளத்தில் 10.4.2008 அன்று நடைபெற்ற அரசமைப்பு நிர்ணய சபை தேர்தலில்...'' என்பதற்குப் பதிலாக ''நேபாளத்தில் 10.2.2008 அன்று நடைபெற்ற...'' எனத் தவறாக அச்சாகியுள்ளது. எமது கவனக்குறைவால் நேர்ந்துவிட்ட இத்தவறுக்கு சுயவிமர்சனம் ஏற்பதோடு, இனி இதுபோன்ற தவறுகள் நேராமல் கவனமுடன் செயல்பட உறுதியேற்கிறோம்.

— ஆசிரியர் குழு.

www.padippakam.com

# நவீன் பிரசாத் கொலை
# தமிழகப் போலீசின் நரபலி

**போலீசின் 'மோதல்' நாடகத்தை மனித உரிமை அமைப்புகள் நடத்திய விசாரணை அம்பலப்படுத்தி விட்டது.**

நக்சல்பாரி புரட்சிகர அமைப்பான இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மாவோயிஸ்ட்)-ஐச் சேர்ந்த தோழர் நவீன், தமிழகப் போலீசாரால் கடந்த ஏப்ரல் 19 அன்று சந்தேகத்திற்கு இட மான முறையில் கொல்லப்பட்டார். ''ஏப்ரல் 19 அன்று, கொடைக்கானல் அருகேயுள்ள வடகவுஞ்சியில், அதிர டிப் போலீசார் தேடுதல் வேட்டை நடத் தினர்; அப்பொழுது அந்த வனப்பகுதி யில் பதுங்கியிருந்த ஏழெட்டு பேர் கொண்ட நக்சலைட்டு குழுவினர் போலீசார் மீது தாக்குதல் நடத்தினர். அதிரடிப் படையினர் தங்களைத் தற் காத்துக் கொள்ளத் திருப்பிச் சுட்டனர். ஒருமணி நேரம் நடந்த இம்மோதலில், நவீன் பிரசாத் கொல்லப்பட, மற்ற ஏழு நக்சலைட்டுகள் தப்பி யோடி விட்டனர்'' என இக் கொலை பற்றி போலீசார் சொன்ன திரைக்கதையையே, கிளிப் பிள்ளை போல அனைத்துப் பத்திரிகைகளும் செய்தியாக வெளியிட்டுள்ளன.

நவீன் கொல்லப்பட்ட பின்பு, அது பற்றி சட்டசபையில் பேசிய கருணாநிதி, ''தி.மு.க.வின் இரண்டு வருட ஆட்சியில் 24 நக்சலைட்டுகள் கைது செய்யப்பட்டுள்ளனர்; அவர்களுள் எட்டு பேர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ள னர். அதேசமயம், கடந்த (ஐந்து வருட) அ.தி.மு.க. ஆட்சியில் 56 நக்சலைட்டுகள் கைது செய் யப்பட்டிருந்தாலும், அவர்க ளுள் ஒருவர் மீதும் தேசியப் பாதுகாப்புச் சட்டம் பாய வில்லை'' என்ற புள்ளி விவ ரத்தை எடுத்துப் போட்டுள்ளார். எனவே 'தீவிரவாதிகளை' ஒடுக் குவதில் தனது 'சூத்திர' ஆட்சி எள்ளளவும் பார்ப்பன-பாசிஸ் டுகளின் (ஜெயா) ஆட்சிக்குச் சளைத்ததில்லை எனக் காட்டுவ தற்கு நவீனின் கொலையும் கருணாநிதிக்கு அமோகமாகப் பயன் படும்.

மாவோயிஸ்ட் கட்சியின் அனுதா பிகள் பலரும், ''போலீசார் நவீனை எங்கோ வைத்து அடித்துக் கொன்று விட்டு, மோதலில் இறந்து போனதாக நாடகமாடுவதாக''ப் பத்திரிகையாளர்க ளிடம் குறிப்பிட்டுள்ளனர். அவர் உட லின் பல இடங்களில் சித்திரவதைக் குள்ளான இரத்தக் காயங்கள் இருப்ப தையும்; அதேசமயம், அவரது ஆடை யில் குண்டு துளைத்துச் சென்றதற்கான அடையாளமோ, ஆடையில் இரத்தக் கறையோ இல்லாதிருப்பதையும் அத் தோழர்கள் பத்திரிகையாளர்களிடம் சுட்டிக் காட்டியுள்ளனர்.

''பாதிக்கப்பட்டவர்கள் வழக்க மாகப் பாடும் பிலாக்கணம்'' என்று இதனை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. மனித உரிமைகளுக்கான மக்கள் ஒன்றி யத்தைச் சேர்ந்த பேராசிரியர் அ.மார்க்ஸ் மற்றும் மோகன்குமார்; மக் கள் உரிமைக் கூட்டமைப்பைச் சேர்ந்த கோ.சுகுமாரன்; குடியுரிமைகளுக்கான மக்கள் ஒன்றியத்தைச் சேர்ந்த பேரா.கோச்சடை; குடியுரிமை பாது காப்பு மையத்தைச் சேர்ந்த வழக்குரை ஞர் தமயந்தி; ஜனநாயக உரிமைகள் பாதுகாப்பு கமிட்டி, மும்பய்-ஐச் சேர்ந்த விஞ்ஞானி எஸ்.கோபால்; தமிழக மக்கள் உரிமைக் கழகத்தின் மார்க்ஸ் இளவேனில் ஆகிய மனித உரிமை ஆர்வலர்கள் கையெ ழுத்திட்டு வெளியிட்டுள்ள உண்மை கண்டறியும் குழுவின் அறிக்கையும் கூட, நவீன் பிரசாத் போலி மோதல் மூலம் சுட்டுக் கொல்லப்பட்டிருக் கலாம் என்ற ஐயப்பாட்டை எழுப்பியிருக்கிறது.

குண்டு துளைத்த பின்னும் இரத்தக் கறையே படியாத நவீன் பிரசாத்தின் ஆடைகள்.
(உள்படம்) தோழர் நவீன் பிரசாத்.



மலைப்பகுதியில் இருந்து டோலியின் மூலம் கீழே கொண்டு வரப்பட்ட நவீன் பிர சாத்தின் உடல்தான் பத்திரிகை யாளர்களிடம் காட்டப்பட்டதே யொழிய, ''மோதல்'' நடந்த இடத்தைப் பத்திரிகையாளர்க ளுக்கோ, கிராம நிர்வாக அதி காரிகளுக்கோ, கிராமப் பஞ்சா யத்துத் தலைவருக்கோ காட்ட போலீசு மறுத்திருக்கிறது.

உண்மை அறியும் குழு மோதல் நடந்த இடமாகக் குறிப் பிடப்படும் வடகவுஞ்சிக்குச் சென்று விசாரணை நடத்திய தில், அங்கு மோதல் நடந்த தற்கோ, நக்சலைட்டுகளுக்கும் போலீசுக்கும் இடையே துப் பாக்கிச் சூடு நடந்ததற்கோ எந்த விதத் தடயத்தையும் அக்குழு வால் கண்டுபிடிக்க முடிய வில்லை.

www.padippakam.com

உண்மை அறியும் குழு வைச் சேர்ந்த வழக்குரைஞர் தமயந்தி, துணை போலீசு ஜெனரல் கிருஷ்ணமூர்த்தி யிடம் இது பற்றிக் குறிப்பிட்டு, மோதல் நடந்த இடத்தை அடை யாளம் காட்ட நீங்கள் உதவ முடியுமா எனக் கேட்டுள்ளார். அந்த அதிகாரியோ, ''உண்மை அறியும் குழு போலீசுக்கு எதிரா கத்தான் அறிக்கை கொடுக்கும் என ''க்யூ'' பிரிவு போலீசு அதி காரிகள் கூறுவதால், மோதல் நடந்த இடத்தை அடையாளம் காட்ட முடியாது'' என மறுத்து விட்டார்.

அறுங்காவல் என்ற ஊரைச் சேர்ந்த ஜார்ஜ் புஷ் என்பவர் மோதல் நடந்ததாகச் சொல்லப் படும் மலைப் பகுதியில்தான் வெகுகாலமாக ''டெண்ட்'' போட்டுத் தங்கி வந்துள்ளார். நவீன் கொல்லப்படுவதற்கு முதல் நாள் போலீ சார் திடீரென அவரைக் கைது செய்து சிறையில் அடைத்துவிட்டனர். உண்மை அறியும் குழு அவரைச் சிறை யில் சந்தித்த பொழுது, அவர், அந்தப் பகுதியில் தீவிரவாதிகள் நடமாட்டம் இருந்ததாக ஒரு வார்த்தைக்கூடச் சொல்லவில்லை.

நவீன் பிரசாத்தின் இடுப்புக்குக் கீழே கால் பகுதி முழுவதும் ஊசியால் குத்தப்பட்ட தடயங்கள் உள்ளன. இக் காயங்கள், போலீசார் நவீனை ஏற்கெ னவே பிடித்து வைத்து சித்திரவதை செய்திருக்கக் கூடும் என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளன. ஆனால், போலீ சாரோ அக்காயங்கள் காட்டு விஷ வண் டுகள் நவீனைக் கடித்ததால் ஏற்பட் டவை என மழுப்பி வருகின்றனர்.

அவர் உடலில் குண்டு துளைத்த தைப் பார்க்கும் பொழுது, நவீன் மிக அருகில் இருந்தே சுட்டுக் கொல்லப்பட் டிருக்கக் கூடும் என உண்மை அறியும் குழுவின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

மஞ்சள் பரப்பு பகுதியில் நவீன் பிர சாத் ஜவுளி வியாபாரி போல நடமாடி வந்ததை ஒப்புக் கொள்ளும் ஊர் மக் கள், அவர் பயங்கரவாத நடவடிக்கைக ளில் ஈடுபட்டு வந்ததாக உண்மை அறி யும் குழுவிடம் தெரிவிக்கவில்லை. எனவே, மோதல் நடந்த இடத்தில் இருந்து போலீசாரால் கைப்பற்றப்பட்ட தாகச் சொல்லப்படும் ஆயுதங்கள், வெடிகுண்டுகள் போன்றவை, சந்தன மரக் கடத்தல் கும்பலிடமிருந்து கைப் பற்றப்பட்டவையாக இருக்கக் கூடும்.



**போலீசாரின் சட்டவிரோதக் காவலில் விசுவநாதன் (இடது) இருப்பதை அம்பலப்படுத்திய உண்மை அறியும் குழுவின் செல்ஃபோன் புகைப்படம்.**

இதன் மூலம் போலீசார் மலைவாழ் கிராம மக்களிடம் 'தீவிரவாதிகள்' பற்றி தேவையற்ற பயத்தை உருவாக்க முனைகிறார்கள் என்றும் அக்குழுவின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

நவீன் பிரசாத் கொல்லப்படுவதற்கு ஏழு நாட்கள் முன்னதாக, தாமரைக் குளத்தைச் சேர்ந்த விசுவநாதன் உள் ளிட்ட ஐந்து பேரை, போலீசார் விசா ரணை என்ற பெயரில் இழுத்துச் சென்று சட்டவிரோதக் காவலில் அடைத்து வைத்துள்ளனர். இந்தக் கைது பற்றிய செய்தி, ஏப்ரல் 13 அன்று டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழ், சென்னை பதிப்பில் கசிந்து வெளியே வந்து விட்டது.

எனினும், நாங்கள் விஸ்வநாத னைக் கைது செய்யவில்லை என போலீ சார் மறுத்ததால், இது தொடர்பான ஆட் கொணர்வு மனு ஏப்.18 வெள்ளிக்கிழ மையன்று சென்னை உயர்நீதி மன்றத் தில் தாக்கல் செய்யப்பட்டது. நீதிபதி முருகேசன் அம்மனு மீதான விசார ணையை திங்கட்கிழமைக்கு (ஏப்.21) ஒத்தி வைத்தார். இந்த இடைவேளை யில் நவீன் பிரசாத் கொல்லப்படுகிறார்.

இக்கொலை பற்றி உண்மை அறி யும் குழு தாமரைக்குளத்தில் விசாரித் துக் கொண்டிருந்த வேளையில்தான், அர்ஜுனன், மேரி, வீமா மற்றும் விசுவ நாதனின் மைத்துனர் ரத்தினம் ஆகிய நால்வரும் போலீசின் சட்டவிரோதக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டு, ஊருக்குத் திரும்பினர். அவர்கள் பயம் காரணமாக உண்மை அறியும் குழுவி டம் எந்தத் தகவலையும் சொல்ல மறுத் துவிட்டனர். எனினும், மற் றொரு நபர் ஊரின் எல்லையில் நின்று கொண்டிருக்கும் டாடா சுமோ காரில் உட்கார வைக்கப் பட்டிருப்பதை அறிந்து, உண்மை அறியும் குழுவினர் அங்கு சென்ற பொழுது, ''அந்த நபர் விசுவநாதன் என்பதும், அவர் ''க்யூ'' பிரிவு போலீசின் பிடியில் இருப்பதும்'' தெரிய வந்தது. அந்தக் காட்சியை உண்மை அறியும் குழு செல் ஃபோன் மூலம் படம் பிடித்து, அதனைச் சாட்சியமாக நீதிமன் றத்தில் தாக்கல் செய்தது.

தமிழகப் போலீசின் நாடகம் அம்பலமான பிறகுதான், விசுவ நாதன் ஏப்ரல் 28 அன்று நீதிமன் றத்தில் ஒப்படைக்கப்பட்டார். விசுவநாதன் நீதிமன்ற விசார ணையின்பொழுது, ''தன்னை யாரும் கடத்தவில்லை'' எனக் கூறிவிட் டதால், தமிழக போலீசின் சட்டவிரோத நடவடிக்கைகள் அம்பலமாகாமல் மூடி மறைக்கப்பட்டு விட்டது.

தேனி மாவட்டம் வருசநாடு, முருகமலை, திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல், தாண்டிக்குடி உள் ளிட்ட மலைப் பகுதிகளில் நக்சலைட்டு களைத் தேடுவது என்ற பெயரில் போலீசு ராஜ்ஜியம் நடந்து கொண்டி ருப்பதைத்தான் நவீன் பிரசாத் படுகொ லையும், விசுவநாதனின் சட்ட விரோ தக் காவலும் நிரூபிக்கின்றன. மேலும், போலீசாரால் தேடப்படுவதாகக் கூறப் படும் காளிதாஸ், ரஞ்சித் உள்ளிட்ட பிற மாவோயிஸ்ட் கட்சித் தோழர்க ளும் போலீசாரின் சட்டவிரோதக் காவ லில் இருக்கலாம் என்ற ஐயத்தையும் அதிரடிப் போலீசின் மர்ம நடவடிக்கை கள் ஏற்படுத்தியுள்ளன. ''போலீசார் இவர்களைப் போலி மோதலில் கொல் வதற்கு முன்னதாக, நீதிமன்றம் இப் பிரச்சினையில் தலையிட வேண்டும். இதற்காக, ஆட்கொணர்வு மனு வொன்றைத் தாக்கல் செய்யப் போவ தாக'' உண்மை அறியும் குழு தெரிவித் திருக்கிறது.

நக்சல்பாரிகள் பற்றி அவதூறுகள் பரப்புவதன் மூலம், அவர்களை மக்களி டமிருந்து தனிமைப்படுத்தி விடலாம்; அரசு பயங்கரவாதத்தை ஏவிவிட்டு, நக் சல்பாரிகளை ஒடுக்கிவிடலாம் எனக் கனவு காண்கிறார், மு.க. ஆனால், வர லாற்றின் வளர்ச்சி ஆளும் கும்பலின் கற்பனை போல அமைந்து விடுவதில் லையே!

**● குப்பன்**



படிப்பகம்

www.padippakam.com

# கருத்துரிமைக்குக் கல்லறை

## அரசின் கொள்கைகளை விமர்சிப்பவர்களைக் கூடப் பயங்கரவாதிகள் என முத்திரை குத்துகிறது, ஆளும் கும்பல்.

சட்டீஸ்கர் மாநிலத்தைச் சேர்ந்த பத்திரிக்கையாளரும், ஆவணப் படத் தயாரிப்பாளரும், குடியுரிமைகளுக்கான மக்கள் சங்கத்தின் மாநில நிர்வாகிகளுள் ஒருவருமான அஜய் தாச்சப்புள்ளி கங்காதரன் என்பவர், மே மாதம் 5-ஆம் தேதி, சட்டீஸ்கர் மாநில சிறப்புப் பொது பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். அவர் மீது அரசுத் துரோகக் குற்றச்சாட்டும்; தடை செய்யப்பட்டுள்ள இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மாவோயிஸ்டு) - உடன் தொடர்பு வைத்திருந்தார் என்றும் இரண்டு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இந்திய ஆளும் வர்க்கம் மனித உரிமைகளை மயிரளவிற்குக் கூட மதிப்பதில்லை என்பதற்கு இந்தக் கைது இன்னுமொரு எடுத்துக்காட்டு.

கடந்த ஆண்டு இதே மே மாதத்தில் (மே 14, 2007) குடியுரிமைகளுக்கான மக்கள் சங்கத்தின் அனைத்திந்திய துணைத் தலைவரும், (சட்டீஸ்கர்) மாநிலச் செயலாளருமான பினாயக் சென், இதே சிறப்புப் பொது பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டது வாசகர்களுக்கு நினைவில் இருக்கலாம் (பு.ஜ. ஜூலை 2007). சர்வதேசப் புகழ் பெற்ற குழந்தை மருத்துவ நிபுணரும், மனித உரிமைப் போராளியுமான பினாயக் சென்னுக்குப் பிணையும் மறுக்கப்பட்டு, அவர் கடந்த ஓராண்டாகவே சிறைத்தண்டனை அனுபவித்து வருகிறார்.


இந்திய அரசு, பினாயக் சென்னைப் பயங்கரவாதக் குற்றவாளியாகச் சித்தரித்தாலும் அமெரிக்காவைச் சேர்ந்த உலக நலவாழ்வுக் கழகம், சென்னின் மருத்துவச் சேவையைப் பாராட்டி இந்த ஆண்டிற்கான ''ஜொனதான்மான்'' விருதை, அவருக்கு வழங்கியிருக்கிறது. இதனையொட்டி, பல்வேறு மனித உரிமை அமைப்புகளும், மருத்துவர்களும் மட்டுமின்றி நோபல் பரிசு பெற்ற அறிஞர்கள் பலரும் பினாயக் சென்னை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர். இந்த வேண்டுகோளுக்கு சட்டீஸ்கர் மாநில அரசு அளித்த அநாகரிகமான பதில், அஜயின் கைது.

சமூக சேவகரான அஜய் கைது செய்யப்பட்ட விதம் மட்டுமன்று, அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளும் இந்திய அரசின் பாசிச வக்கிர புத்தியைத்தான் எடுத்துக் காட்டுகின்றன.

2004-இல் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்ற பொழுது, அத்தேர்தலைப் புறக்கணிக்குமாறு இ.பொ.க. (மாவோயிஸ்டு) அறைகூவல் விடுத்தது. சட்டீஸ்கர் மாநில அரசோ, எப்படியாவது பழங்குடி இன மக்களை ஓட்டுப் போட வைத்து, மாவோயிஸ்டுகளின் அறைகூவலை முறியடித்து விட வேண்டும் என்ற நோக்கில், மத்திய ரிசர்வ் போலீசு படையைக் கிராமங்கள்தோறும் நிறுத்தியது.

இந்த நிலையில், அஜய், பினாயக் சென் உள்ளிட்ட சிலர், மக்களின் மனநிலையை அறிய, தேர்தல் நடந்த நாளன்று பல்வேறு கிராமங்களுக்குச் சென்று நிலைமையை ஆய்வு செய்தனர். அன்று மாலை 4 மணியளவில், ஒரு கிராமத்திற்கு வந்த அவர்கள், அக்கிராமம் ஆள் அரவமின்றி வெறிச்சோடிக் கிடந்ததைக் கண்டனர். வாக்குச்சாவடியும் ''அநாதையாக''க் கிடப்பதைக் கண்ட அஜய், தனது புகைப்படக் கருவியால் அதனைப் படமெடுக்க முயன்றார்.

அந்த சமயத்தில் மாவோயிஸ்டுகளை ஆதரிக்கும் இளைஞர்கள் சிலர், அஜயையும் அவரது நண்பர்களையும் சுற்றி வளைத்துக் கொண்டனர். இவர்கள் போலீசின் ஏஜெண்டுகளாக இருக்கலாம் எனச் சந்தேகப்பட்ட அந்த இளைஞர்கள், அஜயையும், அவரது நண்பர்களையும் சிறை பிடித்தனர். இரவு வெகு நேரம் கழித்தே அவர்களைக் கிராமத்தில் இருந்து திரும்பிப் போக அனுமதித்தனர். எனினும், அந்த இளைஞர்கள் அஜயிடமிருந்து பறித்துக் கொண்ட புகைப்படக் கருவியைத் திருப்பித் தர மறுத்துவிட்டனர்.



மனித உரிமைப் போராளி மருத்துவர் பினாயக் சென்.

இவ்விரும்பத்தகாத சம்பவத்தைக் கேள்விப்பட்ட இ.பொ.க. (மாவோயிஸ்ட்) தலைமை, ''புகைப்படக் கருவியைத் திருப்பித் தந்து விடுகிறோம்; இல்லையென்றால் அதற்குரிய நட்டஈட்டைக் கொடுத்து விடுகிறோம்'' என அஜய்க்கு உறுதியளித்தது. நடந்த சம்பவங்கள் அனைத்தும், இருட்டடிப்போ, மிகைப்படுத்தவோ இன்றி பத்திரிகைகளிலும் வெளிவந்தது.

இச்சம்பவம் நடந்து முடிந்து ஏறத்தாழ மூன்றரை ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையில், மாவோயிஸ்டு கட்சிக்கு ஆயுதம் கடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் இரண்டு பெண்களை சட்டீஸ்கர் போலீசார் கைது செய்தனர். அப்பெண்



படிப்பகம்

www.padippakam.com

களுள் ஒருவரின் வீட்டை போலீசார் சோதனையிட்ட பொழுது, மாவோயிஸ்ட் கட்சியின் பத்திரிகை தொடர்பாளருக்கு அஜய் எழுதிய கடிதத்தைக் கைப்பற்றினர். அக்கடிதம் தனது புகைப்படக் கருவியைத் திருப்பித் தந்தது தொடர்பாக அஜயால் எழுதப்பட்டது. இது தொடர்பாக அஜயிடம் போலீசார் விசாரணை மேற்கொண்ட பொழுது, அவர் அந்தக் கடிதத்தை எழுதியதை ஒப்புக் கொண்டதோடு, எந்தச் சூழ்நிலையில் அந்தக் கடிதம் எழுதப்பட்டது என்பதையும் போலீசாரிடம் விளக்கினார். கிரிமினல் புத்தி கொண்ட போலீசாரோ, அஜயின் கணினியைக் கைப்பற்றி எடுத்துச் சென்றனர்.



தனது பள்ளியில் படிக்கும் ஏழைக் குழந்தைகளுடன் அஜய் தாச்சப்புள்ளி கங்காதரன். (வலது ஓரம் - கோப்புப்படம்)

அஜய், தனது கணினியைத் திருப்பித் தர உத்திரவிடக் கோரி நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். இவ்வழக்கு மே 10-ஆம் தேதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அதற்கு ஐந்து நாட்கள் முன்னதாகவே போலீசார் அஜயை, பொடாவுக்கு இணையான சிறப்புப் பொது பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்தனர். அஜயை இக்கருப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய போலீசார் முக்கிய ஆதாரமாகக் காட்டும் கடிதம் 2004-ஆம் ஆண்டு எழுதப்பட்டுள்ளது. ''குற்றம் நடந்த காலகட்டத்தில்'' 2004-இல் இச்சட்டம் அமலுக்கு வரவேயில்லை என்பது தான் இதில் ''வேடிக்கையானது''.

பினாயக் சென்னைச் சிறப்புப் பொது பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யும் பொருட்டு போலீசார் அவர் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகளும் இட்டுக்கட்டப்பட்டவைதான். சட்டீஸ்கர் மாநிலத்திலுள்ள ராய்ப்பூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள மாவோயிஸ்டு கட்சியின் தலைவர் நாராயண் சன்யாலை, பினாயக் சென், 33 முறை சந்தித்தார் என்பது அரசின் குற்றச்சாட்டு. போலீசார் குறிப்பிடும் 33 முறையும், பினாயக் சென் நாராயண் சன்யாலை போலீசு உயர் அதிகாரிகள்-சிறைத்துறை அதிகாரிகள் அனுமதியோடுதான் சந்தித்திருக்கிறார். 33 சந்திப்புகளும் சிறைத்துறை அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ், சன்யாலுக்கு மருத்துவம் செய்வது தொடர்பாகத்தான் நடந்தது என்பதும் அரசின் ஆவணங்களிலேயே பதிவாகியிருக்கிறது.

இச்சந்திப்புகளின் பொழுது, சன்யால் தரும் கடிதங்களை சிறைக்கு வெளியே கடத்திக் கொண்டு போய், உரியவர்களிடம் ஒப்படைக்கும் தபால்காரன் வேலையை பினாயக் சென் செய்தார் என்பது இன்னுமொரு குற்றச்சாட்டு. மாவோயிஸ்டு கட்சியின் ஆதரவாளராகக் குற்றம் சாட்டப்பட்டிருந்த பியுஷ் குகா என்ற விசாரணைக் கைதி அளித்துள்ள வாக்குமூலத்தை இக்குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக போலீசார் காட்டியுள்ளனர். ஆனால், பியுஷ் குகா நீதிமன்ற விசாரணையின் பொழுது, போலீசார் தன்னைச் சித்திரவதை செய்து, வெற்றுக் காகிதத்தில் கையெழுத்துப் போடச் செய்து, வாக்குமூலத்தை எழுதிக் கொண்டதாக உண்மையை போட்டு உடைத்துவிட்டார்.

''நக்சலைட்டு'' என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள பிரசாந்த் ராஹி (இடது) மற்றும் ''உல்பா'' தீவிரவாதி என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள லாசித் போர்தோலோய்.



சட்டீஸ்கர் மாநில அரசு கொண்டு வந்துள்ள பொது பாதுகாப்புச் சட்டம் என்பது உண்மையில் பன்னாட்டு நிறுவனங்களையும், இந்தியத் தரகு முதலாளிகளையும் பாதுகாக்கும் சட்டம். அம்மாநில வனப் பகுதிகளில் புதைந்து கிடக்கும் கனிம பொருட்களைப் பன்னாட்டு நிறுவனங்களுக்கும், தரகு முதலாளிகளுக்கும் கூறு போட்டு விற்கும் சதித் திட்டத்தை, மாநில அரசும், மைய அரசும் கூட்டுச் சேர்ந்து கொண்டு தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றன. இம்மறுகாலனி ஆதிக்கக் கொள்ளையை எதிர்த்துப் போராட பழங்குடி இன மக்களைத் திரட்டி வரும் இ.பொ.க (மாவோயிஸ்டு)-ஐ ஒடுக்குவதற்காக, இப்பாசிசச் சட்டத்தோடு சல்வாஜுடும் என்ற பெயரில் சட்ட விரோத குண்டர் படையையும் அம்மாநில அரசு இயக்கி வருகிறது. (பு.ஜ. ஜூன் 2006). இக்குண்டர் படை கடந்த மூன்று ஆண்டுகளில் 1,000-க்கும் மேற்பட்டோரைக் கொன்று குவித்துள்ளது. 4,000-க்கும் மேற்பட்ட பழங்குடி இன மக்களின் குடிசைகளைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளது. இப்பயங்கரவாதத்தை அம்பலப்படுத்தியதால்தான், பினாயக் சென்னும், அஜயும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இருவர் மட்டுமல்ல, ''பொருளாதார வளர்ச்சி'' என்ற பெயரில் பழங்குடி இன மக்கள் மீது அரசு நடத்தி வரும் தாக்குதல்களை அம்பலப்படுத்தி எழுதியதற்காக கமலேஷ் பாய்க்ரா, அப்சல்கான் என்ற இரு பத்திரிகையாளர்கள் மிரட்டப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளனர்; தண்டேவாடா பகுதியைச் சேர்ந்த பழங்குடி இன மக்கள் தங்களின் நிலம் ''தொழில் வளர்ச்சி''க்காகப் பிடுங்கப்படுவதை எதிர்த்து நடத்திய போராட்டத்தில் கலந்து கொள்ள வந்த சி.பி.ஐ. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குருதாஸ் தாஸ்குப்தா, போலீசா


படிப்பகம்

www.padippakam.com




**பினாயக் சென்னை விடுதலை செய்யக் கோரி, சென்னையிலும் (மேல்படம்), வட இந்தியாவிலும் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள்.**

ரின் கண் முன்னாலேயே குண்டர்களால் வழிமறிக்கப்பட்டு, மிரட்டப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டார்; சல்வாஜுடும் குண்டர் படை நடத்திவரும் அட்டூழியங்களை அம்பலப் படுத்தியதற்காக, ''வனவாசி சேத்னா ஆசிரம''த்தை நடத்தி வரும் காந்தியவாதியான ஹிமான்ஷு குமார், அரசின் மிரட்டலைச் சந்தித்து வருகிறார். பினாயக் சென், அஜய் உள்ளிட்டு இதுவரை 43 பேர் பொது பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

முதலாளித்துவ அறிவுஜீவிகளால் கூட சல்வாஜுடுமை நியாயப்படுத்த முடியவில்லை. மைய அரசின் திட்ட கமிசன் மட்டுமின்றி, உச்சநீதி மன்றம் கூட சமீபத்தில் சல்வாஜுடுமைக் கண்டித்துக் கருத்துக் கூறியிருக்கிறது. எனினும், பினாயக் சென்னுக்குப் பிணை வழங்கக் கோரி தொடரப்பட்ட வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டனர், உச்சநீதி மன்ற நீதிபதிகள். சல்வாஜுடும் பொது மக்களுக்கு ஆபத்தானதாக இருக்கலாம்; ஆனால், பினாயக் சென்னோ அரசின் தனியார்மயக் கொள்கைக்கு ஆபத்தானவராக இருக்கிறார் என்ற உண்மை, நீதிபதிகளை அச்சுறுத்தியிருக்கக் கூடும்.

அரசின் தனியார்மயக் கொள்கையை, அதனின் பயங்கரவாத நடவடிக்கைகளை அம்பலப்படுத்தும் அனைவரையும், அரசு எதிரிகளாகப் பார்க்கத் தொடங்கி விட்டது. அவர்களை மாவோயிஸ்டுகளாக முத்திரை குத்தி, சிறையில் தள்ளும் போக்கு அதிகரித்து வருகிறது.

- உத்தர்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த பிரசாந்த் ராஹி என்ற பத்திரிகையாளர், ரியல் எஸ்டேட் மற்றும் கள்ளச் சாராய மாஃபியா கும்பலை எதிர்த்து மக்களை அணிதிரட்டி போராடியிருக்கிறார். போலீசுக்கு நெருக்கமான இந்த சமூக விரோதிகளை எதிர்த்துப் போராடிய காரணத்திற்காக, அவரை இ.பொ.க. (மாவோயிஸ்ட்) கட்சியின் பிராந்திய தளபதி என முத்திரை குத்தி, கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் கைது செய்துவிட்டது, உத்தர்கண்ட் மாநில அரசு.

- சட்டீஸ்கர் மாநிலத்தைச் சேர்ந்த மானுடவியல் அறிஞரான பிரஃபுல் ஜா அரசின் கொள்கைகளை விமர்சித்து எழுதியதற்காக, மாவோயிஸ்டுகளுக்கு ஆயுதம் கடத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் சனவரி 22, 2008 அன்று கைது செய்யப்பட்டார்.

- அசாமைச் சேர்ந்த பத்திரிகையாளரும், மனித உரிமைப் போராளியுமான லாசித் போர்தோலோய், மைய அரசிற்கும், அசாம் விடுதலை முன்னணிக்கும் இடையே நடந்த அமைதிப் பேச்சு வார்த்தையில் முக்கிய பங்காற்றி வந்தார். இந்த அமைதிப் பேச்சு வார்த்தையைச் சீர்குலைக்க இராணுவமும், துணை இராணுவப் படைகளும் நடத்திய சதிகள் குறித்த தகவல்களை லாசித் திரட்டி வந்தார். இதனாலேயே, ''இந்திய விமானத்தைப் பாகிஸ்தானுக்குக் கடத்திச் செல்ல அசாம் விடுதலை முன்னணி தீட்டிய திட்டத்திற்கு லாசித் உடந்தையாக இருந்தார்'' என்ற குற்றச்சாட்டின் கீழ் லாசித் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

பினாயக் சென், அஜய், பிரசாந்த் ராஹி, பிரஃபுல் ஜா - இவர்களுக்கும் மாவோயிஸ்டுகளுக்கும் இடையே அமைப்பு ரீதியான தொடர்பு கிடையாது; ஆயுதம் தாங்கிய வன்முறைப் போராட்டத்தை எதிர்ப்பவர்கள் இவர்கள் என்பதற்குப் பல ஆதாரங்கள் அரசிடம் காட்டப்படுகின்றன. ஆனால், அரசோ, ''நீங்கள் எங்கள் பக்கம் இல்லையென்றால், அவர்கள் பக்கம்தான்' என ஜார்ஜ் புஷ்ஷின் மொழியில் பதில் சொல்கிறது. இதன்படி பார்த்தால், அரசின் கொள்கையை எதிர்த்து உண்ணாவிரதம் இருக்கும் சாதாரணக் குடிமகன் கூட, பயங்கரவாதி ஆகிவிடுவான்; நக்சலைட்டு ஆகிவிடுவான். இதைவிட முக்கியமாக, அரசின் விளக்கம், ''மறுகாலனிய எதிர்ப்புப் போரில், நடுநிலை என்ற பேச்சுக்கே இடமில்லை'' என அடித்துச் சொல்கிறது. முதலாளித்துவத்திற்கும், கம்யூனிசத்திற்கும் இடையே ஏதோ ஒன்று இருக்கும் என்ற நடுத்தர வர்க்க அறிவுஜீவிகளின் கனவில் விழுந்துள்ள சம்மட்டி அடி இது.

**● செல்வம்**



படிப்பகம்

www.padippakam.com

# சாராயச் சாவுகள்
# கொலைகாரர்கள் யார்?

கடந்த மே மாத மத்தியில், கர்நாடக எல்லையை ஒட்டியுள்ள ஒசூர் பகுதியில் நடந்துள்ள விஷச் சாராயச் சாவுகள் தமிழகத்தையே அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளன. 18.5.08 அன்று பின்னமங்கலம் கிராமத்தில் மட்டும் 9 பேர் மாண்டு போயுள்ளனர். ஓசூர், தேன்கனிக்கோட்டை வட்டத்திலுள்ள பல கிராமங்களில் அடுத்தடுத்த நாட்களில் சாராயச் சாவுகள் அதிகரித்து மொத்தத்தில் 60-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 100-க்கும் மேற்பட்டோர் கவலைக்கிடமான நிலையில், மருத்துவமனைகளில் கிடத்தப்பட்டுள்ளனர். கணவனை இழந்த மனைவி, பெற்றோரை இழந்த குழந்தைகள், மகனை இழந்த தாய் என இவ்வட்டாரம் மாளாத் துயரத்தில் விம்மிக் கொண்டிருக்கிறது. ஒசூரை அடுத்த கர்நாடக எல்லைப் பகுதிகளிலும் விஷச் சாராயத்துக்குப் பலியானோர் எண்ணிக்கை 170-ஐத் தாண்டி விட்டது.

மெத்தனால் கலந்த கள்ளச் சாராயத்தை தமிழகத்துக்குக் கடத்தி வரவும், எல்லையோரக் கிராமங்களில் விற்பனை செய்யவும் அனுமதித்து, சாராயக் கும்பலுடன் கூட்டுச் சேர்ந்துள்ள தமிழகப் போலீசு, தற்போதைய சாராயச் சாவுகள் மூலம் தமது கிரிமினல் குற்றங்கள் வெளிவரத் தொடங்கியதும் அவற்றை மூடி மறைக்க பல தகிடுதத்தங்களைச் செய்து வருகிறது. கர்நாடகாவுக்கு வேலைக்குச் சென்றவர்கள் அங்கு விற்ற விஷச் சாராயத்தைக் குடித்து மாண்டதாகவும், தமிழகத்தில் கள்ளச் சாராயமே கிடையாது என்றும் புளுகி வருகிறது. மேலும், இறந்தவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றால், பிரேதப் பரிசோதனையால் மாண்டவரின் உடல் விகாரமாகி விடும்; வழக்கு - வாய்தா என்று கோர்ட்டுக்கு அலைய நேரிடும் என்று பீதியூட்டி உடனடியாகப் புதைக்கச் செய்து, சாவு எண்ணிக்கையைக் குறைத்துக் காட்டியுள்ளது.

சாராய கிரிமினல் கும்பலிடம் வாங்கி, உள்ளூரில் சாராயத்தை விற்று கைது செய்யப்பட்டுள்ள பலரில் பின்னமங்கலத்தைச் சேர்ந்த பார்வதி என்பவரும் ஒருவர். இவரும் இவருக்குச் சாராய சப்ளை செய்த மாதப்பாவும் நேற்றுவரை சி.பி.எம். கட்சி ஆதரவாளர்களாக இருந்து, அண்மையில் தளி எம்.எல்.ஏ. இராமச்சந்திரன் ஆசியுடன் வலது கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்துள்ளனர். சாராய கும்பலுடன் போலீசும் அதிகார வர்க்கமும் மட்டுமின்றி, புரட்சி பேசும் வலது கம்யூனிஸ்ட் கட்சியும் கூட கூட்டுச்சேர்ந்து சீரழிந்து கிடக்கிறது.

சாராயம் காய்ச்சி விற்பது என்பது நம் நாட்டில் காலங்காலமாக நடந்து வந்த தொழில்தான். ஆனால், பெரும் சீமைச் சாராய ஆலைகள் வைத்து நடத்தும் தொழிலதிபர்கள் உருவானதும், சாராய உற்பத்தி, விற்பனைக்கு விதிக்கப்படும் கலால் வரியானது அரசு வருவாய்க்கு முக்கிய மூலாதாரமாகியது. அதன் பின்னர்தான், இந்த ஏற்பாட்டுக்கு வெளியே சாராயம் காய்ச்சி விற்பது குற்றத் தொழிலாக - சட்டவிரோதத் தொழிலாக்கப்பட்டது. இருப்பினும் வறுமை காரணமாக வயிற்றுப் பிழைப்புக்காக சிலர் சாராயம் காய்ச்சி விற்பது தொடரத்தான் செய்கிறது.

ஆனால், கள்ளச் சாராயத் தொழிலில் புகுந்துள்ள கிரிமினல் குற்றக் கும்பல்கள் வேறு வகையினர். இவர்கள் சாராய ஊறல், அடுப்பு, பானை என்று தொழில் செய்வதில்லை. அதைவிட மலிவான, காட்டமான போதை தரும் சாராயத்தை மெத்தனால், எரிசாராயம் மற்றும் பிற இரசாயனக் கலவைகளைக் கொண்டு தயாரித்து குறுகிய காலத்திலேயே கோடிகளை அள்ளுகின்றனர்.

உள்ளூர் ஓட்டுக்கட்சித் தலைவர்கள் - போலீசு அதிகாரிகளின் கூட்டாளியாகவோ பினாமியாகவோ உள்ள இச்சாராய கிரிமினல்களில் சிலர் அரசியல் தலைவர்களாகவும், இன்னும் சிலர் வீட்டுமனைத் தொழில் முதலானவற்றில் இறங்கி புதிய தொழிலபதிபர்களாகவும், சுயநிதிக் கல்லூரி நடத்தும் கல்வித் தந்தையாகவும் பரிணமிக்கின்றனர். இச்சாராய கிரிமினல் கும்பல்கள்தான் கூலிப் படையைக் கட்டியமைத்துக் கொண்டு தேர்தல் சமயங்களில் கள்ள ஓட்டு, வெடிகுண்டு வீச்சு, வாக்குச் சாவடிகளைச் சூறையாடி குறிப்பிட்ட வேட்பாளரை வெற்றி பெற வைப்பது என எல்லா வகை வன்முறை வெறியாட்டங்களையும் முன்னின்று நடத்துகின்றன. இதே மாதிரியான சட்டவிரோத - சமூக விரோத வேலைகளை சீமைச் சாராய ஆலை அதிபர்கள் மேல் மட்டத்தில் செய்கின்றனர். இவர்கள் வாரியிறைக்கும் கள்ளப் பணத்தில்தான் தேர்தல் திருவிழா தடபுடலாக நடக்கிறது. அமைச்சர்களைத் தெரிவு செய்வது, ஆட்சிகளைக் கவிழ்ப்பது வரை இவர்களது ஆதிக்கமும் செல்வாக்கும் கொடி கட்டிப் பறக்கிறது.

விஷச் சாராயத்தால் நினைவிழந்தவர் அரசு மருத்துவமனைக்குத் தூக்கி வரப்படுகிறார்.



இன்று நாடெங்கும் இப்படிப்பட்ட சீமைச் சாராய மன்னர்களும் உள்ளூர் கள்ளச் சாராய தளபதிகளும் அவர்களோடு கூட்டுச் சேர்ந்துள்ள ஓட்டுக் கட்சித் தலைவர்கள் - அதிகாரிகள் - போலீசு கும்பலும் கொண்ட சாராய சாம்ராஜ்ஜியம்தான் கோலோச்சுகிறது. இவர்கள்தான் கோடிக்கணக்கான மக்களின் வாழ்வைப் பறிப்பவர்கள். உற்றார் உறவினர்களை விஷச் சாராயத்துக்குப் பலி கொடுத்து விட்டு உழைப்பாளி பெண்களும் குழந்தைகளும் அனாதரவாக நிற்கக் காரணமானவர்களும் இவர்கள்தான். ஆனால், இவர்களையெல்லாம் பாது



படிப்பகம்

www.padippakam.com




கள்ளச் சாராயக் கும்பலின் அதிகாரத் தொடர்புகளை அம்பலப்படுத்திய பு.ஜ.தொ.மு.வின் சுவரொட்டி இயக்கம்.

காத்துக் கொண்டு வயிற்றுப் பிழைப்புக்காக மெத்தனால் சாராயம் விற்றவர்களை மட்டுமே குற்றவாளிகளாகக் காட்டுகிறது அரசு. மறுபுறம் இது கர்நாடக விஷச் சாராயம்; தமிழகத்தில் உற்பத்தியாகவில்லை என்று கூறி நழுவிக் கொள்கிறது. இக்கள்ளச் சாராய விற்பனை தமிழக போலீசின் ஆதரவோடுதான் நடந்துள்ளது என்றாலும், போலீசு கும்பலைக் கைது செய்து தண்டிப்பதற்குப் பதில், மதுவிலக்கு கூடுதல் டி.ஜி.பி. திலகவதியை பணிமாற்றம் செய்தும் தளி போலீசு நிலையத்தைச் சேர்ந்த போலீசாரைத் தற்காலிகப் பணி நீக்கம் செய்தும் அதிரடி நடவடிக்கைகளை எடுத்துள்ளதைப் போல காட்டிக் கொள்கிறது, தமிழக அரசு.

தற்போதைய ஓசூர் விஷச் சாராய சாவுகள் விவகாரத்தில் மட்டுமல்ல; இதற்கு முன் 1998-இல் ஓசூரை அடுத்த சூளகிரியில் விஷச்சாராயத்தால் 50-க்கும் மேற்பட்டோர் பலியானபோதும், 2001-இல் சென்னை - செங்குன்றத்தில் 50-க்கும் மேலானோர் கொல்லப்பட்ட போதும் எந்தவொரு போலீசுக்காரனோ, அதிகாரியோ தண்டிக்கப்படவில்லை. இதுதான் சாராயத்தால் செழிக்கும் ஓட்டுக் கட்சி ஜனநாயகத்தின் யோக்கியதை! இக்கேடு கெட்ட கொலைகார சாராய ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்காமல் கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியாது. சமூக விரோத கள்ளச் சாராய கிரிமினல் கும்பலைப் பிடித்து உழைக்கும் மக்களே தண்டிக்காதவரை, தொடரும் சாராயச் சாவுகளைத் தடுத்து விடவும் முடியாது.

– பு.ஜ. செய்தியாளர்கள், ஓசூர்.

# நீதி கொன்ற மோடி

**குஜராத் முசுலீம் படுகொலைகளை விசாரித்துவரும் நானாவதி கமிசனைத் தனது கைப்பாவையாக மாற்ற முயலுகிறார், நரேந்திர மோடி.**

குற்றவாளியே நீதி வழங்கும் பொறுப்பில் இருந்தால் என்ன நடக்கும்? அந்தத் திருப்பணியை, குஜராத் முதல்வர் நரேந்திர மோடி மிக நேர்த்தியாகச் செய்து வருகிறார். 2002-ஆம் ஆண்டு குஜராத்தில் நடந்த முசுலீம் படுகொலை கலவரத்தை விசாரிக்க, மோடி நானாவதி கமிசனை அமைத்தார். அப்படுகொலை நடந்து முடிந்து ஆறு ஆண்டுகள் கழிந்து விட்டபிறகும், அந்த கமிசன் விசாரணை என்ற பெயரில் மாவு அரைத்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில், அக்கமிசனைச் சேர்ந்த இரண்டு நீதிபதிகளுள் ஒருவரான கே.ஜி. ஷா என்பவர் சமீபத்தில் இறந்து போய்விட்டார்.

குஜராத் கலவரத்தில் பாதிக்கப்பட்ட முசுலீம்களுக்காக வழக்குகளை நடத்தி வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், கே.ஜி.ஷாவின் இடத்தில் வேறொருவரை நியமிக்க, ஐந்து நீதிபதிகளின் பெயரைப் பரிந்துரைத்து, அவர்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்து நியமிக்குமாறு குஜராத் அரசிற்கு வேண்டுகோள் விடுத்தன. ஆனால், குஜராத் முதல்வர் நரேந்திர மோடியோ அந்த ஐந்து நீதிபதிகளின் பெயரையும் புறக்கணித்துவிட்டு, ஓய்வு பெற்ற குஜராத் உயர்நீதி மன்ற நீதிபதியான அக்சய் மேத்தா என்பவரை, நானாவதி கமிசன் நீதிபதிகளுள் ஒருவராக நியமித்திருக்கிறார்.

நரேந்திர மோடி மாண்புமிகு நீதிபதி அக்சய் மேத்தாவிற்குப் பதிலாக, தனது கையாட்களுள் ஒருவரை நானாவதி கமிசன் 'நீதிபதி'யாக நியமித்திருக்கலாம். ஏனென்றால், மாண்புமிகு நீதிபதி அக்சய் மேத்தாவின் பணிக்கால வரலாறு அப்படிப்பட்டது. குஜராத் முசுலீம் படுகொலை வழக்குகளுள் ஒன்றான நரோடா பாட்டியா வழக்கில், முக்கிய, முதன்மைக் குற்றவாளியான பாபு பஜ்ரங்கிக்குப் பிணை வழங்கியவர்தான் நீதிபதி அக்சய் மேத்தா. அவ்வழக்கில் பிணை வழங்கப்பட்ட பின்னணியைப் புரிந்து கொண்டால்தான், மோடிக்கும் அக்சய் மேத்தாவுக்கும் இருக்கும் நெருக்கத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

அந்தப் பின்னணியை நாம் விவரிப்பதைவிட, பாபு பஜ்ரங்கியின் வார்த்தைகளில் கேட்டால் மிகவும் சுவையாக இருக்கும். தெகல்கா ஆங்கில வார இதழ் குஜராத் முசுலீம் படுகொலை பற்றி நடத்திய இரகசிய விசாரணையில், பாபு பஜ்ரங்கி தனக்குப் பிணை கிடைப்பதற்காக நரேந்திர மோடி பட்ட பாட்டை பெருமிதத்தோடு விளக்கியிருக்கிறான். இதோடு, நரோடா பாட்டியா படுகொலை பற்றியும்; அப்படுகொலை வழக்கை ஊத்தி மூடிவிட குஜராத் போலீசு செய்திருக்கும் சதிகளையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

அகமதாபாத் நகர போலீசின் தலைமை அலுவலகத்தில் இருந்து 4 கி.மீ. தூரத்தில் இருக்கும் பகுதிதான் நரோடா பாட்டியா. கோத்ரா ரயில்

நீதிபதி அக்சய் குமாரின் பெரிய மனதால் பிணையில் வெளியே வந்துவிட்ட இந்து மதவெறியன் பாபு பஜ்ரங்கி.





படிப்பகம்

www.padippakam.com



கலவரத்தின் பொழுது, அகமதாபாத் நகரில் எரித்துக் கொல்லப்பட்ட முசுலீம்களின் சடலங்கள். (கோப்புப்படம்).

நிலையத்தில் சபர்மதி விரைவு வண்டியின் பெட்டிகள் எரிந்து போன மறுநாளே, பாபு பஜ்ரங்கி தலைமை தாங்கி வந்த கும்பலால் நரோடா பாட்டியா தாக்கப்பட்டது. அத்தாக்குதலில் 200 முசுலீம்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்பது பாபு பஜ்ரங்கியே தரும் கணக்கு. ஆனால், அரசோ 105 முசுலீம்கள்தான் கொல்லப்பட்டதாக வழக்குப் பதிவு செய்திருக்கிறது.

அத்தாக்குதல் நடந்த பொழுது அகமதாபாத் நகர போலீசு கமிசனராக இருந்த பி.சி. பாண்டே, சாவு எண்ணிக்கையைக் குறைத்துக் காட்டுவதற்காகவே, அப்பகுதியில் கொல்லப்பட்ட பல முசுலீம்களின் உடல்களை போலீசு லாரியில் அள்ளிப் போட்டுக் கொண்டு போய், நகரத்தின் பல பகுதிகளில் வீசியெறியச் செய்தார். இதற்குப் பரிசாக, பி.சி. பாண்டே குஜராத் போலீசு துறை இயக்குநராகப் பதவி உயர்வு பெற்றார்.

உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட, கண்டதுண்டமாக வெட்டிக் கொல்லப்பட்ட, சுட்டுக் கொல்லப்பட்ட, பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்ட 41 முசுலீம்களின் சடலங்கள் பிரேதப் பரிசோதனை செய்யப்படாமல் புதைக்கப்பட்டன. இதன் மூலம், அகமதாபாத் நகர போலீசே முக்கியமான தடயங்களை அழித்தது.

நரோடா பாட்டியா வழக்கில் சம்பந்தப்பட்ட மற்றொரு குற்றவாளியான அசோக் சிந்தியின் கைபேசி படுகொலை நடந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்டது. அதன் மூலம், முக்கிய குற்றவாளியான பாபு பஜ்ரங்கிக்கும் மற்ற குற்றவாளிகளுக்கும் இடையே நடந்த உரையாடலை விசாரணை செய்யத் தொடங்கினார், கூடுதல் போலீசு கமிசனர் ஏ.கே. சுரோலியா. சட்டப்படி விசாரணை மேற்கொண்டதற்காக ஏ.கே. சுரோலியா இடம் மாற்றம் செய்யப்பட்டார். இப்படி பல்வேறு சாட்சியங்களை அழித்ததோடு, முக்கிய குற்றவாளியான பாபு பஜ்ரங்கியைப் பாதுகாக்கும் பொறுப்பையும் நரேந்திர மோடியே எடுத்துக் கொண்டார்.

''(படுகொலைக்குப் பிறகு) போலீசு கமிசனர் (எனக்கு எதிராக) உத்தரவுகள் பிறப்பித்தார். நான் வீட்டை விட்டு வெளியேறிச் செல்லுமாறு கோரப்பட்டேன். நான் ஓடிப் போனேன். நரேந்திர பாய் என்னை மவுண்ட் அபுவில் உள்ள குஜராத் பவனில் நாலரை மாதங்கள் தங்க வைத்தார்.''

''நரேந்திரபாய் என்னைச் சிறையில் இருந்து வெளியே கொண்டு வந்தார். இதற்காக அவர் நீதிபதிகளை மாற்றிக் கொண்டேயிருந்தார். என்னை சிறையில் இருந்து வெளியே எடுக்க வேண்டும் என்பதற்காகவே இதனைச் செய்தார். இல்லையென்றால், நான் சிறைக்குள்ளேதான் அடைபட்டுக் கிடந்திருப்பேன். தோலாகியாஜி என்ற நீதிபதி, என்னை ஒருமுறையல்ல, நான்கு முறை தூக்கில் போட வேண்டும் எனக் கூறினார். அடுத்து வந்த நீதிபதியோ, என்னைத் தூக்கில் போட வேண்டும் எனக் கூறவில்லையே தவிர... மூன்றாவதாக வேறொரு நீதிபதி வந்தார்... இதற்குள் நாலரை மாதங்கள் சிறையில் கழித்து விட்டேன்... பிறகு, நரேந்திரபாய் எனக்கொரு செய்தி அனுப்பினார்... எப்படியாவது ஒரு வழி கண்டுபிடிப்பேன் என்று... அடுத்ததாக, அக்சய் மேத்தா என்றொரு நீதிபதி நியமிக்கப்பட்டார். அவர் எனது வழக்கு சம்பந்தமான கோப்புகளையோ, வேறெதையோ கண்டு கொள்ளவேயில்லை... (பிணை) வழங்கப்படுகிறது என்று மட்டும்தான் அவர் சொன்னார்... நாங்கள் அனைவரும் வெளியே வந்து விட்டோம்...''

இது, தெகல்கா வார இதழ் நடத்திய இரகசிய விசாரணையில் பாபு பஜ்ரங்கியே அளித்திருக்கும் சாட்சியம். பொதுவாக, விசாரணை கமிசன் என்பதே கண்துடைப்பு நாடகம் என்றுதான் கூறப்படும். ஆனால், நரேந்திர மோடியோ, மிகவும் வெளிப்படையாக, நானாவதி கமிசன் என்பது தனது எடுபிடிகளின் கூடாரம் எனக் காட்டிவிட்டார்.

குஜராத் படுகொலைகள் தொடர்பான வழக்குகள் அனைத்தையும் வேறு மாநிலத்திற்கு மாற்ற வேண்டும் எனக் கோரி, குஜராத் முசுலீம் மக்களும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் நீண்ட சட்டப் போராட்டம் நடத்தியதையடுத்து, நரோடா பாட்டியா படுகொலைகள் உள்ளிட்ட 14 முக்கிய வழக்குகளை மீண்டும் விசாரணை செய்வதற்கு ஒரு சிறப்பு விசாரணை குழுவை அமைக்குமாறு உத்தரவிட்டது, உச்சநீதி மன்றம். இக்குழுவில் நோயல் பார்மர், ஜெயேஷ் மூலியானா என்ற இரு போலீசு அதிகாரிகளும் உறுப்பினர்களாகத் திணிக்கப்பட்டனர். இந்த இருவருமே முசுலீம்களுக்கு எதிராகச் செயல்பட்ட பின்னணி கொண்டவர்கள். குறிப்பாக, நோயல் பார்மர் முசுலீம் என்ற காரணத்தினாலேயே பல பேரை ''தடா''வின் கீழ் கைது செய்து, தனது முசுலீம் வெறுப்புணர்வை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டவர்.

இந்த அதிகாரிகளின் நியமனம், சிறப்பு விசாரணைக் குழு அமைக்கப்பட்ட நோக்கத்தையே குழி தோண்டி புதைத்து விட்டதால்; பாதிக்கப்பட்ட முசுலீம்கள் அந்த அதிகாரிகளை நீக்கக் கோரிப் போராடிய பிறகுதான், அந்த இருவரும் விசாரணைக் குழுவில் இருந்து நீக்கப்பட்டனர். பாதிக்கப்பட்ட முசுலீம்கள் இப்பொழுது நீதிபதி அக்சய் குமாரை நீக்கக் கோரும் இன்னுமொரு போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். போராடாமல், காகிதச் சட்டத்தையும், அதிகாரிகளையும் நம்பிக் கொண்டிருந்தால், தங்களுக்கு நீதி கிடைக்காது என்பதை குஜராத் முசுலீம்கள் உணர்ந்தே இருக்கிறார்கள்.

• அழகு


படிப்பகம்

www.padippakam.com

# உள்ஒதுக்கீடு கோரிக்கையும் தலித் பார்ப்பனியத்தின் எதிர்ப்பும்

ஒன்றின் கீழ் ஒன்றாக அல்லது ஒன்றின் மேல் ஒன்றாகப் பல படி வரிசை சாதிய அடுக்குகளை கொண்ட இந்திய சமூக அமைப்பில், ஒரு குறிப்பிட்ட சாதி சில சாதிகளுக்குக் கீழான சாதியாக இருந்தாலும், வேறு சில சாதிகளுக்கு மேலான சாதியாகவும் இருக்கிறது. அதாவது, பல சாதிகள் கீழ் சாதிகள் என்று வரையறுத்து வைக்கப்பட்டிருந்த போதும், அவற்றிற்கு கீழாகப் பல சாதிகள் வைக்கப்பட்டிருப்பதால் அச்சாதிகள் பெருமைப்பட்டுக் கொள்வதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன.

இந்திய சமூகத்தில் சாதிய அமைப்பு இன்னமும் நீடித்திருப்பதற்கும் கட்டிக் காக்கப்படுவதற்குமான காரணங்களில் இது முக்கியமானதாகும். ஆனால், இங்கே ஒவ்வொரு சாதியும் தனது நிலை குறித்துப் பெருமைப்படுவதற்கு வாய்ப்பு இருக்கும் பொழுது, தற்போது தலித்துகள் என்றழைத்துக் கொள்ளும் தாழ்த்தப்பட்ட பட்டியலின சாதிகளிலேயும் கூட அருந்ததியர்கள் மற்றும் புதிரை வண்ணார் ஆகிய சாதிகள் மட்டும் அத்தகைய வாய்ப்பு இல்லாத அடிமட்டத்தில் இருத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

மொத்த சாதிய அமைப்பில் தாழ்த்தப்பட்ட சாதிகள் (ஒட்டு மொத்த பட்டியலின சாதிகள்) எப்படி மிகக் கீழான சாதிக் கொடுமைகளை அனுபவிக்கிறார்களோ, அதேபோல அவர்களிலும் மிக மிகக் கொடூரமான அவலங்களையும் அடக்கு-ஒடுக்குமுறைகளையும் எதிர்கொள்பவர்களாக அருந்ததிய மற்றும் புதிரை வண்ணார் சாதிகள் உள்ளன. சமூகப் புரட்சியை ஏற்படுத்தி விடும் என்று சொல்லப்பட்ட இடஒதுக்கீடு ஏற்பாடு கிட்டத்தட்ட ஒரு நூறாண்டுகாலம் அமலில் இருந்தும், அது உண்மையான சமூக நீதியை வழங்கவில்லை என்பதற்கு உயிருள்ள வரலாற்றுச் சாட்சியமாக விளங்குபவர்கள் அருந்ததிய மக்களும் புதிரை வண்ணார் மக்களும் ஆவர்.

கல்வி மற்றும் சமூக உரிமைகள் மறுக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும், பின்தங்கிய நிலையில் உள்ள சாதிகளுக்கு முன்னுரிமை வழங்கி தக்க வாய்ப்பளிப்பதற்கானதே இடஒதுக்கீடு என்பது "சமூகநீதி"க்காரர்களின் நியாயவாதம், கல்வி மற்றும் சமூக ரீதியில் பின்தங்கியவர்களை விட, அந்த வகைகளில் முற்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்கள் ஆயினும் பொருளாதார ரீதியில் மிகமிகப் பின்தங்கியவர்களுக்கும் தக்க வாய்ப்பளிக்க வேண்டும் என்பது முற்பட்ட சாதியினர் முன்வைக்கும் எதிர்வாதம். ஆனால், கல்வி ரீதியாகவும், சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் மட்டுமல்ல, வேறு எந்த ரீதியாகவும் உரிமைகள் மறுக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் மிகமிக அடிமட்டத்தில் வாழ்பவர்கள் அருந்ததிய மக்களும் புதிரை வண்ணார் மக்களும் ஆவர்.

சாதிவாரி மக்கள் தொகை கணக்கின்படி அல்லாமல், ஒடுக்கப்பட்ட சாதிகள் அனுபவிக்கும் சாதியக் கொடுமைகளின் அளவுகளின் அடிப்படையில் சமூகநீதி வழங்கப்படுமேயானால், இந்த அருந்ததிய மக்களுக்கும் புதிரை வண்ணார்களுக்கும்தான் முதன்மை முன்னுரிமை அடிப்படையில் மிகக் கூடுதலான இடஒதுக்கீடு வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இடஒதுக்கீடு வகுக்கப்பட்டிருக்கும் முறையோ, இம்மக்களை முற்றாகப் புறக்கணித்ததோடு, இம்மக்களின் முதுகிலேறி இச்சாதிகளுக்கு மேலுள்ள சாதிகள் இடஒதுக்கீட்டின் பலன்களை அறுவடை செய்து கொள்ளும் வகையிலேயே வகுக்கப்பட்டிருக்கின்றன.

அதாவது, தமிழ்நாட்டில் மட்டும் எடுத்துக் கொண்டால், அருந்ததியர் மற்றும் புதிரை வண்ணார் ஆகிய 15 அடிமட்டச் சாதிகளை உள்ளடக்கி மொத்தம் 76 சாதிகளை பட்டியல் சாதிகள் என்று ஒரே வகையாகப் பிரித்து, இந்த அனைத்து சாதிகளுக்குமாகச் சேர்த்து 18 சதவீதம் இடஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த 76 சாதிகளும் தாழ்த்தப்பட்ட தலித் சாதிகள் என்று அறியப்பட்டாலும், இச்சாதிகள் எல்லாம் ஒரே அளவிலான சாதிய சமூகக் கொடுமைகளை அனுபவிப்பவைகள் கிடையாது. கல்வி மற்றும் சமூக ரீதியாக மட்டுமல்ல, பொருளாதார ரீதியாகவும் ஒரே அளவில் - தன்மையில் பின்தள்ளப்பட்டவர்கள் கிடையாது. 76 பட்டியல் சாதிகளிலேயே தேவேந்திர குல வேளாளர் மற்றும் ஆதிதிராவிடர் போன்ற சாதிகளில் கணிசமானவர்கள் நடுத்தர மற்றும் குத்தகை விவசாய குடும்பத்தி

அருந்ததியர்க்குத் தனி இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக தமிழக அரசு நடத்திய அனைத்துக் கட்சி கலந்தாலோசனைக் கூட்டம்.





படிப்பகம்

www.padippakam.com

னர். ஆனால், அருந்ததிய மற்றும் புதிரை வண்ணார் போன்ற அடிமட்ட சாதிகளில் இத்தகைய பொருளாதார நிலையில் - அதுவும் விதிவிலக்காகவே ஒரு சிலர் உள்ளனர் எனலாம்.



அருந்ததியினருக்கான இயக்கம் ஆதித் தமிழர் பேரவையின் நிறுவனத் தலைவர் இரா. அதியமான்.

கிட்டத்தட்ட ஒரு நூறாண்டு காலமாக இட ஒதுக்கீடு அமலாக்கப்பட்டதன் பலனாக தேவேந்திர குல வேளாளர் மற்றும் ஆதி திராவிட சாதிகளைச் சேர்ந்தவர்களில் பலர் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளாகவும் பொறியாளர்களாகவும் மருத்துவர்களாகவும் பல்கலைக்கழகத் துணைவேந்தர்-பேராசிரியர்களாகவும், உயர்நீதி மன்ற நீதிபதிகளாகவும், அமைச்சர்களாகவும் ஆகியிருக்கின்றனர். ஆனால், அருந்ததிய மற்றும் புதிரை வண்ணார் சாதியைச் சேர்ந்தவர்களில் பட்டதாரி படிப்பை எட்டியவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். இதற்குக் காரணம், இவர்கள் மக்கள் தொகையில் மிகமிகக் குறைந்தவர்கள் என்பதில்லை. மாறாக, அடுக்கு முறை சாதிய அமைப்பில் மிகவும் அடிமட்டத்திற்குத் தள்ளப்பட்ட இவர்கள் கல்வி, சமூக, பொருளாதார உரிமைகள் மறுக்கப்பட்டு, மிக மிகப் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

சமூகத்தின் ஆதிக்க சாதியினருக்கு அடிமைத் தொழில் செய்பவர்களாக இருத்தி வைக்கப்பட்டவர்கள்தாம் பள்ளர், பறையர் மற்றும் அருந்ததிய சாதியினர் என்பதால், பட்டியல் அட்டவணை சாதிகள் என்று இவை வரையறுக்கப்பட்டன. இந்த தாழ்த்தப்பட்ட தலித்துக்களுக்கு அந்த அத்தனை அடிமை வேலைகளையும் செய்வதே புதிரை வண்ணார்களின் வேலை. பிற தாழ்த்தப்பட்ட தலித் சாதியினருக்கு அழுக்குத் துணி துவைத்துக் கொடுப்பது முதல் சவரம் செய்வது, அவர்களின் பிணத்தைக் குளிப்பாட்டுவது வரை அடிமைச் சேவகம் செய்வது புதிரை வண்ணார்களின் சமூகக் கடமையாக்கப்பட்டிருக்கிறது. ''பள்ளப்பய'', ''பறப்பய'', ''சக்கிலியப்பய'' எனச் சாதிப் பெயர்களால் பிற தலித்துக்கள் தாழ்த்தப்படுவது போல ''புதிரப் பய'' என்று இவர்களாலேயே இழிவாக அழைக்கப்படுபவர்கள் புதிரை வண்ணார்கள்.

இவர்களுக்கு அடுத்த மேல் மட்டத்தில் வைக்கப்பட்டிருக்கும் அருந்ததிய மக்களின் நிலையோ ஒப்பீடு ரீதியில்தான் மேலானது; ஆனால் சாதிய அடுக்குகளில் மிக மிகக் கீழானதுதான்.

''ஒரு மனிதன் தன் வயிற்றை சுத்தப்படுத்த மலம் கழிக்க வேண்டியிருக்கிறது. ஆனால், மலத்தை சுத்தப்படுத்தி வயிற்றை நிரப்ப வேண்டிய கொடுமை - இந்த ஜனநாயக நாட்டில்தான் நடந்து கொண்டிருக்கிறது'' என்று துப்புரவுத் தொழிலாளர் குழந்தைகள் மாநாட்டில் அருந்ததியர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் கு.ஜக்கையன் குறிப்பிட்டார். அது உண்மையில் மனசாட்சியுடைய ஒவ்வொரு மனினின் நெஞ்சை அறுக்கும் செய்தியாக உள்ளது. மனித மலத்தைக் கையால் அள்ளி, தலையால் சுமந்து, மலக்குழிக்குள் மூழ்கி உடைப்பு எடுக்கும் துப்புரவுத் தொழிலில் நாடு முழுவதும் பெரும்பான்மையின அருந்ததிய மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

1993-ஆம் ஆண்டு ''கையால் மலம் அள்ளும் முறை மற்றும் உலர் கழிப்பறை கட்ட தடைச்சட்டம்'' மத்திய அரசால் கொண்டு வரப்பட்டது. அதன்படி வீடுகளிலோ, வேறு நிறுவனங்களிலோ எடுப்புக் கழிப்பறை வைத்திருப்பதும் கையால் மலம் அள்ளுவதும் குற்றமாகிறது. மீறினால் 2000 ரூபாய் அபராதமும் ஓராண்டு சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் என்று அச்சட்டம் கூறுகிறது. நாடு முழுவதும் 92 இலட்சம் உலர் கழிப்பறைகளும் 6.76 இலட்சம் பேர் கையால் மலம் அள்ளுவதாகவும் மத்திய அரசே 2005-ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையில் கூறுகிறது. உண்மையில் 13 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள கையால் மலம் அள்ளும் வேலை செய்து வருவதாக சுகாதாரப் பணியாளர் விடுதலை இயக்கம் கூறுகிறது. ஆனாலும், இன்று வரை ஒரு தனிநபர் கூட இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு தண்டிக்கப்படவில்லை.

மனித மலம் அள்ளுவது மட்டுமே அருந்ததியரின் தாழ்ந்த நிலையைக் குறிக்கவில்லை. தூய்மையற்றவை, தீட்டுக்குறியவை என்று சமூகத்தால் கருதப்பட்ட பிற வேலைகளையும் அருந்ததியர்கள் தாம் செய்ய வேண்டும். ஊருக்கு வெளியே, தனிச் சேரிகளில் பிற தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும்படி நிர்பந்திக்கப்பட்டார்கள் என்றால், அதற்கும் வெளியே மேலும் ஒதுக்குப்புறமாக தனிச்சேரிகளில் வாழும்படி அருந்ததியர் உட்பட சில சாதியினர் தள்ளப்பட்டனர். பிற தாழ்த்தப்பட்ட தலித்து சாதிகள் கூட இவர்களை கொள்வினை கொடுப்பினை - மண உறவுகளுக்குத் தகுதியற்றவர்கள் என்று தள்ளி வைத்தார்கள். செத்த மாடுகள்-எருமைகளைப் புதைப்பது, தோல் வேலைகளைச் செய்வது போன்ற தூய்மையற்றவை என்று கருதப்பட்ட வேலைகள் இவர்களுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளன. நகர்ப்புறங்களில் பெரும்பான்மையான அருந்ததிய மக்கள் துப்புரவுப் பணியாளர்களாகவும் கிராமப்புறங்களில் பண்ணை அடிமைகளாகவும், கூலித் தொழிலாளிகளாகவும், எஞ்சியவர்கள் செருப்புத் தைக்கும் தொழிலாளிகளாகவும் வாழ்கின்றனர்.

அருந்ததிய மக்களில் தெலுங்கு பேசும் ஒரு பிரிவினர் நாயக்கர் ஆட்சியில் தமிழகத்தில் குடியேறியவர்கள். கன்னடம் பேசும் மற்றொரு பிரிவினர் திப்பு சுல்தான் ஆட்சிக் காலத்தில் இங்கு குடியேறியவர்கள்; தெலுங்கு பேசும் மற்றும் ஒரு பிரிவினர் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சென்னை மாநகரில் குடியேறி துப்புரவுப் பணியில் ஈடுபட்டுள்ள ஆதி ஆந்திரர்கள். இவர்கள் அனைவரும் மாதாரி அல்லது சக்கிலியர் என்று இழிவாக அழைக்கப்படுபவர்கள்.

செருப்புத் தைப்பது, செத்த எருமை மாட்டு மாமிசங்களை உண்பது, மலம் அள்ளுவது போன்ற துப்புரவுப் பணிகளில் ஈடுபடுவது, ஆதிக்க சாதிகளின் பிணங்களுக்குப் போடும் துணிமணிகள், பாத்திரங்களை எடுத்துப் பயன்படுத்துவது, ஆதிக்க சாதிகளின் பண்டிகைகள் மற்றும் மணவிழா விருந்துகளில் எஞ்சிய உணவை வாங்கி உண்பது போன்ற ஏழ்மை நிலைமையிலேயே இன்னும் பல அருந்ததியக் குடும்பங்கள் உள்ளன.

இவ்வளவு கீழ்நிலையில் உள்ள அருந்ததிய மக்களுக்கு சமூக நீதி வழங்குவதாகக் கூறப்படும் இடஒதுக்கீடு ஏற்பாடு, கடந்த ஒரு நூறாண்டில் எந்த அளவு முன்னுரிமை அளித்திருக்க வேண்டும்? ''தமிழ்நாட்டில் நத்தம் தாலுகாவைச் சேர்ந்தவர் குப்புசாமி என்ற அருந்ததியர் (சக்கிலியர்) சமூகத்தைச் சேர்ந்தவர். 1989-இல் பி.ஏ. படித்து, 1994-இல் பி.எட். படித்து, 1998-இல் எம்.ஏ. படித்து முடித்து

படிப்பகம்

www.padippakam.com

வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தும் 13 ஆண்டுகளாக வேலை கிடைக்கவில்லை. எம்.ஏ., பி.எட். படித்த குப்புசாமி செருப்பு தைத்துப் பிழைப்பு நடத்துகிறார். ஆக, அருந்ததியர் மக்களில் ஒரு சிலர் மிகச் சிரமப்பட்டு, போராடி கல்வி கற்றால் கூட இடஒதுக்கீட்டின்படி இன்றைய சூழலில் வேலை வாய்ப்பு கிடைப்பது கடினம் எனத் தெரிகிறது.'' (பி.சம்பத் எழுதிய ''நாங்கள் வருகிறோம்... அருந்ததியர் வாழ்வும் - விடுதலையும்'', பக்: 17-18)

அருந்ததிய மக்களுக்கு இடஒதுக்கீடு ஏற்பாடு வழங்கியுள்ள சமூக நீதி இதுதான்! கல்வி, சமூகம் மற்றும் பொருளாதார உரிமைகள் மறுக்கப்பட்டு, மிகமிக மோசமாக அடக்கி ஒடுக்கப்பட்டுள்ள அருந்ததிய சாதிகளைச் சேர்ந்தவர்களில் குப்புசாமி அளவு கல்வியில் உயர்நிலைக்கு வருவது விதிவிலக்காகவே நிகழ்கிறது. இந்த நிலைக்கு வந்த பிறகும் கூட தற்போதுள்ள இடஒதுக்கீடு ஏற்பாடு அம்மக்களுக்கு சமூக நீதி வழங்காது என்பதுதான் விதியாக உள்ளது.

இது எப்படி நடந்தது? இதற்கு என்ன காரணம்? தமிழ்நாட்டிலுள்ள அருந்ததியர், புதிரை வண்ணார் ஆகிய 15 அடி மட்ட சாதிகளையும் உள்ளடக்கிய மொத்தம் 76 பட்டியல் சாதிகளுக்கு 18 சதவிகித அளவுக்கு இவ்வளவு காலமும் இடஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. ஆங்கிலேயர் காலத்திலேயே ஏழை மற்றும் நடுத்தர, குத்தகை விவசாயிகளாகவும் கல்வி கற்று இராணுவம், போலீசு மற்றும் பிற அரசு ஊழியர்களாகவும், தேயிலை-காபி தோட்டத் தொழிலாளர்களாகவும், சற்று முன்னேறிய, நிரந்தர ஊதியம் பெற்ற வர்க்கத்தினராக கணிசமான பேர்களைக் கொண்ட தேவேந்திர குல வேளாளர் மற்றும் ஆதிதிராவிடர் போன்ற சாதிகளும் இந்த 76 பட்டியல் சாதிகளில் அடங்குகின்றன. இப்படிப்பட்ட ஒப்பீட்டு ரீதியில் முன்னேறிய சில சாதிகள் தாம் பட்டியல் அட்டவணை சாதிகளுக்கான இடஒதுக்கீட்டின் பலன்களை அடைந்து வந்தன. இந்த 76 பட்டியல் சாதிகள் என்றும் வகைப்படுத்தலுக்குள் அடங்கிய அருந்ததிய மற்றும் புதிரை வண்ணார் ஆகிய 15 அடிமட்ட சாதிகளுக்கு அந்த 18 சதவிகித இடஒதுக்கீட்டின் பலன்கள் போய் சேரவே இல்லை.

தமிழகத்திலுள்ள பிற்பட்ட சாதிகளுக்கான 27 சதவிகித இடஒதுக்கீடு எந்த அளவு அச்சாதிகளுக்குப் போய்ச் சேர்ந்துள்ளது என்பதைக் கண்டறிய 1970-களில் சட்டநாதன் கமிசன் என்ற குழு அமைக்கப்பட்டது. அதன் ஆய்வுப்படி, பிற்பட்ட சாதிகளுக்கான இடஒதுக்கீடு ஏற்பாட்டின் 49 சதவிகித பலன்களை 13 சாதிகள் மட்டுமே அடைந்துள்ளன என்று கண்டறியப்பட்டது. இதனால் பிற்பட்ட சாதிகளுக்கான இடஒதுக்கீட்டின் பலன்கள் சென்றடையாமல் போன சாதிகளை மிகவும் பிற்பட்ட சாதிகள் என்று தனியாக வகைப்படுத்தப்பட்டு, 1980-களின் ஆரம்பத்தில் பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கான இடஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடு செய்யப்பட்டது.



> பிற தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு அடிமைச் சேவகம் செய்வது புதிரை வண்ணார்களின் சமூகக் கடமையாக ஆக்கப்பட்டிருக்கிறது.

சட்டநாதன் கமிசனைப் போன்று ஒரு குழு அமைக்கப்பட்டு, பட்டியல் சாதிகளுக்கான 18 சதவிகித இடஒதுக்கீட்டின் பலன்கள் எந்தெந்த சாதிகளுக்கு எந்தெந்த அளவு போய்ச் சேர்ந்தன, எந்தெந்த சாதிகள் அதிகபட்ச ஆதாயங்களை அடைந்தன, எந்தெந்த சாதிகள் மிகமிகக் குறைந்த ஆதாயங் கூட அடையாமல் இன்னமும் கல்வி, சமூகம், பொருளாதாரம், அரசியலில் மிகமிகப் பின்தங்கிப் போயுள்ளன என்று ஆய்வு செய்யப்பட்டிருந்தால், அருந்ததியர் நந்தம் குப்புசாமியின் நிலை போன்ற அதிர்ச்சியூட்டும் பல உண்மைகள் வெளியாகியிருக்கும்.

ஆனால், இவ்வளவு ஆண்டுகளுக்குப் பிறகு, அருந்ததிய சாதிகளைச் சேர்ந்தவர்களில் சிலர் பல்வேறு அமைப்புகளில் அணிதிரண்டு, பட்டியல் சாதிகளுக்கான இடஒதுக்கீட்டில் மக்கள் விகிதாச்சாரம் அடிப்படையில் தங்கள் சாதிக்கு உள்ஒதுக்கீடு கோரி பல்வேறு வகையில் மன்றாடி வருகின்றனர்.

17 ஆண்டுகளுக்கு முன்பு ம.க.இ.க. முதலிய புரட்சிகர அமைப்புகள் திருவரங்கம் கருவறை நுழைவுப் போராட்டம் நடத்தியபோது, அதை இடது தீவிரவாதம் என்று கண்டித்த போலி மார்க்சிஸ்டுக் கட்சியினர்; வர்க்கப் போராட்டங்கள் நடத்தினாலே போதும் சாதிகள் ஒழிந்து விடும் என்று பார்ப்பனிய மார்க்சியம் பேசிவந்த அக்கட்சியினர் இப்போது தாழ்த்தப்பட்ட மக்களின், ஓட்டுகளைப் பொறுக்கவே இடஒதுக்கீடு ஆதரவு, ஆலய நுழைவு, இரட்டைக் குவளை முறை ஒழிப்பு, அருந்ததிய மக்களின் உள் ஒதுக்கீடு ஆதரவு முதலிய இயக்கங்களை எடுக்கின்றனர். தி.மு.க தலைமையிலான ஆளும் கூட்டணியில் இக்கட்சி பங்கேற்பதால் ஆட்சியாளர்களிடம் உள்ள நெருக்கத்தைப் பயன்படுத்தி அருந்ததிய மக்களுக்குச் சில சலுகைகளைப் பெற்றுத் தர முயலுகின்றது.

முன்பு தாழ்த்தப்பட்டவரை முதல்வராக்குவோம் என்று உறுதிமொழி கொடுத்துவிட்டு, இப்போது அன்புமணியை தனது கட்சி முதல்வர் வேட்பாளராக முன்னிறுத்தும் மருத்துவர் ராமதாசு கூட, அருந்ததியர் உள்ஒதுக்கீட்டை ஆதரிக்கிறார். இன்னும் தேவேந்திர குல வேளாளர்கள் ஓட்டு வங்கியையும், ஆதிதிராவிடர் ஓட்டு வங்கியையும் நம்பி அரசியல் கட்சி நடத்தும் தலித் தலைவர்களின் கட்சிகளைத் தவிர, அனைத்துக் கட்சிகளும் அருந்ததியர்களுக்கான உள்ஒதுக்கீட்டை ஆதரிக்கின்றன.

பட்டியல் சாதிகளிலேயே அடிமட்டத்தில் உள்ள சாதிகளையும் ஒப்பீட்டு ரீதியில் முன்னேறிய சாதிகளையும் தனித்தனியே வகைப்படுத்தி, உள் ஒதுக்கீடு கோரி அடிமட்ட சாதிகள் இயக்கங்கள் நடத்துவதும், இந்த அடிமட்ட சாதிகளின் ஓட்டுச் சீட்டுகளைப் பெறுவதற்காக ஓட்டுக் கட்சிகள் பெரும்பாலும் ஆதரிப்பதும், குறிப்பாக ஆளுங்கட்சியே அக்கோரிக்கையை ஏற்று உள் ஒதுக்கீட்டுக்கான அரசாணை பிறப்பிப்

www.padippakam.com

பதும்; பட்டியல் சாதிகளிலேயே முன்னேறிய சாதிகள் - தலித் பசையடுக்கினர் அல்லது தலித் கிரீமிலேயர் பகுதியினர் இந்த உள்ஒதுக்கீட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதும், கிட்டத்தட்ட ஆந்திராவில் கடந்த சில ஆண்டுகளாக நாம் கண்டுவரும் காட்சியின் மறு அரங்கேற்றமாகத்தான் தமிழ்நாட்டில் நடந்து வருகிறது.

ஆந்திராவில், பட்டியல் சாதிகளுக்கான இடஒதுக்கீட்டின் பலன்களை மிகப் பெரும்பாலும் மாலா சாதியினரே அனுபவித்து வருகிறார்கள், தங்களுக்குரிய பங்கு கிடைக்காமல் தாங்கள் மிகமிகப் பின்தங்கிய நிலையில் இருப்பதாகவும், பட்டியல் சாதிகளை நான்காக வகைப்படுத்தி உள்ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்றும் மாதிகா சாதியினர் பல ஆண்டுகளாகப் போராடினர். மாலா சாதித் தலைவர்கள் தவிர அனைத்துப் பிரிவினரும் மாதிகா சாதியினரின் இக்கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்தனர். முன்பு ஆட்சியிலிருந்த சந்திரபாபு நாயுடு மாதிகாக்களின் கோரிக்கையை ஏற்று அரசாணை பிறப்பித்தார். ஆனால் அது செல்லாதென மாலா சாதித் தலைவர்கள் உச்சநீதி மன்றத்தில் வழக்கு போட்டு தடுத்து விட்டார்கள். ஆந்திராவின் அனைத்துக் கட்சிகளும் ஒருமனதாக ஆந்திரா சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியும் கூட, மாதிகா போன்ற அடிமட்ட பட்டியல் சாதிகளுக்கான உள் ஒதுக்கீடு இன்னமும் கிடைக்கவில்லை.

ஆந்திராவில் மாதிகாக்கள் சமூக நீதிக்கான இயக்கம் பற்றி எழுதிய உஸ்மானியா பல்கலைக்கழகப் பேராசிரியர் முத்தையா, ''பார்ப்பனியம் தலித் இயக்கத்தைத் தோற்றுவித்தது. அதைப் போலவே ஒன்று அல்லது இரண்டு அட்டவணை (பட்டியல்) சாதிகளின் தனியாதிக்கத்தை நம்பும் தலித் பார்ப்பனியம் ஆந்திராவில் (மாதிக்காக்களின்) தண்டோரா இயக்கத்தைத் தோற்றுவித்தது'' என்று குறிப்பிடுகிறார்.

அதேபோலத்தான் தமிழகத்திலும் தங்களுக்கு உள்ஒதுக்கீடு கோரும் அருந்ததியர் இயக்கங்கள், ''தலித்தியம்'', ''தலித் விடுதலை'' என்ற புரட்சி வசனம் பேசும் தலித் பார்ப்பனியத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. தமிழக மனித உரிமைக் கழகத்தின் அரங்க. குணசேகரன் மற்றும் சில அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் முன்னணியாளர்கள் அருந்ததிய சாதிகள் போன்ற அடிமட்ட அட்டவணைச் சாதிகளுக்கான உள்ஒதுக்கீட்டை ஆதரிக்கின்றனர். ஆனால், ஜெயலலிதாவின் பாதந்தாங்கியான குடியரசுக் கட்சியின் ''தலைவர்'' செ.கு. தமிழரசன், புதிய தமிழகம் கிருஷ்ணசாமி போன்ற தலித் தலைவர்கள் உள் ஒதுக்கீட்டை அப்பட்டமாகவும் கடுமையாகவும் எதிர்க்கின்றனர். முன்பு அருந்ததிய மக்களின் உள் ஒதுக்கீட்டை ஒப்புக்கு ஆதரித்த திருமாவளவன், இப்போது பூசி மெழுகி மறைமுகமாக எதிர்க்கிறார். ''தலித்-பிராமண'' கூட்டுக்காக பாடுபடும் எம்.எல்.ஏ. ரவிக்குமாரை சித்தாந்த குருவாகக் கொண்டுள்ள திருமாவளவன், உள்ஒதுக்கீடு விவகாரத்தைப் பின்தள்ளும் வகையில் பொதுவில் அட்டவணை சாதிகளுக்கான இடஒதுக்கீட்டை அமலாக்குவதில் உள்ள குறைபாடுகள், பற்றாக்குறை - பின்னடைவுக் காலியிடங்களை நிரப்புவது, சாதிவாரி கணக்கெடுப்பு, வெள்ளை அறிக்கை போன்ற கோரிக்கைகளுக்கு அழுத்தம் கொடுக்கிறார். இதே கோரிக்கைகளை முன்தள்ளியும், உள்ஒதுக்கீட்டு தலித்துகளைப் பிளவு படுத்திவிடும், அரசியல் சட்டத்துக்கு விரோதமானது என்றும் எதிர்க்கும் தமிழரசன், கிருஷ்ணசாமி போன்றவர்களை எந்த வகையிலும் விமர்சிக்காமல் நழுவிக் கொள்கிறார்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கு உள்ஒதுக்கீடு செய்வதை பிற பிற்படுத்தப்பட்ட சாதியினர் எதிர்ப்பின்றி ஏற்றுக் கொண்டனர். ஆனால் இந்த நாட்டின் சமூக விடுதலைப் புரட்சிக்கு தலித்துகள் தாம் தலைமை தாங்குவர் என்று கூறிக் கொள்ளும் தேவேந்திர குல வேளாளர் மற்றும் ஆதிதிராவிடத் தலித் தலைவர்களுக்கு அருந்ததிய சாதிகளுக்கான உள்ஒதுக்கீட்டை சகித்துக் கொள்ளும் பண்பு கூட இல்லை என்பது வேதனைக்குரியது. அட்டவணை சாதிகளிலேயே அந்தந்தப் பிரிவினரின் ஓட்டு வங்கியை உருவாக்கித் தக்க வைத்துக் கொண்டுள்ள இந்த ''தலித் தலைவர்கள்'' கரடிச் சித்தூர் போன்ற இடங்களில் அருந்ததிய மக்களுக்கு எதிராக மேல்மட்ட அட்டவணை சாதியினர் தாக்குதல் தொடுத்தபோது கூட, தத்தம் சாதிகளின் ஆதிக்கத்தையே ஆதரித்தனர். களத்திலேயே இதுதான் அவர்களின் நிலை என்கிறபோது, அட்டவணை சாதிகளிலேயே ஒரு பசையடுக்கு - கிரீமிலேயர் பகுதியினரின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த தலித் பார்ப்பனர்கள்; உள்ஒதுக்கீடு விவகாரத்தில் வேறு மாதிரி இருக்க மாட்டார்கள் என்பதுதான் உண்மை.

> **“ தேவேந்திர குல வேளாளர் மற்றும் ஆதிதிராவிடத் தலித் தலைவர்களுக்கு அருந்ததிய சாதிகளுக்கான உள்ஒதுக்கீட்டை சகித்துக் கொள்ளும் பண்பு கூட இல்லை. ”**

பொதுவாக இடஒதுக்கீடு ஏற்பாட்டை எதிர்க்காத அதேசமயம், அதன் மீது சில கேள்விகளையும் விமர்சனங்களையும் நாம் எழுப்பியிருந்தோம். நமது நிலையை மேலும் உறுதிப்படுத்துவதாகவே தற்போதைய போக்குகள் அமைந்துள்ளன. நாட்டின் பல ஆயிரம் சாதிகளைத் தற்போது பிற்படுத்தப்பட்டவை, தாழ்த்தப்பட்டவை மற்றும் பழங்குடியினத்தவை என்று மூன்று வகையாகப் பிரித்து ஒவ்வொரு வகைக்கும் இவ்வளவு என்று இடஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் இடஒதுக்கீட்டின் பயன்கள் ஏற்றத்தாழ்வாகப் பகிர்ந்து கொள்ளப்படுவதால், ஒவ்வொரு வகையிலும் மேல்மட்டத்தில் ஒரு பசை அடுக்கு - கிரீமிலேயர் பகுதியாக சில சாதிகளும், கீழ்மட்டத்தில் பின்தங்கிய பகுதியாக சில சாதிகளும் பிளவுபடும் போக்கு தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே போகிறது. இதனால்தான் ஆந்திராவைப் போல, தமிழ்நாட்டில் அருந்ததியர் உள்ஒதுக்கீடு கோரிக்கை, வடக்கிலும் மேற்கிலும் உள்ள குஜ்ஜார் பிரிவு மக்கள் தங்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கும்படி கோருவது போன்ற போராட்டங்கள் வெடிக்கின்றன. மேலும் தலித் பார்ப்பனியத்தைப் போலவே சூத்திரப் பார்ப்பனியமும் தங்கள் ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்ள விழைகின்றது.

பெரியாரும் அம்பேத்கரும் பார்ப்பன எதிர்ப்புப் புரட்சிப் போராளிகளாக சித்தரிக்கப்படுகின்றனர். ஆனால், இந்திய சாதிய ஆதிக்கத்துக்கு சமூகநீதி - சாதி சமத்துவத் தீர்வாக அவர்கள் முன்வைத்த இடஒதுக்கீடு ஏற்பாடு தலித் பார்ப்பனியம், சூத்திர பார்ப்பனியம் என்ற புதிய அவதாரங்களை உருவாக்கியிருக்கிறது.

● ஆர்.கே.

www.padippakam.com

# காசுமீர்:
# புதைக்கப்பட்ட உண்மைகள்

**காசுமீரில், போலீசாரால் கொல்லப்படும் அப்பாவிகள், அடையாளம் தெரியாத வெளிநாட்டுப் பயங்கரவாதிகள்எனப் பெயரிட்டுப் புதைக்கப்படுகின்றனர்.**

பொதுவாக இடுகாடுகளில் எந்தவொரு கல்லறையுமே, புதைக்கப்பட்டவர்களின் பெயர், பிறந்த தேதி, இறந்த தேதியுடன்தான் காணப்படும்; அல்லது அந்தக் கல்லறையில் புதைக்கப்பட்டிருப்பது யார் என்ற விவரமாவது உறவினர்களுக்குத் தெரிந்திருக்கும். ஆனால், ஆயிரக்கணக்கான பிணங்கள் வெறுமனே எண்களை மட்டும் அடையாளமாகக் கொண்டு புதைக்கப்பட்டு வரும் கொடுமை காஷ்மீரில் நடந்து வருகிறது.

காஷ்மீரின் குப்வாரா மாவட்டத்தின் ரெகிபோரா கிராமத்தின் இடுகாட்டில்தான் இவ்வாறு எண்கள் மட்டுமே கல்லறைகளின் அடையாளமாக உள்ளன. கல்லறைகளில் புதைக்கப்பட்டிருப்பது யார் யார் என்பது அந்தக் கிராமத்தில் இருப்பவர்களுக்கோ தெரியாது. 'தியாகிகளின் கல்லறை' என்று அழைக்கப்படும் இந்த இடுகாட்டில் ஜூன் 26, 1995 அன்று நான்கு "எல்லை தாண்டிய பயங்கரவாதிகளின்" பிணங்களைப் போலீசார் புதைக்கக் கொண்டு வந்ததிலிருந்து இது நடைமுறையில் உள்ளது. இன்று வரை ஆயிரக்கணக்கான காஷ்மீரிகள் 'பாகிஸ்தான் பயங்கரவாதிகள்' என்ற பெயரில் இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்டு, இங்கு புதைக்கப்பட்டிருக்கின்றனர்.

"துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்ட பிணங்களே இங்கு வருகின்றன. பெரும்பாலும் அடையாளம் தெரியாதவாறு சிதைந்து போயிருக்கும் அவற்றைப் போலீசு அதிகாரிகளின் ஆணைக்கேற்ப நாங்கள் புதைத்து விடுவோம்" என்கிறார் இக்கல்லறையை நிர்வகிக்கும் குழுவின் தலைவரான முகமது அக்பர் ஷேக். இக்குழு புதைக்கப்படும் பிணங்களைப் புகைப்படமெடுத்து ஆவணமாக்குவதற்கு முயற்சித்தது. ஆனால், இந்த முயற்சி இராணுவத்தால் தடை செய்யப்பட்டது. இறந்து போனவர்களைப் பற்றிய விவரங்கள் குப்வாராவில் உள்ள காவல் நிலையத்தில் இருக்கின்றன என்று தடைக்கான காரணம் கூறப்பட்டது. "யாரேனும் காணாமல் போன தனது உறவினரை தேடிக் கொண்டு குப்வாரா காவல் நிலையத்திற்குச் சென்றால், அவர்கள் புகைப்படங்களைக் காட்டுவார்கள். அடையாளம் கண்டு கொண்டால் அவர்களிடம் கல்லறையின் அடையாள எண் தரப்படும். ஆனால் அங்கு புதைக்கப்பட்டிருப்பதோ, பெரும்பாலும் வெளிநாட்டுப் பயங்கரவாதிகள்தான்" என்கிறார் ஒரு போலீசு அதிகாரி.

ஆனால், காஷ்மீரில் காணாமல் போனவர்களின் பெற்றோர்களோ, யூரி மாவட்டத்தைச் சேர்ந்த 'மறைக்கப்பட்ட உண்மைகள்' எனும் உண்மை கண்டறியும் குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, "இது வடிகட்டிய பொய். அங்கு புதைக்கப்பட்டிருப்பது பயங்கரவாதிகளல்ல. காஷ்மீரில் காணாமல் போனவர்கள்தான்" என்கிறார்கள். யூரியில் மட்டும் இதைப் போன்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட அடையாளம் தெரியாத கல்லறைகள் இருப்பதாக உண்மை கண்டறியும் குழு கூறுகிறது. இந்தத் தகவல் வெளியான பிறகு சிறீநகரில், மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடத் தொடங்கினார்கள். அவர்கள் மீது தடியடி நடத்தியும், கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும் போலீசு கலைத்தது.




**குப்வாரா மாவட்டத்தில் உள்ள ரெகிபோரா இடுகாட்டில் அடையாளம் தெரியாமல் புதைக்கப்பட்டவர்களின் கல்லறை எண்களைக் காட்டும் இடுகாட்டின் நிர்வாகி அப்துல் ரஹ்மான் குஜ்ஜாரி.**

சிறீநகரை ஒட்டியுள்ள கந்தர்பால் மாவட்டத்தில் "வெளிநாட்டுப் பயங்கரவாதிகள்" எனப் புதைக்கப்பட்ட 5 பேரினுடைய பிணங்களைத் தோண்டி எடுத்து விசாரணை செய்தபோது, அவை போலி மோதல்களில் கொல்லப்பட்ட அப்பாவிகளுடைய பிணங்கள் என்ற உண்மை தெரியவந்த போதுதான், 'அடையாளம் தெரியாதவர்களின் கல்லறைகள்' உலகுக்குத் தெரிய வந்தது. இதனையொட்டி ஒரு போலீசு உயரதிகாரியின் மீதும் அவரது ஐந்து சகாக்களின் மீதும் வழக்குத் தொடரப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

www.padippakam.com

காணாமல் போன பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட காஷ்மீரிகள், தங்களுடைய உறவினர்கள், உயிரோடிருக்கிறார்களா, சிறையிலிருக்கிறார்களா என்ற தகவல்கள் எதுவுமே தெரியாமல் மனதளவில் அனுபவித்து வரும் வேதனை சொல்லி மாளாது. அவர்களில் ஒருவர்தான் தாகிரா பேகம். 2002-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பாரமுல்லாவிலுள்ள தனது சொந்த கிராமத்திலிருந்து டில்லிக்கு சென்ற தாகிராவின் கணவர் வீடு திரும்பவேயில்லை. பதறிப் போன தாகிராவின் குடும்பத்தினர், அவரைப் பல இடங்களிலும் தேடியலைந்தனர். காவல் நிலையத்தில் புகார் செய்தனர். அவர் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதாகக் கூறிய போலீசார், மாநிலம் முழுக்க வெவ்வேறு சிறைகளுக்கு அலைக்கழித்தனர். ஆனால் எந்தச் சிறையிலும் அவர் இல்லை. போலீசு விசாரணையில் எந்தத் தகவலுமே கிடைக்காததால், அவரின் பெயர் காணாமல் போனவர்களின் பட்டியலில் சேர்ந்துவிட்டது.

தனது கணவர் உயிரோடிருக்கிறாரா அல்லது இறந்து விட்டாரா என்பதை அறிய முடியாமல் வாழ்ந்து வரும் பெண்களைக் குறிப்பிடுவதற்காக 'அரை விதவை' எனும் வித்தியாசமான சொல் 1990-களில் காஷ்மீரில் உருவானது. தாகிராவைப் போன்ற 'அரை விதவைகள்' காஷ்மீரில் இன்று ஏராளமாய் உள்ளனர்.

கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக காஷ்மீரில் நடைபெற்று வரும் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் 'தீவிரவாதிகள்', 'எல்லை தாண்டிய பயங்கரவாதிகள்' என்ற பெயரில் இந்திய இராணுவத்தாலும் போலீசாலும் தினமும் அங்கு நடத்தப்படும் படுகொலைகள், தேசப் பாதுகாப்பு நடவடிக்கைகளாகச் செய்தித்தாள்களால் சித்தரிக்கப்படுகின்றன. பரிசுப் பணத்திற்காகவும், பாராட்டு, பதவி உயர்வுகளுக்காகவும், பல அப்பாவிப் பொதுமக்களைப் பச்சையாகப் படுகொலை செய்து, அவர்களுக்குத் தீவிரவாத முத்திரை குத்தி வந்த இந்திய இராணுவத்தின் களவாணித்தனங்கள் இதற்கு முன்பே பல சமயங்களில் அம்பலப்பட்டுள்ளன. தொடர்ந்து பச்சைப் படுகொலைகளைச் செய்துவரும் இந்திய இராணுவம், காஷ்மீரையே கல்லறையாக மாற்றிக் கொண்டிருக்கிறது.

● பாவெல்

# குப்பையாகிப் போன வாழ்க்கை

## குப்பையைக் கிளறித் தீனியைத் தேடும் கோழியைப் போல வாழும் சிறுவர்களின் அவலக் கதை.



துள்ளித் திரியும் வயதில் பள்ளிக்குச் சென்றும், ஒத்த வயதினருடன் ஆடிப்பாடியும், கோலி, பம்பரம் விளையாடிக் கொண்டும் இருக்க வேண்டிய சிறுவர்கள் பலரின் இளமை, அவர்களிடம் இருந்து பறிக்கப்பட்டு, அரை சாண் வயிற்றுக்காகக் குப்பை பொறுக்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

சென்னை மாநகர் ஒரு நாளைக்குக் கழித்துத் தள்ளும் 3500 டன் குப்பைகளைத் தாங்கிக் கொண்டு ஊருக்கு வடக்கே கொடுங்கையூரும், தெற்கே பெருங்குடியும் குப்பை மலைகளாய் உயர்ந்து கொண்டே செல்கின்றன. அன்றாடச் சாப்பாட்டுக்காக இந்தக் குப்பைக் குவியலைக் கிளறி, அதில் கிடைக்கும் பிளாஸ்டிக் பாட்டில்கள், உலோகத் துண்டுகளைப் பொறுக்கி வாழும் நிலையில் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் இருக்கின்றனர்.

பெருங்குடியின் குப்பை மலையில் அதிகாலையிலேயே கையில் கோணிப் பையுடன் குப்பையைக் கிளறிக் கொண்டிருக்கும் கண்ணகி எனும் 8 வயதுச் சிறுமியும் குணா போன்ற பதின்வயதுச் சிறுவர்களும் தினமும் இம்மலையினைக் குடைந்தால்தான் அவர்களுக்கு 20 ரூபாயாவது கிடைக்கிறது. பகலில் எப்போதும் இவர்களைப் போலக் குறைந்தது நூறு சிறுவர்களாவது பெருங்குடிக் குப்பை மலையில் கையில் குப்பை கிளறும் குச்சிகளுடன் அலைகிறார்கள்.

உயிருக்கே உலை வைக்கும் மருத்துவமனைக் கழிவுகளான பேண்டேஜ்கள், அழுகிய சதைத் துண்டுகள், தூக்கியெறியப்படும் ஊசிகள், இரசாயனக் கழிவுகள் என எண்ணற்ற அபாயங்களுடன், எப்போதும் புகைந்து கொண்டிருக்கும் குப்பை மேட்டில் இச்சிறார்கள் அலைந்து திரிவதால் கை கால்கள் எல்லாம் ஆறாத புண்களுடனும், தீராத இருமல்களுடனும் இவர்களின் இளமை, மொட்டிலேயே கருகி நிற்கிறது. புகை மூட்டத்தினூடே, குப்பைகளைக் கொட்ட வரும் லாரிகளில் அடிபட்டு மாண்ட சிறுவர்கள் பற்றி எல்லாம் வெளியே தெரிவதே இல்லை.

இதே சிங்காரச் சென்னையில் மேட்டுக்குடிக் குழந்தைகள் சனி, ஞாயிறுகளில் சுகமாய் ஓய்வைக் களிப்பதற்கென்றே மாநகரைச் சுற்றிலும் கேளிக்கைப் பூங்காக்கள், வீடியோ கேம்ஸ் மையங்கள், அமெரிக்க இனிப்புச் சோளத்தை கொறித்தபடி வலம் வர சிட்டி சென்டர், ஸ்பென்சர் பிளாசா என எண்ணற்ற கேளிக்கை மையங்கள் உள்ளன. இக்குழந்தைகள் விளையாடு

www.padippakam.com

வதற்கான விலை உயர்ந்த பொம்மைகளை விற்க அரசே கண்காட்சி நடத்துகிறது. தன் செல்ல மகளிடம், அவளுக்குப் பிடித்த பொம்மையை என்ன விலையென்றாலும் கொடுத்து வாங்கிச் செல்லும் தாய்மார்கள் உள்ளனர்.

ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியை சேப்பாக்கம் மைதானத்தில் கண்டு களிக்க ஆயிரம் ரூபாய் டிக்கெட் வாங்கிச் சென்று ஊளையிட்டு ரசிக்கின்றனர் மேல்தட்டு வர்க்கச் சிறார்கள். சேப்பாக்கத்தில் இருந்து மிகவும் அருகில் உள்ள மெரீனா கடற்கரையில் அதே வயதொத்த சிறார்களோ தங்கள் வயிற்றுப் பாட்டுக்காக பட்டாணி, சுண்டல் விற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

சிங்காரச் சென்னை மட்டுமல்ல, நாடெங்கும் இதே போல மேல்தட்டு வர்க்கக் குழந்தைகள் வாழ்க்கையைச் சுவைத்து வண்ணக் கனவுகளுடன் வாழவும், அதே நேரத்தில் லட்சக்கணக்கான குழந்தைகள், சிறுவர்கள் குப்பை பொறுக்குதல், முறுக்கு சுடுதல், பட்டு நெசவு போன்ற வேலைகளிலும் தீப்பெட்டி, பட்டாசு, கல்குவாரி என உயிருக்கு உத்திரவாதமில்லாத தொழில்களிலும் ஈடுபட்டு இளமையின் பொருள்கூடத் தெரியாமல் வாழவும் பழக்கப்பட்டுள்ளனர்.

14 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் உழைப்பைத் தடை செய்த இந்திய அரசியல் அமைப்பு சட்டம் இயற்றப்பட்டு 56 ஆண்டுகளாகி விட்டன. இதனைக் கடுமையாக அமல்படுத்த 1986-இலேயே சட்டம் ஒன்றும் இயற்றப்பட்டு விட்டது. இருப்பினும், குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகிறது. அரசே ஒப்புக் கொண்டபடி, 2003-இல் தமிழ்நாட்டில் மட்டும் உயிருக்கு ஆபத்தான தொழில்களில் 4397 சிறுவர்களும், சற்றே ஆபத்தான தொழில்களில் 11,667 சிறுவர்களும் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் 9 வயதுக்குக் கீழான குழந்தைகள் மட்டும் 1677. ஆனால் உண்மையில் எண்ணிக்கை பலமடங்காக இருக்கும்.

குழந்தைகளை உழைப்பில் ஈடுபட வைப்பதை சட்டப்படி குற்றம் என்றும் அதற்குச் சிறைத்தண்டனை உண்டென்றும் அறிவிக்கும் அரசு, ஏன் குழந்தைத் தொழிலாளர்கள் உருவாகின்றனர் என்பதைப் பற்றி மூச்சு கூட விடுவதில்லை. சென்னை-பெருங்குடியில் சிறுவர்கள் ஆபத்தான தொழிலான குப்பை பொறுக்குகிறார்கள் என்று ''இந்து'' பத்திரிக்கை செய்தி வெளியிட்டால், அதிகார வர்க்கமோ அவர்களுக்கு ''கை, கால்களுக்கு உறை வழங்க வேண்டும்'' என வக்கிரமாகப் பேசுகிறது.

மறுபுறம், குழந்தை உழைப்பாளர்களை மையமாக வைத்துப் பன்னாட்டு எடுபிடிகள் பெரும் வர்த்தகத்தையே இங்கே நடத்தி வருகின்றனர். அமெரிக்க அரசின் தொழிலாளர் நலத்துறையும் இந்திய அரசும் இணைந்து 'இண்டஸ் குழந்தை தொழிலாளர் ஒழிப்புத் திட்டம்' ஒன்றைத் தமிழ்நாட்டில் நடத்தி வருகின்றன. தமிழ்நாடு அரசும் தனியாகத் 'தேசிய குழந்தை உழைப்

**வேலை தேடி நாடோடியாக சென்னைக்கு வரும் கூலித் தொழிலாளர்களின் குழந்தைகளுக்காகத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளிக்கூடம்: புண்ணுக்குப் புனுகு.**





> **சிறுவர்கள் குப்பை பொறுக்கும் ஆபத்தான தொழிலைச் செய்கிறார்கள் என்றால், அதிகார வர்க்கமோ அவர்களுக்கு ''கை-கால் உறை வழங்குவோம்'' என வக்கிரமாகப் பேசுகிறது.**

பாளர்கள் திட்டம்' எனும் திட்டத்தை நடத்தி வருகின்றது. இத்திட்டத்தின்படி மீட்டெடுக்கப்படும் குழந்தைகள், அருகில் உள்ள சிறப்புப் பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர். அக்குழந்தைகளின் பெற்றோருக்கு இழப்பீடாக உதவித் தொகை வழங்கும் திட்டமும் இதில் அடக்கம். நம் நாட்டு அரசுக்கு குழந்தைகள் மேல் என்னே கருணை என யாரும் வியக்க வேண்டாம். மாதாந்திர உதவித் தொகை எவ்வளவு தெரியுமா? நூறு ரூபாய்! இதை எல்லாம் விட, அத்திட்டத்தில் உள்ள முக்கிய அம்சம் என்ன என்றால், மீட்கப்பட்ட குழந்தை உழைப்பாளர்களின் தாய்மார்களை சுய உதவிக் குழுவாகக் கட்டி, அதனை தனது நலன் சார்ந்த திட்டத்திற்காக உருவாக்கி வருவதுதான். இதுவரை 893 சுய உதவிக் குழுக்கள் இவ்வாறு கட்டப்பட்டுள்ளன.


இன்னும் கணக்கற்ற தன்னார்வக் குழுக்கள் 'குழந்தை உழைப்பில் உருவான பட்டுச் சேலையைப் புறக்கணியுங்கள்' என்றோ, 'பட்டாசு வெடிக்காதீர்கள்' என்றோ கோசம் போட்டு விட்டு பன்னாட்டு வள்ளல்களிடம் கல்லாக் கட்டி வருகின்றன.

கடற்கரையில் சுண்டல் விற்கும் சிறுவர்களுக்கு, ஒரு தன்னார்வ நிறுவனம் நகரும் பள்ளி ஒன்றை நடத்தி வருகின்றது. சுண்டல் விற்பனை முடிந்த பிறகு



படிப்பகம்

www.padippakam.com



சென்னையில் நடந்த இந்தியன் பிரிமீயர் லீக் கிரிக்கெட் போட்டியைக் கண்டுகளித்துக் கூத்தாடும் மேட்டுக்குடி சிறுவர்கள்.

தன்னார்வ நிறுவன வாகனம் ஒன்று வரும். அதன் உள்ளேயே ஒரு மணி நேரம் ஆரம்பக் கல்வி வகுப்புகள் நடத்தப்படும்.

சில தொண்டு நிறுவனங்கள் உழைப்பில் ஈடுபட்டுள்ள சிறார்களை அழைத்துக் கொண்டு சுற்றுலா செல்லும். அண்மையில் இவ்வாறு வேளாங்கண்ணிக்குச் சிறுவர்களை அழைத்துக் கொண்டு போன தொண்டு நிறுவனத்தினர் அங்குள்ள ஒரு விடுதியில் அவர்களைத் தங்க வைத்தனர். மூன்று நாட்கள் அங்கு ''குழந்தைகள் உரிமை பற்றிய விழிப்புணர்வு முகாமை நடத்தினர். அவ்விடுதி உரிமையாளரிடம் 'இந்த 3 நாட்களுக்கு மட்டும் உங்கள் விடுதியில் பணியாற்றும் சிறுவர்களை எங்கள் முகாமிற்கு அனுப்பி வையுங்கள். அதற்கான இழப்பீட்டைத் தந்துவிடுகிறோம்' என அத்தொண்டு நிறுவனங்கள் பேரம் பேசியுள்ளனர். இது தான் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பில் இந்தக் கைக்கூலிகள் காட்டும் அக்கறையின் இலட்சணம்.

இன்னொருபுறம், கடந்த மே நாளன்று டெல்லியில், குப்பை பொறுக்கும் சிறுவர்களை நூற்றுக்கணக்கில் திரட்டி, 'பால விகாஷ்தாரா' என்ற தன்னார்வ நிறுவனம், முழக்க அட்டைகளுடன் பேரணியை நடத்தியுள்ளது. குப்பை பொறுக்குவதும் ஒரு தொழிலாம்! அதை அங்கீகரித்து, அத்தொழிலில் ஈடுபடுவோருக்கு சட்டப்படி மனித உரிமைகளை வழங்க வேண்டும் என்றும்; குப்பை பொறுக்கும் சிறுவர்களுக்குக் கையுறை-காலுறை வழங்குவது, அடையாள அட்டை வழங்குவது, கல்வி - மருத்துவ வசதிகளோடு சேகரிக்கப்பட்ட குப்பைகளைப் பிரிக்க இட வசதியும் செய்து தரவேண்டும் என்று டெல்லி மாநில முதல்வரிடம் கோரிக்கை மனுவையும் அளித்துள்ளது. சிறுவர்கள் குப்பை பொறுக்கும் அவலத்தை ஒழிக்கப் போராடுவதற்குப் பதிலாக, குப்பை பொறுக்குவதையும் ஒரு தொழிலாக அங்கீகரித்து சட்டரீதியாகச் சீர்திருத்தங்களைச் செய்யக் கோருகின்றனர், இக்காரியக் கோமாளிகள்.

இவ்வாறெல்லாம் புண்ணுக்குப் புணுகு போடும் வேலைகளால் குப்பைப் பொறுக்கும் அவலத்தில் இருந்து சிறுவர்களையும் மீட்டு விட முடியுமா?

குழந்தைகள் ஏன் உழைப்பில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்பதன் அடிப்படையைப் புரிந்து கொண்டால்தான், அதை எப்படிக் களைவது என்பதைத் தீர்மானிக்க முடியும்.

சொந்தமாய் நிலம் இருந்தும் விவசாயம் செய்து கட்டுபடி ஆகவில்லை. விவசாயக் கூலிகளுக்கோ வேலை இல்லை. பிழைப்பிற்காக என்ன செய்வது? கள்ளச் சாராயம் விற்பது, திருடுவது போன்ற இழிசெயல்களைச் செய்யாமல் கவுரவமாய் வாழ வேண்டுமானால், இடம் பெயர்ந்துதான் ஆக வேண்டும். ஆகவே, சென்னை போன்ற நகரங்களுக்கு ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அன்றாடம் வந்து குவிகின்றன. விவசாயம் தவிர வேறொன்றும் அறியாத அவர்கள் கிடைத்த எந்த வேலையையாவது செய்து பிழைப்பதைத் தவிர வேறு வழியில்லை.

அவ்வாறு வாழத் தலைப்பட்டவர்களின் பிள்ளைகள் உட்பட அக்கும்பல்களைச் சேர்ந்த வேலை செய்தால்தான் சென்னை போன்ற நகரங்களில் வீட்டு வாடகை கொடுத்து இரண்டு வேளையாவது பசியாற முடியும். இதனால் தான் சிறுவர்கள் பழைய பேப்பர் வாங்குவது, குப்பைக் குழிகளைக் கிளறுவது, பட்டாணி, சுண்டல் விற்பது எனப் பல வேலைகளில் ஈடுபட்டு, துள்ளித் திரியும் இளமைக் காலத்தில் கை-கால்கள் மரத்துப் போகும் வரை உழைக்கிறார்கள். இவ்வாறு வளரும் சிறுவர்கள் உதிரிகளுக்கே உரிய பண்புகளுடன் வளர்கிறார்கள். இளமையிலேயே புகை பிடிப்பது, போதைப் பழக்கம், ஓரினப் புணர்ச்சி என எல்லாக் கேடுகெட்ட செயல்களுக்கும் அடிமை ஆகின்றனர். இதேநிலை தொடருமானால், இவர்கள் மத்தியில் இருந்தே நாளை கிரிமினல்கள் உருவாகி வருவார்கள்.

ஆக, இச்சீர்கேடுகளுக்கெல்லாம் ஆணிவேராய் இருப்பது, விவசாயத்தை ஒட்டு மொத்தமாய் அழித்து அரசு நடைமுறைப்படுத்தி வரும் மறுகாலனியப் பொருளாதாரக் கொள்கை தான். இதனை ஒழிக்காமல் குழந்தை உழைப்பை ஒழிப்போம் என்பது, இல்லாத ஊருக்கு வழிகாட்டுவது போலத் தான்.

• வில்லாளன்



“ குழந்தை உழைப்பாளர்களின் அவலத்தைக் காட்டி பன்னாட்டு நிறுவனங்களிடம் நிதி பெறும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், அதைக் கொண்டு பெரும் வர்த்தகத்தையே இங்கே நடத்தி வருகின்றன. ”

www.padippakam.com

# அக்னி ஏவுகணைப் பரிசோதனை: சாதனையா? வேதனையா?

**விலைவாசியைக் கட்டுப்படுத்தி, இந்திய மக்களுக்கு உணவு பாதுகாப்பைத் தர மறுக்கும் அரசு, நாட்டுப் பாதுகாப்பு பற்றி அலட்டிக் கொள்கிறது.**

இந்திய பாதுகாப்புத் துறை, கடந்த மே-7ஆம் தேதியன்று அக்னி-3 என்ற ஏவுகணையை விண்ணில் ஏவிப் பரிசோதனை நடத்திய முயற்சியில் வெற்றி அடைந்துள்ளது. இதனையடுத்து, அக்னி-3 ஏவுகணை அடுத்த ஆண்டிற்குள் இந்திய இராணுவத்தில் சேர்க்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறது. இந்தியாவிடம் ஏற்கெனவே உள்ள அக்னி-1 மற்றும் அக்னி-2 ஏவுகணைகளைவிட, அக்னி-3 ஏவுகணை அதிகத் தொலைவு- ஏறத்தாழ 3,500 கி.மீ.சுற்றளவில் உள்ள இலக்குகளைச் சென்று தாக்கும் திறன் கொண்டது. இந்த மூன்று வகையான ஏவுகணைகளுமே அணுகுண்டுகளைத் தாங்கிச் செல்லக் கூடியவை. முதலிரண்டு ஏவுகணைகளைக் கொண்டு பாகிஸ்தானின் உள்பகுதிகளைக் கூடத் தாக்க முடியுமென்றால், அக்னி-3 ஏவுகணையோ சீனாவைக் குறி வைக்கிறது.

இந்தியப் பாதுகாப்புத்துறை இந்த வெற்றிக் கொண்டாட்டத்தின் ஊடாக, அடுத்த ஆண்டு இறுதிக்குள் 5,000 கி.மீ. தொலைவில் உள்ள இலக்குகளைத் தாக்கக்கூடிய அக்னி-5 என்ற ஏவுகணையையும்; ஒலியின் வேகத்தைவிட ஐந்து மடங்கு வேகத்தில் செல்லக்கூடிய ''ஹைபர் சோனிக்'' ஏவுகணையையும்; விண்ணில் இருந்து செலுத்தக்கூடிய ''அஸ்த்ரா'' ஏவுகணையையும் பரிசோதனை செய்யப்போவதாக அறிவித்திருக்கிறது. இத்தகைய ஏவுகணைகள், ஒரே சமயத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட அணுகுண்டுகளைச் சுமந்து கொண்டு சென்று, ஒன்றுக்கும் மேற்பட்ட இலக்குகளைத் தாக்கக்கூடிய திறன் கொண்டவை என்று கூறப்படுகிறது.

இதுவொருபுறமிருக்க, எதிரி நாட்டு ஏவுகணைகளை இடைமறித்துத் தாக்கும் ஹைபர்சானிக் ஏவுகணை; பூமியில் இருந்து விண்ணுக்குச் சென்று, அங்குள்ள இலக்கைத் தாக்கும் ஆகாஷ் ஏவுகணை; நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவப்படும் கே-15 சாகரிகா ஏவுகணை எனப் பல்வேறு விதமான பேரழிவு ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்களை கடந்த ஒரு ஆண்டுக்குள் இந்தியப் பாதுகாப்புத் துறை பரிசோதித்துப் பார்த்திருக்கிறது.

இந்தியா இப்படி முண்டா தட்டிக் கொண்டு நிற்பதற்கு எதிர்வினைகள் இல்லாமல் போகுமா? இந்தியா அக்னி-3 ஏவுகணையைப் பரிசோதனை செய்த அதே சமயத்தில், பாகிஸ்தான், இந்தியாவின் உட்பகுதிகளைக் கூடத் தாக்கக்கூடிய திறன் கொண்ட ''ஷஹீன்-2'' என்ற ஏவுகணையை, இரண்டு முறை ஏவிப் பரிசோதனை நடத்தியது. சீனாவோ, ஒன்றுக்கு மேற்பட்ட அணுகுண்டுகளை ஏந்திக் கொண்டு, 8,000 கி.மீ சுற்றளவில் உள்ள பல்வேறு இலக்குகளைத் தாக்கக்கூடிய ஏவுகணைகளையும்; ஒரேயொரு அணுகுண்டை ஏந்திக் கொண்டு 12,000 கி.மீ முதல் 14,000 கி.மீ தொலைவில் உள்ள இலக்குகளைத் தாக்கக்கூடிய ஏவுகணைகளையும் தனது இராணுவத்தில் சேர்க்கப் போவதாக அறிவித்திருக்கிறது.

இந்தியாவும்-பாகிஸ்தானும்; இந்தியாவும்-சீனாவும் அமைதிப் பேச்சுவார்த்தை, பொருளாதார ஒத்துழைப்பு என ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது, இந்த ஆயுதப் போட்டியும், ஆயுதக் குவிப்பும் அந்த நல்லுறவுகளைச் சிதைத்து விடாதா எனச் சிலர் கேட்கலாம்; ஆனால், இந்த நாடுகளோ, ''அணு ஆயுதம் இருந்தால்தான் அமைதியை ஏற்படுத்த முடியும்'' எனக்கூறி,இந்த ஆயுதக் குவிப்பை நியாயப்படுத்துகின்றன.

இந்தியா அணுகுண்டுப் பரிசோதனைகளை நடத்திய பொழுது, அதனை நியாயப்படுத்த ''இதன் மூலம் இந்தியா-பாக். இடையே போர் மூளும் அபாயத்தைக் குறைத்து விட முடியும்; அணு ஆயுதம் கையிலிருந்தால், மரபு வழி ஆயுதங்களை பெருமளவு வாங்க வேண்டிய அவசியம் எழாது; இதன் மூலம், இராணுவச் செலவைக் குறைத்துவிட முடியும்'' என வாதிட்டது. ஆனால், இந்தியா-பாக். இடையே கனன்று கொண்டேயிருக்கும் முறுகல்-மோதல் நிலை, இந்த வாதங்கள் அனைத்தையும் தவிடுபொடியாக்கி விட்டது.

1998-ஆம் ஆண்டு இந்தியாவும் பாகிஸ்தானும் அடுத்தடுத்து அணுகுண்டுப் பரிசோதனைகளை நடத்திய பிறகுதான், அவற்றுக்கிடையே இரண்டு முறை முழு அளவிலான போர் வெடிப்பதற்கான அபாயம் எழுந்தது. 1999-இல் நடந்த கார்கில் சண்டையின் பொழுது, இந்தியாவும், பாகிஸ்தானும் ஒருவர் மீது மற்றொருவர் அணுகுண்டைப் போடப்போவதாக, 13 முறை மிரட்டிக் கொண்டதாக அமெரிக்க உளவு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

2001-இல் இந்திய நாடாளுமன்றம் தாக்கப்பட்டதையடுத்து, இரு நாடுகளும் போர் தொடுப்பதற்காக எல்லைப் புறத்தில் எதிரும் புதிருமாக படைகளையும், ஆயுதங்களையும் நிறுத்தின. எந்த நேரமும் போர் வெடித்து விடலாம் என்ற நிலையில், அப்பொழுது இந்தியப் பிரதமராக இருந்த வாஜ்பாயி, பாக்.மீது அணு ஆயுதங்களைப் போடவும் இந்தியா தயங்காது எனச் சூசகமாக அறிக்கை விடுத்தார். அப்பொழுது பாக். இராணுவத்தின் தளபதியாக இருந்த மிர்ஸா அஸ்லம் பேக், நாங்கள் ஒரு முறையல்ல, இரண்டு முறையல்ல, மூன்று முறை கூட அணு ஆயுதங்களைக் கொண்டு இந்தியாவைத் தாக்குவோம் என்றார். இந்தப் போர்வெறி பிடித்த பேச்சுகள் வெற்று மிரட்டலாகவே முடிந்து போனாலும், அவை, இந்திய-பாக். மக்களிடையே அச்ச உணர்வை ஏற்படுத்தத் தவறவில்லை. இந்தச் சம்பவங்கள் அணு ஆயுதம் மட்டுமே ஒரு நாட்டின் தற்காப்பை உத்தரவாதப்படுத்தி விடாது என்பதையும் நிரூபித்தன.

இந்த ஆண்டிற்கான பட்ஜெட்டில், இந்திய இராணுவத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ஒரு லட்சம் கோடி ரூபாயைத்


படிப்பகம்

www.padippakam.com

தாண்டிவிட்டது. துணை இராணுவப் படைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகளையும் சேர்த்ததால் இராணுவத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ஏறத்தாழ ரூ.1,40,000 கோடி. இது பத்தாண்டுகளுக்கு முன்பு, போக்ரானில் அணுகுண்டு சோதனை நடத்தப்பட்ட பொழுது, இராணுவத்திற்கு செலவிடப்பட்ட தொகையை விட, மூன்று மடங்கு அதிகம்; மைய அரசு, இந்திய நாட்டு மக்களின் கல்விக்காக ஒதுக்கும் தொகையைவிட இராணுவச் செலவு 3.6 மடங்கு அதிகம்; 100 கோடி மக்களின் நலவாழ்வுக்காக ஒதுக்கப்படும் தொகையைவிட 5.6 மடங்கு அதிகம்.

இராணுவத்திற்குச் செலவு செய்வதைக் கணக்குப் பார்த்தால், உள்நாட்டுப் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த முடியாது என்ற வாதம் மூலம், இராணுவ ஒதுக்கீடு நியாயப்படுத்தப்படுகிறது. ஆனால், இராணுவச் செலவை ஆராய நியமிக்கப்பட்ட அருண்சிங் கமிட்டியால் கூட, இப்பூதாகரமான செலவை நியாயப்படுத்த முடியவில்லை. இராணுவச் செலவில் 15 சதவீதத்தைக் குறைக்க வேண்டும் என அக்கமிட்டி அரசுக்குப் பரிந்துரைத்துள்ளது.

காயலாங்கடைக்குப் போக வேண்டிய அமெரிக்காவின் ட்ரென்டன் என்ற போர்க் கப்பலை, பல நூறு கோடி ரூபாய் செலவில் இறக்குமதி செய்யும் அளவிற்கு இராணுவத்தில் ஊதாரித்தனம் தலைவிரித்தாடுகிறது. அதிகாரிகளும்-ஆயுதத் தரகர்களும் சேர்ந்து கொண்டு கமிசன் அடிப்பதற்காகவே தரம் குறைந்த போர்த் தளவாடங்கள்- போஃபர்ஸ் பீரங்கி, இசுரேலின் பாராக் ஏவுகணை போன்றவை- வாங்கப்படுகின்றன. இந்த ஊதாரித்தனமும், ஊழலும் தேசப் பாதுகாப்பு என்ற பெயரில் மூடி மறைக்கப்படுகிறது.

இந்திய அரசு பிப்ரவரி 1994-இல் அக்னி ஏவுகணையைப் பரிசோதிக்கத் தொடங்கிய பொழுது, இந்தியா, தனது அனைத்து ஏவுகணைப் பரிசோதனைகளையும் உடனே நிறுத்த வேண்டும் என அமெரிக்கா கண்டித்தது. அப்பொழுது இந்தியப் பிரதமராக இருந்த நரசிம்மராவ், அமெரிக்காவைச் சமாதானப்படுத்த அந்நாட்டுக்கு ஓடினார். ஆனால் இப்பொழுதோ, அக்னி-3 ஏவுகணைப் பரிசோதனை பற்றி அமெரிக்கா வாய் திறக்க மறுக்கிறது.

அமெரிக்காவின் இந்த மாற்றம், இந்தியா ''வல்லரசாகி'' விட்டதைக் குறிக்கவில்லை. மாறாக அமெரிக்கா, ஆசிய கண்டத்தில் தனது மேலாதிக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்ள ஜப்பான், இசுரேல், பாகிஸ்தான் ஆகிய நாடுகளோடு இந்தியாவையும் பயன்படுத்திக் கொள்ளத் திட்டம் போட்டு வருகிறது. 21-ஆம் நூற்றாண்டுக்கான புதிய உலக ஒழுங்கமைவு என்ற அமெரிக்காவின் மேலாதிக்கத் திட்டம், ஆசியாவில், சீனாவை அமெரிக்காவின் போட்டியாளராகக் குறிப்பிடுகிறது. சீனாவைக் கண்காணிக்க, உருட்டி மிரட்ட இந்தியாவைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது அமெரிக்காவின் கணக்கு.

இந்தத் திட்டத்தின் அடிப்படையில் தான், இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம்; இந்திய - அமெரிக்க இராணுவ ஒப்பந்தம் ஆகியவை போடப்பட்டுள்ளன. 3,500 கி.மீ., 5,000 கி.மீ தாண்டிச் செல்லும் ஏவுகணைகளை இந்தியா தயாரிப்பதை, அமெரிக்கா கண்டுகொள்ளாமல் இருப்பதை இந்தப் பின்னணியில் வைத்துதான் பார்க்க வேண்டும்.

தனது தற்காப்புக்கு அணு குண்டுகளையும் ஏவுகணைகளையும் தயாரித்துக் கொள்ளும் உரிமை இந்தியாவிற்கு உண்டென்றால், மற்ற ஏழை நாடுகளுக்கும் அந்த உரிமை உண்டு. ஆனால், இந்தியாவோ, அமெரிக்காவுடன் சேர்ந்து கொண்டு, ஏழை நாடுகள் அணுசக்தி என வாயைத் திறப்பதற்குக் கூடத் தடை போடுகிறது. சர்வதேச அணுசக்தி முகமையில், ஈரானுக்கு எதிராக இந்தியா வாக்களித்ததை இந்த நாட்டாமைக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

அமெரிக்காவுக்கு அடியாள் வேலை செய்வதன் மூலம், தெற்காசியாவில் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ள முயலுகிறது, இந்தியா. இந்த அமெரிக்க அடிமைத்தனத்தையும், பேட்டை ரௌடித்தனத்தையும் மூடி மறைப்பதற்காகவே, இந்திய அரசு, உள்நாட்டுப் பாதுகாப்பு, பாக்-சீன அச்சுறுத்தல்கள், வல்லரசுக் கனவு போன்றவற்றை ஊதிப்பெருக்கி வருகிறது.




அக்னி-5 ஏவுகணையின் மாதிரியைக் காட்டும் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள்.

விவசாய உற்பத்தி வீழ்ச்சியாலும், விலைவாசி உயர்வாலும் இந்திய நாட்டின் உணவுப் பாதுகாப்பே கேள்விக் குறியாகிவிட்டது. கல்வி தனியார்மயமானதால், அடித்தட்டு மக்களுக்கு அடிப்படை கல்வி கிடைப்பது கூட உத்தரவாதம் இல்லாமல் போய்விட்டது; கடன் வாங்கி படித்து முடித்தாலும், இளைஞர்களின் வேலைவாய்ப்புக்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. பெரும்பாலான இந்திய மக்களுக்கு உணவு, உடை, சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, இருப்பிடம் போன்ற அடிப்படைத் தேவைகள் எதுவுமே கிடைக்காமல், அவர்கள் உத்தரவாதமற்ற வாழ்க்கையை வாழ்ந்து வரும்பொழுது, தேச பாதுகாப்பு என்பதன் பொருள் என்ன? நாடு என்பது நான்கு புறமும் உள்ள எல்லைக் கோடுகள்தானா? அந்த எல்லைக்குள் வாழும் மக்களின் நலன் இல்லையா? பெரும்பாலான மக்களின் வாழ்க்கையோடு விளையாடுவது எல்லைக்கு அப்பால் இருந்து வரும் அச்சுறுத்தலா? இல்லை, இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளா?

● பாலன்


படிப்பகம்

www.padippakam.com

## இந்தியத் தரகு முதலாளிகள்:

# உழைப்பால் உயர்ந்த உத்தமர்களா?

**அரசின் ஒத்துழைப்போடு, பொதுச் சொத்தைக் கொள்ளையடிப்பதன் மூலம்தான் அம்பானியும், டாடாவும் உலகக் கோடீசுவரர்களாக வளர்ச்சி அடைந்திருக்கிறார்கள்.**

இந்தியப் பெருமுதலாளிகள் கோடிகோடியாய்ச் செல்வத்தைக் குவித்து, உலகப் பெருமுதலாளிகளின் தர வரிசையில் முக்கிய இடத்தைப் பிடிக்குமளவுக்கு முன்னேறி விட்டார்கள்; ஆசியாவின் மிகப் பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை நிறுவி அம்பானி சாதனை படைத்துள்ளார்; பிரிட்டனின் எஃகு ஆலையை டாடா கைப்பற்றி விட்டார்; இந்தியப் பெருமுதலாளிகளின் இந்த அபார வளர்ச்சிக்குக் காரணம் தனியார்மயம் - தாராளமயம்; அரசின் தலையீடுகள் - கட்டுப்பாடுகள் இல்லாமலிருந்தால் தனியார் முதலாளிகள் தமது தொழில் திறமையால் பெருமளவு முன்னேறிச் சாதிக்க முடியும்; தொழிலும் வர்த்தகமும் விரிவடைந்து இந்திய நாடு வல்லரசாக ஒளிரும் - இப்படி முதலாளித்துவப் பொருளாதாரவாதிகளும் பத்திரிகைகளும் அரசின் தலையீடற்ற தனியார்மயத்தை வியந்து துதிபாடுகின்றன.

இல்லை; இது வளர்ச்சியில்லை; இது அப்பட்டமான சூறையாடல். பெருமுதலாளிகள் தமது தொழில் திறமையால் இவ்வளவு செல்வத்தை ஈட்டவில்லை. அரசின் தலையீடு -கட்டுப்பாடு இல்லாததால்தான் அவர்களால் இவ்வளவு தூரம் முன்னேற முடிந்துள்ளது என்பது அப்பட்டமான பொய்.

உண்மையில், அரசு தலையிட்டு பொதுச் சொத்துக்களை அடிமாட்டு விலைக்குத் தனியார் முதலாளிகளுக்குத் தாரைவார்த்துக் கொடுத்ததால்தான் அவர்களால் கோடிகோடியாய் செல்வத்தைக் குவிக்க முடிந்துள்ளது. இதுதவிர, அரசு தலையிட்டு இத்தனியார் முதலாளிகளுக்குக் கணக்கற்ற சலுகைகளையும் வரிவிலக்குகளையும் வாரியிறைத்ததால்தான் அவர்களால் கொழுக்க முடிந்தது. இந்த உண்மைகளை நிரூபிக்க மாபெரும் ஆராய்ச்சிகள் தேவையில்லை. 'ஆண்டுதோறும் இந்திய அரசின் தணிக்கை கட்டுப்பாட்டு அதிகாரி வெளியிட்டு வரும் அறிக்கைகளே இந்த உண்மைகளை மெய்ப்பித்துக் காட்டுகின்றன.

• பொதுத்துறை நிறுவனங்களில் அரசுப் பங்குகளை அவற்றின் உண்மை மதிப்பை விடக் குறைந்த விலைக்கு தனியார் முதலாளிகளுக்கு விற்றதன் மூலம் தனியார்மயம் - தாராளமயம் தொடங்கப்பட்ட 1991-92-ஆம் ஆண்டிலேயே அரசுக்கு ஏற்பட்ட இழப்பு ரூ.3,442 கோடிகள். ஆரம்பத்தில், நட்டத்தில் இயங்கும் அரசுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பதாகச் சொல்லி தொடங்கப்பட்ட இக்கொள்ளை, வாஜ்பாயியின் ஆட்சிக் காலத்தில், இலாபமீட்டும் அரசுத்துறை நிறுவனங்களையும் சூறையாடுவதாக மாறியது. பெருமுதலாளித்துவ நிறுவனங்களின் கூட்டமைப்பான சி.ஐ.ஐ. கோரியபடி, பா.ஜ.க. ஆட்சியின் இறுதிக் கட்டத்தில் (2004) அவசர அவசரமாக இலாபத்தில் இயங்கிக் கொண்டிருந்த எண்ணெய் - எரிவாயுக் கழகம் உள்ளிட்ட 6 பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகள் அடிமாட்டு விலைக்கு (ஏறத்தாழ 15,000 கோடிக்கு) விற்கப்பட்டன.



**சொகுசு கார்களின் விற்பனையைத் தூக்கி நிறுத்துவதற்காகவே, அரசு செலவில் துரிதப் போக்குவரத்துப் புறவழிச் சாலைகள் அமைக்கப்படுவதோடு, அச்சாலைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமையும் தனியாருக்குக் கொடுக்கப்படுகிறது.**

• 2000-வது ஆண்டு முதல் 2002-க்குள் பால்கோ, இந்துஸ்தான் துத்தநாக நிறுவனம், வி.எஸ்.என்.எல்; ஐ.பி.சி.எல். உட்பட 9 பொதுத்துறை நிறுவனங்களை அற்ப விலைக்கு பெருமுதலாளிகளிடம் அரசு தாரை வார்த்தது. அவ்வாறு விற்கும்போது அந்நிறுவனங்களின் உண்மையான சொத்து மதிப்பை வேண்டுமென்றே குறைத்து மதிப்பிட்டு,


படிப்பகம்

www.padippakam.com



**ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் - தரகர்களின் வருமானம் படுத்துவிடக் கூடாது என்பதற்காகவே, அரசு வங்கிகள் வீட்டுக் கடன் வழங்குவதில் தாராள மனதுடன் நடந்து கொள்கின்றன.**

போடப்பட்டு, விமான நிலையங்கள், துறைமுகங்கள், இருப்புப் பாதைகள் முதலான துறைகளில் இலாப உத்தர வாதத்துடன் தனியார் முதலாளிகள் நுழைந்துள்ளனர். இத்திட்டங்க ளில்கூட முதலாளிகள் தமது சொந்தப் பணத்தைப் போடப் போவதில்லை. 75 சதவீத நிதியை அவர்கள் வட்டி யில்லாக் கடனாகப் பெறுவதற் கென்றே அரசு ஒரு புதிய நிதிநிறுவ னத்தை உருவாக்கப் போகிறது. இது வும் போதாதென்று, இத்திட்டங்களில் முதலீடு செய்யும் முதலாளிகளுக்கு நீண்டகால வரிவிலக்கு அளிக்கப்பட் டுள்ளது. இத்துறைகள் மட்டுமின்றி, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து ஆகியவற்றிலிருந்தும் விரைவில் அரசு விலகிக் கொண்டு, அவற்றைத் தனியாருக்குக் கையளிக்கவும் 11-வது ஐந்தாண்டுத் திட்டம் தீர்மா னித்துள்ளது.

● இப்படி பொதுத்துறைகளை ஏப்பம் விட்டு கொழுத்துவரும் தனி யார் பெருமுதலாளிகளில் 11 ஆயிரம் பேர் வங்கிகளுக்குத் திருப் பிச் செலுத்தாத வாராக் கடன் மட்டும் 2001-02 கணக்குப்படி ரூ. 40 ஆயிரம் கோடிகள். இக்கடனாளிகளில் ரூ. 5 கோடிக்கு மேல் கடன் வாங்கி ஏய்த்தவர்கள் 1,741 பேர்.

● தரகுப் பெருமுதலாளிகள் அரசுக்குச் செலுத்த வேண் டிய பெருந்தொழில் நிறுவன வரி பாக்கி ரூ. 39 ஆயிரம் கோடி. கலால்வரி, சுங்கவரி, சேவை வரிகளாகச் செலுத்த வேண்டிய பாக்கி மட்டும் ரூ. 20 ஆயிரம் கோடி. இருப்பி னும், இம்மோசடி கும்பலுக்கு அரசு வழங்கியுள்ள வரிச் சலு கைகளோ ரூ. 2.36 லட்சம் கோடிக்கும் மேல்.

● கோடிக்கணக்கான மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அரசுப் பேருந்து - பொதுப் போக்குவரத்துத் துறைகளை ஒழித்துக் கட்ட மானியங்களை வெட்டிவரும் அரசு, அதே சமயம் தனியார் கார் தொழிற்சாலைகளுக்கு எல்லையற்ற சலுகைகளை நமது வரிப்பணத்திலிருந்து வாரியிறைத்து, கார் களைப் பரவலாக்க சேவை செய்து வருகிறது. உதாரணமாக, மும்பையில், கார் வைத்திருப்பவர் வாழ்நாளில் ஒரேயொரு முறை 4% வரி செலுத்தினால் போதும். ஆனால் பொது பேருந்துகள் ஒவ்வொன்றும் ஆண்டுக்கு 17.4% வீதம் வரி கட்ட வேண்டும்.

உள்நாட்டு - வெளிநாட்டு பெரு முதலாளித்துவ நிறுவ னங்களில் உருவாகும் கார்களின் விற்பனையை விரைவு படுத்துவதற்கென்றே, கார் வைத்திருப்பவர்கள் அதை நிறுத்தி வைப்பதற்கான இடவசதியையும் மலிவு விலையில் அரசு ஏற்பாடு செய்து தருகிறது. மும்பை நகரில் ஒரு காரை நிறுத்தி வைப்பதற்கான 23 சதுர மீட்டர் இடத்துக்கு மாதம் ரூ. 600 மட்டும் கட்டணமாகச் செலுத்த மாநகராட்சி ஏற்பாடு செய்து தருகிறது. அதே மும்பையில் காருக்கான இடத்தைவிட குறை வாக, 21 சதுர மீட்டர் பரப்பளவில் குடிசை மாற்று வீடுகளை அரசு கட்டியிருக்கிறது. அத்தகைய வீடுகள் பல ஆண்டுகளா கப் பராமரிப்பின்றிக் கிடக்கும்போது, கார்கள் சாலைகளில் போக்குவரத்து நெரிசலின்றி விரைந்து செல்ல, மக்கள் வரிப்

அதன் மூலம் பல்லாயிரம் கோடிகளை முதலாளிக்கு வாரிக் கொடுத்தது. அரசுத்துறை நிறுவனமான மாடர்ன் புட்ஸ்-ஐ இந்துஸ்தான் லீவர் என்ற பன்னாட்டு ஏகபோக நிறுவனத் துக்கு விற்றதற்குக் காரணம், அதன் விலை மதிப்புள்ள நிலங்க ளைத் தாரை வார்ப்பதற்குத்தான் என்று அரசின் தணிக்கை கட்டுப்பாட்டு அதிகாரியின் அறிக்கையே பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளது.

● தொலைத் தொடர்புத் துறையில் தனியார்மயம் திணிக் கப்பட்டபோது, கொழுத்த இலாபம் தரக்கூடிய நகர்ப்புற சேவையைத் தனியாருக்கும், குறைந்த இலாபம் தரும் கிராமப்புற சேவையை பொதுத்துறைக்கும் அரசு ஒதுக்கியது. கிராமப்புறங்களில் தரைவழித் தொலைத் தொடர்பை உருவாக்கும்போது ஏற்படும் கூடுதல் செலவீனத்தை ஈடு செய்ய 'பொதுச்சேவை பொறுப்பு நிதியை' பி.எஸ்.என்.எல். நிறுவனத்துக்கு வழங்க அரசு உறுதியளித்தது. ஆனாலும் பல ஆண்டுகளாக அந்த நிதி வழங்கப்படாமல், அது ஏறத்தாழ ரூ. 15,000 கோடிக்கும் மேலாக நிலுவையில் உள்ளது. பொதுத்துறை நிறுவனமான பி.எஸ்.என்.எல்.க்கு மறுக்கப் பட்ட அந்த நிதியை தற்போது கிராமப்புறங்களில் செல் போன் சேவையைத் தொடங்கியுள்ள தனியார் தொலைபேசி நிறுவனங்களுக்கு விசுவாசமாக வாரிக் கொடுத்து வருகிறது, இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம்.

● தனியார் மின்சார நிறுவனங்கள், அரசின் மின் பகிர்மா ணத் தொகுப்பில் இணைக்கப்படாமல், தாங்கள் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை கொள்ளை இலாபத்துக்கு விற்றுக் கொள்வதற்கென்றே அரசு, திருத்தப்பட்ட மின்சார சட்டத் தைக் கொண்டு வந்துள்ளது. மேலும், 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 20 லட்சம் கோடி மதிப்பிலான நாட்டின் உள் கட்டுமானப் பணிகளில் ''பொதுத்துறை - தனியார்துறை கூட்டுத் திட்டம்'' மூலம் தனியார் முதலாளிகளின் பகற்கொள் ளைக்கு ஏற்பாடு செய்துள்ளது. இதன்படி, இதுவரை ரூ. 13 லட்சம் கோடி மதிப்பிலான 221 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்


படிப்பகம்

www.padippakam.com

பணத்தை வாரியிறைத்து பல கோடி ரூபாய் செலவில் மேம் பாலங்கள் கட்டப்படுகின்றன. 2005-ஆம் ஆண்டில் மட்டும் டெல்லியில் சராசரியாக ரூ. 40 கோடி செலவில் 50 மேம் பாலங்கள் கட்டப்பட்டன. இவைதவிர, சுற்றுச் சாலைகள், நான்கு வழிச் சாலைகள், ஆறுவழிச் சாலைகள் என ஒவ்வொரு நகரத்திலும் உருவாக்கப்படுகின்றன.

இதுவும் போதாதென கார்களின் நெரிசலற்ற போக்குவரத் துக்காக, தேசிய நெடுஞ்சாலை வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் மூன்றாம் கட்டமாக 80 ஆயிரம் கோடி ரூபாயைக் கொட்ட அரசு தீர்மானித்துள்ளது. மும்பையில் பந்த்ரா - வொர்லி கடல்வழி இணைப்பு விரைவுச்சாலையை ரூ. 1,300 கோடி செலவில் அமைத்து வருகிறது.

● கோடிகோடியாய்க் கொட்டப்படும் இத்தகைய திட்டங் களுக்காக, கார் மற்றும் பிற மோட்டார் வாகனங்கள் வைத்தி ருப்பவர்களிடம் சாலை வரியாக குறைந்தபட்சம் ரூ. 55 ஆயி ரம் அரசு வசூலித்திருக்க வேண்டும். அப்படிச் செய்தால் மோட்டார் வாகன விற்பனை படுத்துவிடும். வாகன உற்பத்தி செய்யும் உள்நாட்டு-வெளிநாட்டு முதலாளிகளுக்கு நட்டம் ஏற்பட்டுவிடும். எனவே, அவர்களின் ஆலோசனைப்படி வாகனம் ஒன்றுக்கு சாலை வரியாக ரூ. 300-500 மட்டுமே அரசு வசூலிக்கிறது.


● கார் மற்றும் மோட்டார் வாகன உற்பத்தி செய்யும் உள் நாட்டு - வெளிநாட்டு முதலாளிகளுக்கு இப்படி மறைமுக மாக கோடிக்கணக்கில் சலுகைகளை வாரியிறைப்பது போதா தென்று, நேரடியாகவும் கோடிகோடியாய் சலுகைகளை அள்ளிக் கொடுக்கிறது. சிறுமுதலாளிகள் உற்பத்தி செய்யும் உள்ளூர் சோப்புக் கட்டிகளுக்கு 16% கலால் வரி விதிக்கும் அரசு, மோட்டார் வாகனங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த 24% வரியை இப்போது 12% ஆகக் குறைத்துவிட்டது. மோட்டார் வாகன உற்பத்திக்கான கச்சாப் பொருட்களை — உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்ய விதிக்கப்படும் சுங்கவரி 5% முதல் 7.5% மட்டுமே! மோட்டார் வாகன உற்பத்தி ஆலை கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கென 150% வரி குறைப்பு சலுகைகள் பெறுகின்றன.

● கார் முதலான மோட்டார் வாகன உற்பத்தித் தொழிலில் ரூ. 500 கோடிக்கு மேல் முதலீடு செய்யும் நிறுவனங்களுக்கு அரசு, முற்றாக வரிவிலக்கு - பொருளாதாரவாதிகளின் மொழியில் வரி விடுமுறை - அளிக்கிறது. ஏற்றுமதி மூலம் கிடைக்கும் இலாபத்துக்கு 100% வரிக் குறைப்பு அளிக்கிறது; புதிதாகத் தொடங்கப்படும் இத்தகைய ஆலைகளுக்கு ஒட்டு மொத்த வருவாய் மீதான வரியில் 30%-ஐ பத்தாண்டுகளுக் குத் தள்ளுபடி செய்கிறது. 'இந்தியாவில் தயாரானது' என்ற முத்திரை இருந்தால்போதும், வெளிநாட்டு நிறுவனங்களுக் கும் கலால் வரிச் சலுகை அளிக்கிறது.

● டாடா தயாரிக்கும் ஒரு லட்ச ரூபாய் ''நானோ'' காருக் காக மே.வங்க போலி கம்யூனிச அரசு, விவசாயிகளிட மிருந்து பிடுங்கப்பட்ட 1000 ஏக்கர் நிலத்தை 90 ஆண்டு களுக்கு மிக அற்பத் தொகைக்கு குத்தகையாகக் கொடுத் துள்ளது. வெறும் ஒரு சதவீத வட்டியில் அம்மாநில அரசு ரூ. 200 கோடியைக் கடனாகக் கொடுத்துள்ளது. (ஆனால் நாம் கடன் வாங்கினால் வங்கிகள் ஏறத்தாழ 10% வட்டியை விதிக்கின்றன) ''நானோ காருக்காக மே.வங்க அரசு டாடா வுக்கு அளித்துள்ள மானியமோ ரூ. 850 கோடி. தொழிற் சாலை நிர்மாணம் உள்ளிட்டு ''நானோ'' காரை உற்பத்தி செய்ய டாடாவுக்கு ஆகும் மொத்த செலவு ஏறத்தாழ ரூ. 1700 கோடி. இதில் 60% அளவுக்கு போலி கம்யூனிச அரசு மானியமாகவும் கடனாகவும் கொடுத்துள்ளது.

● கணினி மென்பொருள் பெருநிறுவனங்கள் அனுப வித்து வரும் சலுகைகளும் மானியங்களும் இதைவிட அதி கம். அந்நிறுவனங்களுக்கு நில ஒதுக்கீட்டில் முன்னுரிமை, முதல் ஐந்தாண்டுகளுக்கு மின்சார கட்டணத்தில் சலுகை, ஏற்றுமதி வரிக்குறைப்பு, தொழில்நுட்பப் பரிமாற்றங்களுக்கு வரிவிலக்கு, மானியங்கள் எனக் கோடிகோடியாய் சலுகை களை அள்ளி இறைக்கிறது அரசு.

இவையெல்லாம் வகை மாதிரிக்குச் சில உதாரணங்கள் தான். இந்தியத் தரகுப் பெருமுதலாளிகளுக்கும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களும் துறைவாரியாக இந்திய அரசு கோடிகோடியாய் வாரியிறைக்கும் சலுகைகளைப் பட்டிய லிடப் பக்கங்கள் போதாது. அரசு தலையிட்டு இம்முதலாளி களுக்கு சலுகைக்கு மேல் சலுகைகளை அள்ளிக் கொடுத்து, பொதுத்துறையை தடையின்றிச் சூறையாட தாராளமாக அனுமதித்துள்ளதால்தான், இம்முதலாளிகள் கொழுத்து 'வளர்ச்சி' அடைந்துள்ளார்களே தவிர, அவர்களது தொழில் திறமையால் அல்ல.



**தொலைக்காட்சி, குளிர்சாதனங்கள் போன்ற நுகர் பொருட்களின் விற்பனையைத் தாங்கிப் பிடிப்பதற்காகவே, நடுத்தர வர்க்கத்துக்கும் வருமான வரிச் சலுகைகள் வழங்கப்படுகின்றன.**

அரசு தலையிட்டு கோடிகோடியாய் சலுகைகளை வாரி யிறைத்து, பொதுத்துறையை தாரை வார்த்துக் கொடுத்ததால் பிரம்மாண்டமான வளர்ச்சி பெற்றுள்ள இப்பெருமுதலாளி கள், சிமெண்ட் விலையைக் கட்டுப்படுத்துவது, தொழிலாளர் உரிமை முதலானவற்றில் அரசு தலையிடக் கூடாது என்று கொழுப்பும் திமிரும் தலைக்கேறி அரசை மிரட்டுகிறார்கள். அவர்களின் ''கோட்'டுப் பையிலுள்ள அரசோ கைகட்டிப் பணிந்து நிற்கிறது. இதுதான் அரசு தலையீடற்ற தனியார்மயத் தின் மகிமை!

● மனோகரன்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

டன் செங்கொடிகளை ஏந்தி, தனியார்மயம்-தாராளமயத்துக்கு எதிரான முழக்கங்களுடன் வர்க்க உணர்வுமிக்கப் பேரணியை நடத்தின. தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் பெருமளவில் திரண்ட மே நாள் பொதுக்கூட்டத்தில் ம.க.இ.க மாநிலச் செயலர் தோழர் மருதையன் ஆற்றிய சிறப்புரையும், ஆன்லைன் வர்த்தகத்தை அம்பலப்படுத்தி சிறுவர்கள் நடத்திய நாடகமும் புரட்சிகர கலைநிகழ்ச்சியும் தனியார்மயம் - தாராளமயத்தைப் போராடி வீழ்த்த சூளுரைப்பதாக அமைந்தன.

மதுரை, சிவகங்கை, விருதுநகர், தேனி மாவட்டங்களில் இயங்கும் இப்புரட்சிகர அமைப்புகள் இணைந்து **மதுரையில்,** மேலமாசி வீதி-வடக்கு மாசி வீதி சந்திப்பிலிருந்து ஜான்சிராணி பூங்கா வரை எழுச்சிமிகு மே நாள் பேரணியை நடத்தின. பொதுக்கூட்டத்தில் சிறப்புரையாற்றிய ம.க.இ.க மாநில இணைச்செயலர் தோழர் காளியப்பன், ம.க.இ.க. மாநிலச் செயற்குழு உறுப்பினர் தோழர் கதிரவன் ஆகியோர் விலைவாசி உயர்வுக்கு காரணமான ஆன்லைன் வர்த்தகத்தைத் தடை செய்யவும், மறுகாலனியாதிக்கத்தை வீழ்த்தவும் உழைக்கும் மக்களைப் போராட அறைகூவினர். ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சிகளும் மதுரை மையம் நாடக இயக்கத்தினரின் நாடகங்களும் போராட்ட உணர்வுக்குப் புதுரத்தம் பாய்ச்சுவதாக அமைந்தன.

திருச்சி, தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களில் இயங்கும் புரட்சிகர அமைப்புகள் இணைந்து **திருச்சியில்,** சத்திரம் பேருந்து நிலையம் அருகே மே நாள் பொதுக்கூட்டத்தை நடத்தின. போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் என்ற மாநகராட்சி ஆணையரின் உத்தரவைக் காட்டி, மே நாள் பேரணிக்கு அனுமதி மறுத்தது, திருச்சி நகரப் போலீசு. இருப்பினும், பல்வேறு பகுதிகளிலிருந்து செங்கொடி-முழக்கத் தட்டிகளுடன் பொதுக்கூட்ட மேடையை நோக்கி தோழர்கள் அணிவகுத்து வந்ததே ஊர்வலம் போல் அமைந்தது. ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்ற இப்பொதுக்கூட்டத்தில், உரையாற்றிய தோழர் பரமானந்தம் (பு.மா.இ.மு), அனைத்துத் தரைக்கடை வியாபாரிகள் சங்கத் தலைவர் தோழர் சேகர், மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளரான வழக்குரைஞர் ராஜு ஆகியோர் விலைவாசி உயர்வுக்குக் காரணமான தனியார்மய - தாராளமயக் கொள்கைகளையும் ஓட்டுப் பொறுக்கிகளையும் வீழ்த்த அறைகூவினர். இளந்தோழர்களால் நடத்தப்பட்ட புரட்சிகர கலைநிகழ்ச்சி, உழைக்கும் மக்களின் போராட்டத் திசைவழியைக் காட்டி, பெருத்த வரவேற்பைப் பெற்றது.

சென்னை, வேலூர், திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் இயங்கி வரும் புரட்சிகர அமைப்புகள் இணைந்து, **சென்னை**-மணலியில் தொழிலாளர் குடியிருப்புப் பகுதியிலிருந்து மார்க்கெட் வரை செங்கொடிகள் பட்டொளி வீசிப் பறக்க, எழுச்சிமிகு முழக்கங்களோடு மே நாள் பேரணியை நடத்தின. பின்னர் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பு.ஜ.தொ.மு. பொதுச்செயலாளர் தோழர் சுப.தங்கராசு, பெண்கள் விடுதலை முன்னணியின் தோழர் உஷா ஆகியோர் ஆற்றிய சிறப்புரைகள், தனியார்மயம் - தாராளமயத்துக்கு எதிரான போராட்ட அரசியலை மக்களின் நெஞ்சங்களில் தீக்கனலாக மூட்டின. பு.மா.இ.மு. கலைக் குழுவும் வேலூர் ம.க.இ.க. பெண் தோழர்களும் இணைந்து நடத்திய கலைநிகழ்ச்சி, மறுகாலனியாதிக்கத்துக்கு எதிரான பிரச்சார இடிமுழக்கமாக அமைந்தன.

—பு.ஜ.செய்தியாளர்கள்



திருப்பூரில்...


இப்போது விற்பனையில்...




தில்லைப் போராட்டம்

**வெற்றிவிழா உரைகள்**

2008 மார்ச் 2-ஆம் நாளன்று தில்லை நடராசன் கோவிலில் பார்ப்பன தீட்சிதக் கும்பலின் ஆதிக்கத்தை வீழ்த்தி, சிற்றம்பல மேடையில் தமிழ் ஒலித்த வெற்றியைத் தொடர்ந்து, மார்ச் 29 அன்று சிதம்பரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், திரு. வி.வி.சாமிநாதன் (முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர்), பேராசிரியர் பெரியார்தாசன், திரு. வேல்முருகன் (பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர்), தோழர் மருதையன் (பொதுச்செயலர், ம.க.இ.க) ஆகியோர் ஆற்றிய உரைகளின் தொகுப்பு.

வெளியீடு: **மனித உரிமைப் பாதுகாப்பு மையம் (HRPC),**
**கடலூர் மாவட்டம்.**

**ஒலிக் குறுந்தகடு விலை: ரூ.30/- (அஞ்சல் செலவு தனி).**

**கிடைக்குமிடங்கள்:**

**கீழைக்காற்று வெளியீட்டகம்,**
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை,
சென்னை-600 002.
தொலைபேசி: 044-2841 2367

**புதிய கலாச்சாரம்,**
16, முல்லை நகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை.
அசோக் நகர், சென்னை-600 083.
தொலைபேசி: 044-2371 8706



படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/06-08 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

# பெண்களைப் பலி கேட்கும் சாதி கௌரவம்



ஜாட் சாதியின் கௌரவத்துக்குப் பலியிடப்பட்ட சுனிதா-ஜஸ்பிர் தம்பதியினரின் சடலங்களை வேடிக்கை பார்க்கும் பல்லா கிராம மக்கள். (உள்படம்) பெற்ற தந்தை - உடன்பிறந்த சகோதரர்களால் கொல்லப்பட்ட சுனிதா.

கடந்த மே மாதத்தில் ஒருநாள், அரியானா மாநிலம்-பல்லா கிராமத்தைச் சேர்ந்த சுனிதா-ஜஸ்பிர் என்ற இளம் தம்பதியினர் மிகக் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டு, அவர்களது சடலங்கள் சுனிதாவின் பெற்றோர் வீட்டின் முன்பு வீசியெறியப்பட்டிருந்தன. அக்கிராமத்தினர் இந்த இரட்டைக் கொலையைக் கண்டு அதிர்ச்சி அடையவில்லை; மாறாக, ஜாட் சாதியின் கௌரவம் காப்பாற்றப்பட்டுவிட்டதாகப் பெருமைப்பட்டுக் கொண்டார்கள். கொலைகாரர்கள் தங்கள் சாதி (ஜாட்) தங்களைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கையில் போலீசிடம் சரண் அடைந்தார்கள்.

பல்லா கிராமத்தைச் சேர்ந்த ஜாட் சாதியினரால் கதாநாயகனைப் போலக் கொண்டாடப்படும் கொலைகாரர்கள் யார் தெரியுமா? சுனிதாவின் தந்தையும், சகோதரர்களும்தான்! சுனிதா, சாதிக் கட்டுப்பாட்டை மீறி, வீட்டைவிட்டு வெளியேறி, தான் விரும்பிய ஜஸ்பிரை மணம் புரிந்து கொண்டார். அந்தக் கலகத்திற்குக் கொடுக்கப்பட்ட தண்டனைதான், இந்த இரட்டைக் கொலை.

இது விதிவிலக்கான சம்பவம் அல்ல. ஜாட் சாதி கட்டுப்பாட்டை மீறி, காதல் மணம் புரிந்து கொள்ளும் தம்பதியினரைக் கொன்று, ஜாட் சாதியின் கௌரவத்தைக் காப்பாற்றும் காட்டுமிராண்டித்தனம் அரியானாவில் தீப் போல பரவி வருகிறது. அரசியல் கட்சிகள், அதிகார வர்க்கம் என அரசின் கட்டுமானங்கள் அனைத்திலும் ஜாட் சாதித் திமிர் நிறைந்து இருப்பதால், இந்தக் கொலைகள் குற்றமாகக் கருதப்படுவதில்லை. அம்மாநில முதலமைச்சரே, "நாங்கள் எங்கள் மக்களின் சமூகப் பழக்க வழக்கங்களில் தலையிடுவதில்லை" எனக் கூறி, இக்கொலைகளுக்கு வக்காலத்து வாங்கி வருகிறார்.

சாதிக் கட்டுமானத்தின் முன் இந்தியக் 'குடியரசு' தோற்றுப் போய்விட்டது என்பதற்கு இக்கொலைகள் இன்னுமொரு எடுத்துக்காட்டு. இச்சாதிய பிற்போக்குத்தனத்தை அல்லது இந்து-இந்தியப் பண்பாட்டை ஒழித்துக் கட்டாமல், நவீன இந்தியா, ஜனநாயக இந்தியா எனப் பேசுவதெல்லாம் பெரும் மோசடிதான்! •

படிப்பகம்